ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. | 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, | 1—12 |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, | 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஹு வைகாசி-மீ 16-உ (29—5—1932) | மலர் 5.




தாதுபுஷ்டிக்கு
பழநி சி. எம். சாமி
**மன்மத குளிகை**
யை உபயோகியுங்கள்.

நீங்கள் என்றும் எதிர்பாராத ஆனந்தமும், மன உறுதியும், தேகவலிமையும், இல்லற சுகமும் அடைவீர்கள்.
புட்டி 1க்கு ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

பழநி சி. எம். சாமி
**குருதாம்பர பஸ்பம்**
சகல வியாதிக்கும் கைகண்டது.

தீராத திமிர், குஷ்டம், சூலை, மதமதப்பு, தடிப்பு பத்து, கிரந்தி; ஆராத குழிப்புண், குறை நோய், ரணங்கள் முதலிய சகல வியாதிகளும் கண்டிப்பாய் தீரும். 50 வேளை பஸ்பம் விலை ரூ. 25. 25 வேளை 12-8-0. ஏழைகளுக்கு பாதிவிலை.
ஏராளமான சற்சாட்சிகளை கேட்லாக்கில் பார்க்கலாம்.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால் பழனி. S. I.

தாது புஷ்டிக்கு
**“கெய்ரோடைன்”**
சாப்பிடுங்கள்.

இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது. நபும்சகர்களுக்கும் அளவு மீறிய தாதுபுஷ்டி தரும். உண்மையான நற்சாட்சிகளடங்கிய பெரிய புத்தகம் இனாமாக அனுப்புகிறோம். விலாசம்:
ஆர். எஸ். பதி அன்கோ (ரிஜிஸ்டர்டு) மதுரை.

ஆனந்தரின்
இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)
பற்களைப்பளிங்கு போலாக்கும். எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.




தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி,
சென்னை.




**புதுவை முரசு**

ஆசிரியர்:-
அ. பொன்னம்பலனார்,
அவர்கள்.

24 பக்கங்களோடு அழகிய முறையில் திங்கட்கிழமைதோறும் வெளிவரும் சுயமரியாதைச் செந்தமிழ் வாரப் பத்திரிகை. வருட சந்தா ரூ. 3. வெளிநாடு ரூ. 5. மாதிரிபிரதி இனம்!

மானேஜர்,
“புதுவை முரசு”
புதுச்சேரி (F. இந்தியா)

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | இயற்கைமதம் ... | 0—8—0 |
| 2. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 3. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 4. | பகுத்தறிவேவிடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ... | 0—6—0 |
| 5. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 6. | ஆராய்ச்சி அணிகலம் ... | 0—12—0 |
| 7. | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—0 |
| 8. | மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... | 2—0—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. | 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் | ரூ. | 4—0—0 |

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**
ஈரோடு.

---

# Read.
## *The 'Citizen'*
**and become a True Citizen.**

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—

The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

---

## சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

---

## சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

### 'தமிழன்'
வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: ஜி, அப்பாதுரையார்,
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P. O.
கோலார் தங்கவயல் (S. I.)

### முன்னேற்றம்.

வாரப்பதிப்பு.
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0
ஆசிரியர்:- கோ. சாரங்கபாணி.
விலாசம்:—
மானேஜர்: "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்.

### "போர் முரசு"

வாரப்பதிப்பு.
ஆசிரியர் ச. ம. சி- பரமசிவம்
தனிப்பிரதி காலணு.
வருட சந்தா ரூ. 1—8—0.
"போர் முரசு"
19, பெரிய செட்டி தெரு,
உறையூர்—திருச்சி.

### "சமதர்மம்"

சுயமரியாதை மாதப் பத்திரிகை.
ஆசிரியர்:— ஆர். ராஜகோபாலன்
வருடசந்தா உள்நாடு 1—0—0.
,, வெளிநாடு 1—8—0.
மானேஜர்,
சமதர்மம் ஆபீஸ்,
2:30-30வது வீதி ரெங்கூன்.

---

## அச்சாபீஸ் மிஷின் விற்பனை.

நமது ஆபீசுக்கு பெரிய மிஷின்கள் வரவழைத்து விட்டபடியால் தற்காலம் நல்ல கண்டிஷனில் மிக சுத்தமாக வேலை செய்து கொண்டிருக்கும் அடியில்கண்ட மிஷின்களை விற்று விடப்படும்.

டபுள் கிரவுன் சிலிண்டர் மிஷின் 1,
டிம்மி சிலிண்டர் மிஷின் 1.

உபயோகப் படுத்தப்பட்டு நல்ல நிலைமையிலுள்ள இங்கிலீஷ், தமிழ் போஸ்டர் டைப்கள்; பல ரகங்கள்.

நேரில் வந்து பார்த்து முடித்துக்கொள்ளலாம். மானேஜர்.

**குமரன் பிரஸ் காஞ்சீபுரம்.**

---

LEPROSY, LEUCODERMA PATCHES SYPHILITIC ERUPTIONS, ECZEMA, etc.

No Matter Hereditary or self-acquired. No risk of injection. Cured absolutely. For particulars please write with detailed descriptions of the disease in English.

Post Box No. 11413,
Calcutta.

---

## தக்ளி ஊர்வலங்கள் எங்கே?
## உப்புக்குவியல்கள் எங்கே?

---

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனர் அவர்களியற்றிய

### மாதர் சுதந்திரம் அல்லது
# பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணு 8. (எட்டு)

கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு,
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

# Self Mortification,

# உடலை வருத்திக்கொள்ளல்.

## உடல் முழுமையும் ஊசிகளை குத்திக்கொள்ளல். தேங்காய் விழாமற்படிக்கு அடிதண்டமிடல். நெருப்பு மிதித்தல்.

### கோலாலம்பூர் நிருபருக்கு விடை.

—:0:—

[தோழர் M. சிங்காரவேலு B. A., B. L.,]

கோலாலம்பூரிலிருந்து (Malay States) ஒரு நண்பர் நமக்கு எழுதிய கடிதத்தில், தான் "குடி அரசில்", "கடவுளும் பிரபஞ்சமும்" என்ற கட்டுரைகளைப் படித்து வந்ததாகவும், அதனுடன் நமது தோழர் குருசாமியின் கட்டுரையாகிய "கத்தோலிக்க குரு" என்னும் மகுடமிட்டு எழுதியுள்ளதைப்படித்து வந்ததில், தனக்கு கடவுள், மதம், புராண இதிகாசங்களின் நம்பிக்கை இழந்ததாகவும், ஆனால், தைப்பூசத் திருவிழாவன்று சில சம்பவங்களைப்பார்த்து, திடுக்கிட்டதாகவும், எழுதி அந்த சம்பவங்களின் காரண காரியத்தை தான் தெரிந்து கொள்ள வேண்டி அந்த சம்பவங்கள் எவ்விதம் நிகழ்கின்றன? ஏதோ சக்தி என்று ஒன்று இருந்து கொண்டு அவைகளை நடத்துகின்றனவா? என்று கேட்டு, இவ்வித சம்பவங்களின் கருத்தை விளக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றார்.

நமது நிருபர் கூறும் இந்த அற்பச் செயல்கள், இன்றல்ல, அன்றல்ல, என்றும், அறியாமை மேலிட்டிருக்கும் நாடுகளில், சாதாரணமாகக் காணலாம். மிகுதியாக நமது இந்திய நாட்டில் இச்செயல்களைக் காட்டிக்கொண்டு சீவித்துவரும் மனிதர் அநந்தமுளர். செடில்குத்தியாடல், நெருப்பு மிதித்தல், அடிதண்டம் போடல், தாடைகளில் ஊசி பொத்திக்கொள்ளல், ஒண்டி சிகரங்களின் மேல் ஏறி அதிலிருந்து பல்டி அடித்தல், நெருப்பு, திகிதிகி என்று எரியும்மத்தியில் குதித்தல், தண்ணீரில் மூழ்குதல், தண்ணீரில்மிதந்துகிடத்தல், 1½படி அரிசி சாதத்தை ஒருவனே விழுங்குதல், பாஷாணத்தை அருந்துதல், கற்களையோ, கண்ணாடித்துண்டுகளையோ, ஊசி, ஆணிகளையோ, நரநரவென்று கடித்தல், தேக முழுமையும் சாம்பலைப் பூசிக்கொள்ளல், ஒரு தினைவு அரிசி ஒன்றைத்தின்று உயிருடன் வாழ்தல், பல நாள் உண்ணாமலே விரதம் இருத்தல், நாய் போல் குலைத்தல், கழுதை போல் கத்தல், சிங்கம் போல் உறுமுதல், இவைபோன்ற செயல்கள் நமது நாட்டில் பல இடங்களில் நிகழ்வதைப் பார்க்கலாம். கிராமங்களில் மிகுதியாகவும் காணலாம். இவைகள் யாவும், சீவன உபாயத்திற்காகிலும் பாமர மக்களை ஆச்சரியமுறச்செய்து, கீர்த்தி பெறுவதற்காகிலும், நடந்து வரும் செயல்கள் என அறிக.

இத்தியாதி செயல்கள்பாமரமக்கள்கூடும் இடங்களில் மிகுதியும் காணலாம். நமது நண்பரைக் கேட்கின்றேன், இச்செயல்கள், தெய்வச் செயல்களாயின், ஏன் விசாரணை மிகுந்த Paris, London, Chicago, New York, Tokio நகரங்களில் நடைபெறுவதில்லை? ஏனெனில் அவ்விடங்களில், தெளிவுமிகுந்திருத்தலால், இந்த பித்தலாட்டங்களைக் கண்டு நகைப்பார்கள்; அல்லது அருவருப்பார்கள். இன்னும் இந்த அகோரச்செயல்களையும், மெய்வருந்தும் காரியங்களையும், சமூக வாழ்க்கைக்கு விரோதமென அச்செயல்களின் கர்த்தாக்களைத் தண்டித்தும் விடுவார்கள். நமது கீழ் நாடுகளில் (Eastern Countries) அறியாமை மிகுந்து இருப்பதால், அவ்வூர் அரசுகளும் பராமுகமாகவே இருந்து வருகின்றனர். ஒரு திருஷ்டாந்தம் எடுத்துக்கொள்ளுவோம், "லடபட பண்டே" என்று இரும்புத்துண்டுகளை தட்டிக்கொண்டு, தேக முழுமையும், ரத்தக்களமாக்கிக்கொண்டுவாயின் மூலம் மலத்தையும், எச்சலையும் கக்கிக்கொண்டு, பிச்சை எடுத்துண்பவர்களை, கோயில் குளங்கள் பக்கங்களில் காணலாம். நிர்வாணமாகச் சிலர் சூரியனைப்பார்த்தபடியே நிற்கின்றார்கள். கொடிய வைணவர்கள் பந்தங்களைக் கொளுத்திக்கொண்டு, தேக முழுமையும் அடித்துக்கொள்கின்றார்கள். ஐந்துமுடிசாட்டையால், ரோமன் கத்தோலிய குருக்கள் தங்கள் தேகத்தை, ரத்தம் வீரிட, அடித்துக்கொள்கின்றார்கள். சில பாதிரிகள், இருட்டறையில் இருந்துகொண்டு, கந்தையை உடுத்திக்கொண்டு, சாம்பலை தேக முழுமையும் பூசிக்கொண்டு (in saccloth and ashes) தவம்புரிகின்றனர், முள் பாதரட்சையின் பேரில், சிலர் நடக்கின்றார்கள். இரும்புக்கம்பிகளால் தங்கள் தேகங்களை சூடிட்டுக் கொள்கின்றார்கள். இதைப்போன்ற கொடூர பழக்கங்களை, புத்தர் காலத்தில், அநேக இருடிகள் (ரிஷிகள்) செய்து வந்ததாகத்தெரிகின்றது.

ஒரு தினை அரிசியைதின்பதை முன்னரே குறித்துள்ளோம். நாயைப்போல் நீரை அருந்தும் ரிஷிகள் இருந்தார்களாம்! குழந்தைகளைப்போல், தவழும் ரிஷிகளும் தவம்புரிந்தார்களாம்! ஒத்தைக்காலைத்தூக்கி நின்றார்களாம்! மற்றொரு காலை ஆகாயமார்க்கமாக தூக்கிக்கொண்டு தவம் புரிந்தார்களாம். கைகளைத் தூக்கிக்கொண்டு, கைகளின்சதை அற்று விழும்படி தவஞ்செய்தார்களாம்! இன்றைக்கும், சிற்சில கோயில் பக்கங்களில், இத்தியாதி முனிவர்களை (Ascetics) காணலாம். "பொந்தியோடு கைலாய" மென்ற உயிருடன் சமாதி அடைகின்றவர்கள் ஆங்கிலேய அரசாட்சிக்கு முந்தி இருந்து வந்தார்கள். புருஷன் இறந்ததற்காகத், தன்னுயிரையும் இழப்பதற்குத்தயாராய் இந்த நாட்டில் அநேக பெண்கள் இருந்து வந்தனர். இவ்வித அருவருப்புக்கொண்ட துர்ப்பழக்கங்கள் நமது நாட்டில் அதிகம். இச்செயல்களுக்கு முன்னால், தேங்காயுடன் உருளுவதும், ஊசிகளை பொத்திக்கொள்வதிலும், நெருப்பை மிதிப்பதிலும் என்ன விசேஷமிருக்கின்றது?

சமணர்கள் என்ற ஒரு மதக் கூட்டத்தார் இருக்கின்றார்கள். அவர்களில், ஸ்வேதம்பராஸ், திகம்பராஸ் என்ற இரண்டு வகையுண்டு. இவ்விரு கூட்டத்தாரில், ஒருவர் தேகத்தை ஆடையைக் கொண்டுமூடாமலே இருந்துவருகின்றனர். வெய்யலிலும், குளிரிலும், நிர்வாணமாகவே இருக்கின்றார்கள். உடலை வருத்தும் பழக்கம், புராதன பழக்கம். வேதகாலம்முதல்தொன்றுதொட்டே, இந்த மூட மத பழக்கங்கள் நமது தேசத்தில் இருந்து வருகின்றன. கிர்த்திகை, அமாவாசைகளில், நமது நாட்டார், உபவாசம் இருப்பதும், இந்த துர்ப்பழக்கங்களாலென அறிக.

சிலர் உயிரை வேண்டுமென்றே துறக்கின்றார்கள். இதுவும் ஓர் வித பழக்கந்தான். "சதி" என்று வழங்கும் உடன்கட்டை ஏறுதலும் (Suttee) பழக்கந்தான். இக்கொடிய செய்கைகள் யாவும் தன்னைத்தான் இம்சித்துக்கொள்ளும் பழக்கத்தால், உலகில் உண்டாயின. காட்டு மிராண்டிகள் வாயிலாக வந்த பழக்கங்களில், இவை சில தான் தற்காலங்களில் பழக்கத்தில் வந்திருக்கின்றன. அறிவுதுலங்கத் துலங்க இக்கொடிய செயல்கள் கைவிடப்படும்.

தென்னிந்தியாவில், திருப்பதி என்று ஓர் பிரபல க்ஷேத்திரமொன்றுண்டு. வருஷா வருஷம் அக்கோயிலுக்கு லட்சக்கணக்கான பக்தர்கள், மஞ்சள் வேஷ்டி தரித்து, கோயிலை தரிசிக்கப்போகின்றனர். அவர்களில் சிலர் சென்னையிலிருந்து "அடிதண்டம்" என்று வழங்கும் தரையோடு உருண்டு போகும் பழக்கத்தைப் பார்க்கலாம். சென்னைக்கும்திருப்பதிக்கும் சுமார் 50, 60 மைல் தூரமிருக்கும். நமது நிருபர் கண்ட சிறு தூரம் அடிதண்டம் போட்டுக்கொண்டு போன விஷயம், ஆச்சரியமில்லை. சென்னை தெருக்களில் ஒருவன் தன குழந்தை சமுசாரத்துடன் பட்டப் பகலில் கொதிக்கும் ரோட்டின் பேரில், ஒரு செம்புப் பாத்திரத்தைக் கையிலேந்தி அது விழாமல்படிக்கு அடிதண்டம் போட்டுக்கொண்டு உருண்டு, உருண்டு பிச்சை எடுத்துச் செல்கின்றான். நமது நிருபர் அந்த அகோர வேஷத்தைப் பார்த்தாராமாகில், கையிலேந்திய பாத்திரம் ஏன் விழவில்லை என்று திடுக்கிடுவார் போலும்!

வேதாந்திகள், இத்தியாதி மயக்கத்தைக்குறிக்க "கட்டையில் கள்ளன், பழுதையில் பாம்பு, கிளிஞ்சலில் வெள்ளி" என்ற திருஷ்டாந்தங்களை, காட்டுவதுண்டு. விசாரணையில், கட்டை கட்டையாகவே தோன்றும். அதுபோலவே நமது நிருபர் கண்ட சம்பவங்களை பொறுமையுடன் விசாரித்-

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

# Do we still require caste?

# நமக்கு இன்னும் சாதி வேண்டுமா?

(திருமதி கே. ஆண்டாள் அம்மாள்)

இது புதிய விஷயமல்ல. யாவரும் கேட்டு அலுத்துப் போன விஷயமே. நம் இந்திய நாடானது தொன்று தொட்டு சாதிக் கொடுமையாலும், சமயச் சண்டையாலும் மிகவும் நொந்து நோய் வாய்ப் பட்டு வருந்திக் கொண்டு வந்திருக்கிறது. அவ்வப்போது அறிவுடையோர், சாதிக்கொடுமையையும், சமயச் சூழல்களையும் ஒழிக்க வேண்டு மென்று சொல்லியும், எழுதியும் வந்திருக்கிறார்கள். எழுதிக் கொண்டும் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு நேர் எதிரிடையாக வைதிக மூட்டைகள் பின்னாலேயே, எங்கள் மதம் போச்சு, கடவுள் போச்சு என்று கூப்பாடு போட்டுக் கொண்டே இருக்கிறார்கள். இந்த் மூட்டுக் கட்டைகளால் நம் நாட்டில் நமது முன்னேற்றம் சிறிது தடைப்பட்டுக் கொண்டும் வருகிறது.

இனி இவ்வைதீகர்கள் ஜாதிக்கு ஆதாரமாகக் காட்டுவது மதநூல்களையே; இம்மத நூல்களில் அந்தந்தக்காலத்தில் இருந்த பழக்கவழக்கங்களே சொல்லப் பட்டு இருந்தாலும், அதற்கு மிகுந்த சிறப்பை ஏற்றி வைத்திருக்கிறார்கள். மத நூல்கள் யாவும் கடவுள் தன்மை பொருந்தியதாகவும், கடவுளும் அதன் அவதாரங்களாகிய (Duplicate) கடவுள்களும் நேரில் வந்து உபதேசித்ததாகவும் சொல்லுகிறார்கள்.

இவர்கள் கொள்கையின் படியே போனாலும் எல்லாம் வல்ல கடவுள் ஒருவரை தாழ்த்தியும், ஒருவரை உயர்த்தியும் வைத்து, தன்னால்தாழ்த்தப் பட்டவர்களை எப்பொழுதும் இடை விடாது துன்புறுத்திக் கொண்டிருக்கும்படி சொல்லி இருப்பாரா? ஒருக்காலுஞ் சொல்லியிருக்க மாட்டார். அப்படி சொல்லி இருந்தால், அந்த கடவுளும், அது சொன்னதாகச் சொல்லும் நூலும் வந்த வழியைப் பார்த்துக் கொண்டு போகட்டும்; மக்களுக்குள் பகைமையையும், பொறாமையையும், தாழ்வையும், உயர்வையும் வேற்றுமையையும், கற்பிக்கும் நூல்களுக்கும் அதற்குகாரணமான கடவுள்களுக்கும் இந்தியாவில் இனி வேலை கிடையாது.

நமக்கு தற்காலத்தில் வேண்டுவது ஒற்றுமையான தூய வாழ்க்கை; ஒருவனுடைய நலத்திற்காக பெரும்பான்மையான ஏழை மக்கள் வருந்தாத வாழ்க்கை; நெற்றி வேர்வை நிலத்தில் விழ கடு வெய்யலில் ஒரு நாள் முழுதும் பாடு பட்டு அரை வயிற்றுக் கஞ்சிக்கு வழியில்லாது வருந்தும் ஏழை தீண்டப்படான் என்று சொல்லப்படும் மக்கள் நம்மோடு சம உரிமை பெறக்கூடிய வாழ்க்கையே வேண்டும். இத்தகைய இன்ப வாழ்க்கைக்குத் தடையாக இருக்கின்ற ஜாதியை அடியோடு ஒழித்தல் வேண்டும். நம்முடைய முன்னேற்றத்திற்கும், ஒற்றுமைக்கும் தடையாக இருக்கிற நூல்களும் கடவுள்களும், ஜாதிகளும் நம்மை விட்டு அடியோடு தொலைதல் வேண்டும்.

ஜாதிக்கு அடிப்படையாக வைதீகர்கள் என்ற நூலையோ கடவுளையோ சொன்னாலும் அது நமக்குச் சிறிதும் உடன்பாடு அல்ல. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு அக்காலத்திற்குத் தக்கவாறு, அப்போழுது இருந்தவர்களால் எழுதப் பட்ட விஷயங்கள் தற்காலத்திற்கு பொருத்த முடையதாக இருக்க முடியாது. கண் மூடித்தனமாக கடவுள் சொன்னார், அவர் சந்ததியாராகிய வைதீகர்கள் சொன்னார்களென்று, குரங்குப்பிடியாகப் புத்தகங்களில் எழுதியிருப்பவற்றை நம்ப வேண்டு மென்பது மூடத்தனமேயாகும். நாம் ஒற்றுமையுடன் ஜாதி வேற்றுமை இன்றி வாழ்வதற்கு, மத நூல்களைப் படிக்க வேண்டிய அவசியமும் இல்லை, மத நூல்களில் என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொண்டு போகட்டும். நம்முடைய பகுத்தறிவிற்குப் பொறுத்த முடைய விஷயத்தை எடுத்துக் கொண்டு மற்றதை தள்ளுவதே பொருத்த முடையதாகும்.

இந்தக் கட்டுரையில் அவர்கள் மத நூல்களைக் கொண்டு பிறப்பளவில் ஜாதி இல்லை யென்று எனக்குத் தெரிந்த மட்டில் விளக்குகிறேன்.

வேதத்திலும், உபநிடதங்களிலும், இதிகாசங்களிலும், மிருதிகளிலும், இன்னும் மற்ற மத நூல்களிலும் சாதியைப் பற்றி சொல்லி இருப்பதாலும், சாதி நாட்டில் தொன்று தொட்டே இருந்ததனாலும், அதனை விடாது கைப்பற்றி ஒழுகல் வேண்டு மென்பது வைதிகக் கொள்கை.

ஆகையால் மேற் கூறிய வைதிகக் கொள்கை பொருத்த முடையதா? அல்லவா? சாதிக்கு அடிப்படையாகச் சொல்லப்படும் நூல்களில் சாதி எத்தன்மையது? சாதி தொன்று தொட்டே இருந்தாலும் தற்காலத்தில் பொருளற்று, பகைமைக்கு காரணமாக இருப்பதால் அதை இன்னும் கைப்பற்றத்தான் வேண்டுமா? சாதிக் கொடுமைகள் என்ன? எங்ஙனம் நீக்குதல் இயலும் என்பதைப் பற்றி எனக்குத் தெரிந்த மட்டில் விளக்குகிறேன்.

முதலில் பழைய வேதத்தில் சாதி எத்தன்மைத்து என்று ஆராய்வோம்.

மிகப் பழைய நூலாகிய இருக்கு வேதத்தின் முதல் ஒன்பது மண்டிலங்களிலும் சாதி வேற்றுமையைப் பற்றிய குறிப்பு ஒன்றுமே காணப் படவில்லை என்றும், பிராமணன் என்னுஞ் சொல் வேள்வி வேட்கும் முனிவனையும் பதிகங்கள் பாடும் புலவனையும் குறிக்கின்றதே யல்லாமற் பிற்காலத்தில் வழங்கும் பார்ப்பன வகுப்பினைக் குறிக்க வில்லை என்றும், ஏனைய மூன்று வகுப்பினரின் பெயர்களான க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், என்னும் சொற்களுங்கூட அவ்வொன்பது மண்டிலங்களிலும் காணப்பட வில்லை என்பதும் ஆராய்ச்சியாளர் துணிந்துகண்ட முடிவு. இதனால் அவ்வொன்பது மண்டிலங்களும் எழுதப்பட்டகாலங்களில் மக்கள் எல்லாரும் ஒரே வகுப்பினராயிருந்தனரே யல்லாமல் நால்வேறு வகுப்பினராய் பிரிந்திலரென்பது புலனாகின்றதன்றோ?

இருக்கு வேதத்தின் பத்தாம் மண்டிலத்திலுள்ள புருட சூத்ர மந்திரமானது நால் வகை மக்கட் பிரிவை உணர்த்துகிறது. அங்ஙனம் உணர்த்தியும், இவ்வகுப்பினர் தாழ்ந்தோர், இவ்வகுப்பினர் உயர்ந்தோர் என்னும் வேறுபாடு இல்லாமல் வாழ்க்கைக்கு முதன்மையாக வேண்டப்படும் நால் வகைத்தொழில்களைச் செய்து கொண்டு உண்ணல் கலத்தல்களில் ஏதொரு வேறுபாடுமின்றி ஒருமித்து வாழ்ந்து வந்ததாகவே சொல்லப்படுகிறது.

இந்நால் வகை மக்கட் பிரிவினரின் பெயரை அவ்வர் தொழில் வேறுபாடு பற்றி எடுத்தோதும் பதிகம் இப்புருட சூத்த மந்திரத்தைத் தவிர வேறேதும் இருக்கு வேதத்தில் எங்குங் காணப்படாமையாலும், புருட சூத்த மந்திரத்தின் ஒன்பதாஞ் செய்யுளில் இருக்கு, எசுர், சாமம் என்றும் மூன்று வேதங்களின் பெயரைச் சொல்லப் பட்டு இருப்பதினாலும் நால் வேறு மக்கட் பாகு பாடும், அதனை எடுத்துக் கூறும் புருட சூத்தமும், இருக்கு, எசுர், சாமம் என்னும் மூன்று வேதங்களும் இயற்றப்பட்ட காலத்தில் இருந்தன அல்லவென்பது ஆராய்ச்சியாளர் துணிபு.

இன்னும் சுக்கில யசுர் வேதத்தின் முப்பதாம் இயலிற்பல வேறு தொழில்களைச் செய்யும் பலவேறு மக்கட்கூட்டத்தின் பெயர்கள் மட்டுமே எடுத்துரைக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றுட்சாதி வேறுபாடுகளும், அவற்றின் உயர்வு இழிவுகளும் பேசப்படவில்லை. வேத காலத்தில் ஜாதி வேற்றுமையின் பொருட்டு பூணூல் அணியும் வழக்கங்காணப்படவில்லை. அக்காலத்தில் கடவுள் நம்பிக்கை அதிகமாக இருந்ததினால், கடவுளை வழிபடுந் தொழிலிற் புகுந்திருப்போர் அத்தொழிலிற் புகாதார் தம்மை அணுகாமல் விலகிப் போதற்கு ஓர் அடையாளமாக அதனை அத்தொழில் இயற்றும் நேரங்களில் மட்டும் அணிந்ததாகச் சொல்லப் பட்டிருக்கிறது.

இது காறும் யான் கூறி வந்த சான்றுகளால் வாசகர்கள் பழைய வேதத்தில் வைதிக முட்டைகள் சொல்லுகிறபடி சாதி இல்லை என்று உணர வேண்டும்.

இனி பழைய உபநிடதங்கள், இதிகாசங்களில் சாதி எத்தன்மைத்து என்று ஆராய்வோம்.

வேள்வி வேட்டலும், நூல் ஓதுதலுமாகிய தொழில்களைச் செய்பவர் க்ஷத்திரியர் என்றும், இங்ஙனம் வகுக்கப்பட்டாலும் அவர்கள் அவ்வத் தொழில்களையே செய்ய வேண்டு மென்னும் தொழில் கட்டுப்பாடு சிறிதும் இருந்ததில்லை.

துரோணர், அக்கினிவேசர், அசுவத்தாமா முதலிய பிராமணர்கள் போர்த் தொழில் பயின்றமையும் பிரியமேதர், சினி முதலான க்ஷத்திரியர்கள் நூல் ஓதி பிராமணரானமையும் இதற்குப் போதிய சான்றாகும்.

இவ்வகுப்பினர் தமக்குள் ஏதும் வேறு பாடின்றி ஒன்று சேர்ந்து பெண் கொண்டும் கொடுத்தும், ஒருமையாக வாழ்ந்து வந்தார்கள்.

ரதவீதி அரசன் புதல்வியை சியாவாசுவர் மணந்தமை இருக்கு வேதத்தில் சொல்லப்பட்டது.

விதர்ப்பன் என்னும் க்ஷத்திரியன் புதல்வியை அகத்தியர் மணந்து கொண்டார்.

சுக்கிராச்சாரியார் என்னும் பிராமணர் தேவயானை என்னும்தம்பெண்ணை யயாதி என்னும் அரசனுக்குக் கொடுத்ததாக மகா பாரதத்தில் சொல்லப்பட்டது.

இங்ஙனமே பிராமணர் புதல்விகளை மற்ற வகுப்பாரான க்ஷத்திரியரும், க்ஷத்திரியர் புதல்விகளை பிராமணர்களும் மணந்து கொண்ட வரலாறுகள் மலிந்து கிடக்கின்றன.

மேற் கூறிய சான்றுகளால் இருக்கு வேதத்திற்குப் பிறகு பழைய உபநிடதங்கள் எழுந்த காலத்திலும் பிராமணர், க்ஷத்திரியர் என்னும் இரண்டு வகுப்பே இருந்தன வென்பதும் அவ்விரண்டு வகுப்பும் தொழில் பற்றி உண்டாயினவே யல்லாமற் பிற் காலத்திற் போலப் பிறப்பளவால் உண்டாயினவல்ல வென்பதும் அவ்விரு வகுப்பாரும் தமக்குள் ஏதும் வேற்றுமையின்று உண்ணல் கலத்தல்களால் ஒருமித்து வாழ்ந்தனர் என்பதும் இனிது விளங்கும்.

இனிப் புராணங்கள், இதிகாசங்கள், பிற்பட்ட உபநிடதங்கள் தோன்றிய காலத்திலே தான் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் நான்கு வகுப்புகள் பிரிந்தன. இந்நால்வகைச் சாதியாரும் ஒரே தந்தைக்குப் பிள்ளைகளாய்ப் பிறந்து நால் வேறு தொழி

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

# நான் "மகாமகாத்மா" அல்லவா? ஏன்? எனது அபிப்பிராயத்தால் தான்.

(ஸ்க்ருஉ லூஸ்)

துன்பம்! துன்பம்! அட அப்பா பொறுக்க முடியாத துன்பம்! என்ன செய்வேன்! யாரிடம் சொல்லுவேன்! எங்கே போவேன்! துன்பமில்லாதவர்கள் யாராவது இருந்தாலல்லவா? அவர்களிடம் சொல்லலாம். வீட்டுக்கு வீடு வாசற்படி இருப்பது போல துன்பமும் எல்லோர் பாலும் இருக்கின்றதே.

ஏழைகளும் துன்பமடைகிறார்கள்! பணக்காரர்களும் துயரப்படுகிறார்கள். ஏழைகள் துன்பம் நாளைக்கு உணவு இல்லையே! இன்றைக்குப் பட்டினி கிடக்கிறோமே? குட்டிச்சுவரில் குடி இருக்கிறோமே! எரிக்கும் வெய்யில் எல்லாம் நம் தலையையே பொசுக்குகின்றதே! பெய்யும் மழை முழுவதும் நம்மையே நனைக்கின்றதே! நமது பெண்டு பிள்ளைகள் எலும்புந் தோலுமாய் இளைத்து வாடுகின்றார்களே! ஐயோ! என்ன செய்வோம்" என்று இரங்குகின்றனர். பணக்காரர்களோ; இந்த ஆண்டில் ஒரு லக்ஷ ரூபாய் தானே மீதமாயிற்று? மூன்று மோட்டார்கார்கள் தானே வாங்க முடிந்தது! நான்கு மாளிகைகள் தானே கட்ட முடிந்தது! சட்டசபை எலக்ஷனில் வெற்றி பெற முடியாமல் போய் விட்டதே! இது போகட்டும் எந்த வகையிலாவது ஜில்லா போர்டு தலைவராக வேலை செய்ய வேண்டுமே! திவான் பகதூர் பட்டம் தவறி விட்டதே! கவர்னர் மாளிகை விருந்துக்கு போக முடியாமல் போய் விட்டதே" என்ற துக்கத்தால் வாடுகின்றனர்.

இம்மாதிரி எங்கும் துக்கம். துக்கமென்றால் துக்கமா? எழுத முடியாத துக்கம்! இயம்ப முடியாத துக்கம்! தொழிலாளி, சம்பளங்குறைந்து விட்டதே! பாழும் சிக்கனம் நம்மைத்தானா பிடிக்க வேண்டும்? இது போகட்டும்; வேலை நிலைத்தாலாவது குற்றமில்லையே! அதற்கும் ஆபத்து வரும்போலிருக்கிறதே! என்று எண்ணி எண்ணி எந்நேரமும் ஏக்கமடைகின்றான்.

முதலாளியோ, "ஆயிரம் வேலைக்காரர்களைக் குறைத்து விட்டால் மாதம் முப்பதினாயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும்; வேலைக்காரர் சம்பளத்தில் நூற்றுக்கு ஐந்து வீதம் குறைத்தால் பதினாயிரம் ரூபாய் மீதமாகும்; ஆனால் வேலைக்காரர்களோ, ஒற்றுமையாயிருந்து கொண்டு கஷ்டத்தைத் தருகிறார்கள்; சம்பளங் குறைத்தாலும் வேலை நிறுத்தம் பண்ணுவதாகப் பயங்காட்டுகிறார்கள். ஆட்களை எடுத்தாலும் எல்லோரும் வெளியேறுவதாக விளம்புகிறார்கள்; இந்த தொல்லைக்கு என்ன செய்து தீருவது" என்று அல்லும் பகலும் அனவரதமும் ஆழ்ந்து சிந்திக்கின்றான். அல்லற்படுகின்றான்.

படியாதவனோ, "என்ன செய்வது இன்றைக்குநாலணா கூலிகிடைத்தால் போதுமே! வேலை அகப்பட வில்லையே! எங்கேயாவது மாதக் கணக்காக பத்து ரூபாய் சம்பளம் கிடைத்தால் கவலையில்லையே! தினம் தினம் எங்கே வேலை கிடைக்கிறது? தெருத் தெருவாக அலையவேண்டியிருக்கிறதே அட கடவுளே! என்னை ஏன் இப்படித் துன்பப்பட விடுகின்றாயே?" என்று இரத்தக் கண்ணீர் வடிக்கின்றான்; கால்கள் தேய நடக்கின்றான், நெஞ்சம் பிளக்க, ஹிருதயம் வெடிக்கக் கவலைப் படுகின்றான்.

படித்தவனோ, சர்வ கலாசாலை பட்டம் பெற்றவனோ, எஸ். எஸ். எல். சி. வகுப்பிலிருந்து வெளியேறினவன் கூட, யோக்கியதா பத்திரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு பெரிய பெரிய அதிகாரிகளை யெல்லாம் கண்டு வருகின்றான். போதும் போதாமைக்கு உத்தியோக நியமனக் கமிட்டி ஏற்பட்டதன் பின் இன்னும் கொஞ்சம் கஷ்டம் அதிகப்பட்டு விட்டது. படித்ததற்குச் செலவழித்துச் சீர்கெட்டது போதாதாம். உத்தியோக நியமனக் கமிட்டியில் ஏற்படுத்தப் பட்டிருக்கும் பரீக்ஷைக்கு வேறே ஆஜராக வேண்டும். அந்தப் பரீக்ஷையில் தேறுவதும், தேறாததும் வேறு விஷயம். எப்படியோ பணம் கட்டி பரீக்ஷைக்குப் போய் வருகின்றான். அதன் பின் உத்தியோகத்திற்காக அவன் படும் துயரம் அனந்தம்.

இந்த மாதிரியே ஒவ்வொருவராகப் பார்த்தால், வீடு தோறும் பிச்சை யேற்கும் பிச்சைக்காரர் முதல், பெரிய நாட்டைச் சர்வாதிகாரியாய் இருந்து ஆளும் சக்கரவர்த்தி வரையில் எல்லோரிடத்திலும துன்பம் இல்லாமலில்லை.

இந்த மாதிரியான துன்பம், இந்தக் காலத்தில்தான் இருக்கிறது; பண்டைக் காலத்தில் இல்லையென்று சொல்ல முடியாது. பண்டைக் காலத்தில், வானமும்மாரி பெய்தது, பருத்தி புடவையாய்க் காய்த்தது. நெல்லெல்லாம் சோறாக விளைந்தது; பூமி யெங்கும் தங்கம் கிடைத்தது; புலியும் ஆடும் ஒரு துறையில் தண்ணீர் குடித்தன. கீரியும், பாம்பும் விளையாடின." என்று சொல்லுவார்கள். இதனால் அந்தக் காலத்தில் உலக மக்கள் கஷ்டமில்லாமல் வாழ்ந்தனர் என்று சொல்ல வருவார்கள்.

ஆனால் இச்சொற்கள் அர்த்தமற்றவை; இதனால் மக்களிடம் துன்பம் அணுகவில்லை யென்று சொல்ல வருவது பகுத்தறிவில்லாமை; என்று துணிந்து சொல்லுவேன். 'பருத்தி புடவையாவது அதிசயமில்லை; இன்றும் பருத்திதான் புடவையாகின்றது. வேஷ்டியாகிறது நெல்சோறாவதும் ஆச்சரியமல்ல; இப்பொழுதும் நெல்லுக்குள்ளிருந்து தான் அரிசி வருகிறது; அந்த அரிசி தான் சோறு சமைக்க உதவுகின்றது. புலியும் ஆடும் ஒரு துறையில் தண்ணீர் குடிப்பதும் வியப்பல்ல. இன்று "சர்க்கசில்" இவை இரண்டும் ஒரு பாத்திரத்தில் தீனி தின்னுகின்றன. கீரியையும் பாம்பையும் பழக்கினால் விளையாடும். ஆகையால் இதைக் கண்டு யாரும் மலைக்க வேண்டாம். எங்கள் அப்பாணை அந்தக் காலத்திலும் இந்தக் காலத்தைப் போலவே தான் துன்பம் இருந்தது; கவலை இருந்தது; தொல்லை யிருந்தது.

ஆனால் ஒன்று; இந்தக் காலத்தில் தமது துன்பத்தை வெளியிட்டுக் கொள்வது போல, அந்தக் காலத்து மக்கள் தமது துன்பத்தை அடிக்கடி வெளியிட்டுக் கொள்வதில்லை. இதற்குக் காரணம் அவர்களுடைய அழுக்கேறிய மூளையே யாகும்.

"துன்பப் படுவது தலைவிதி; துன்பப் படுவது கடவுள் கட்டளை; காலம் வந்தால் துன்பம் தானே நீங்கும்; சீக்கிரத்தில் நல்ல காலம் பிறக்கும்; நமது துன்பத்தை நம்மால் நீக்கிக் கொள்ளத்தான் முடியுமா? நாம் பூர்வத்தில் செய்த வினையை நாமே அனுபவித்துத் தானே தீர்க்க வேண்டும்" என்று சோம்பேறி வேதாந்தம் பேசிக் கொண்டு, அமைதியாகத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருந்தனர். ஆகையினால் அவர்கள்வெளியில் அதிகமாகக் கூறிக் கொள்ளுவதில்லை.

இந்தக் காலத்திலோ மக்களுக்கு மேற்கூறியவகையாக மனச் சமாதானம் ஏற்படுத்திக் கொள்ள முடிவதில்லை. ஆகையால் அவரவர்களும் தங்கள் தங்கள் துயரத்தைத் தாராளமாக வெளியிட்டுக் கொள்ளுகின்றனர். இதனால் தான் எங்கே பார்த்தாலும் துயரப் பேச்சு; எந்த மூலையில் நோக்கினாலும் துக்க ஓசை, எந்த வீட்டிற்குள் நுழைந்து பார்த்தாலும் கவலை நிறைந்த மொழிகள், யார் முகத்தைப் பார்த்தாலும் துயரக் குறிகள்; எந்த தேசங்களிலும் துன்பக் கூக்குரல்; இருந்து வருகின்றது வளர்ந்து வருகின்றது.

இவ்வாறு உலக மக்களைப் பிடித்து வாட்டி வரும் துன்பத்தை நீக்க வழியென்ன என்பதைப் பற்றியே இப்பொழுது எல்லா நாட்டினரும்ஆராய்கின்றனர்; சிற்சில அறிஞர்கள் பலப் பல வழிகளைக் கண்டு பிடிக்கின்றனர்.

தத்துவ ஞானிகள்; அறிவாளிகள்; பக்தர்கள்; மதவாதிகள்; வேத போதகர்கள் என்பவர்களை உலகத் துன்பம் நீங்குவதற்கு வழியென்னஎன்று கேட்டால் அவர்கள் கூறும் வழி ஒன்றாகும். அதாவது:—உலகவாழ்க்கையே துயரமுடையது. உலக வாழ்வை நீத்தால் தான் சுகமுண்டு, ஆதலால் உலகப் பற்றை ஒழிமின்! கடவுள் அருளைச் சிந்தியுங்கள்! பரலோகத்திற்குச் செல்ல வழிதேடுங்கள்! என்று வழி கூறுவார்கள். இந்த உலகத்தை விட்டு நீங்கி விடுவோமானால் கஷ்டமும், தொல்லையும் என்பதை நான் ஒப்புக் கொள்ளுகின்றேன். ஆனால் சாகத் துணிந்தவர் யார் என்று கேட்கிறேன். "பிறப்பேதும் யான் அஞ்சேன் இறப்பதற்கு என் கடவேன்" என்று ஒரு தத்துவ ஞானியே கூறியிருக்கிறாரே.

இவர்கள் போகட்டும், தற்காலப் பெரியார்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று கவனியுங்கள்! அடிமைப் பட்ட நாட்டிலுள்ளவர்கள் மக்களுக்குச் சுயராஜ்யம் கொடுத்து விட்டால் கஷ்டம் நீங்கும் என்று சொல்லுகிறார்கள்; சுதந்திரம் பெற்ற நாட்டில் உள்ளவர்கள், தொழில், விவசாயம் முதலியவைகளை வளர்த்து எல்லோருக்கும் வேலை கொடுத்தால் துன்பம் நீங்கும் என்று சொல்லுகிறார்கள். அதிதீவிரச் சமூக வாதிகள், ஏழைகள் பணக்காரர்கள் வேற்றுமை, தொழிலாளிகள் முதலாளிகள் வேற்றுமைகளை, ஒழித்து எல்லாமக்களுக்கும் வேற்றுமையில்லாமல்வேலை கொடுத்துப் பொருள்களைப் பொதுவுடமையாக்கினால் துன்பம் ஒழியும் என்று கூறுகின்றனர்; சுயமரியாதைக்காரர்களும், உண்மை நாடுவோர்களும், அறிவு இயக்கத்தார்களும் ஜாதி, மதம், சடங்கு பொருளாதார வித்தியாசம் ஆகியவைகள் எல்லாம் ஒழிந்தால் உலகத்துன்பம் நீங்கும் என்று சொல்லுகின்றார்கள்.

ஆனால் மேற் கூறிய காரியங்கள் எல்லாம் நடந்தாலும், அடியோடு உலகத்துன்பம் ஒழியாதென்பதே என்னுடைய கடன் வாங்காத அபிப்பிராயம்; துன்பம் ஒழிவதற்கு நான் ஒரு யோசனை சொல்லுகின்றேன், அது உங்களுக்கு நகைப்பாக இருக்கலாம்; நன்றாய் மூளையைத் திறந்து வைத்துக் கொண்டு யோசிப்பீர்களானால், ஒப்புக் கொள்ளுவீர்கள். சந்தேகமில்லாமல் எனது யோசனைக்கு என்னைத் தலைவனாக ஏற்றுக்கொள்ளுவீர்கள். அந்த யோசனையைச் சொல்லி விடுகிறேன்.

மனிதனுடைய துன்பத்திற்குக் காரணம் நாகரிகமே, மனிதன் நாகரிகத்தில் ஈடுபடாமல் இருந்து விட்டால் அதாவது பழய மிருகப் பிரா

(தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க)

# மானிடர் அறிவும், பிரபஞ்ச வாழ்க்கையும்.

[தோழர் எல். நடேசன்]

இன்றுவரை கணக்கிலடங்காத வெகுகால முதற்கொண்டே பிரபஞ்சத்தில் தோன்றிய அனேக சீவராசிகளில் பெரும்பாலான மானிடர் வகுப்பே இயற்கையினின்றும் உற்பத்தியாகின்ற அறிவை வளர்ச்சிசெய்து கொண்டு வருகின்றது. இம்மாதிரியாக பல ஆயிர வருஷங்களாக இயற்கை நுட்பத்தால் விளைந்த அறிவில் ஆங்காங்கு சில சில பகுத்தறிவாளர்களடங்கிய பல கூட்டங்கள் பெருகலாயிற்று. நாளாவட்டத்தில் அக்கூட்டங்கள் தத்தம் தேசமக்களை தங்கள் அதிகாரத்திற்குக்கீழ் அமைத்து அடிமையாக நடத்திச்செல்லுவான் வேண்டி ஜனசமூகத்தை நானாவித கட்டுப்பாடுகளுக்குள்ளாக்கி கடவுள் என்ற நம்பிக்கையை புகுத்துவதின் அஸ்திவாரமாக கட்டுக்கதைகளமைந்த ஏட்டுச்சுவடிகள் பல ஆபாசமான முறையில் எழுதினார்கள். அதற்கு வேதங்களும், பிறவும் என்பதாக அக்காலத்திய பொதுமக்களின் அறிவிற்கும், கவன உணர்ச்சிக்கும் பொருந்தாததும், மனித சமூகம் அறிய முடியாத வாழ்க்கை வளர்ச்சிக்குப் பெருந்தடை கல்லான கடவுள் என்ற அனுமேயப்பெயரையும் ஏற்படுத்தி கடவுள் என்ற பக்திதன்மையையும் புகுத்தி புலன்களின் உணர்ச்சியையும், கவனத்தையும் அவைபால் இழுக்கச்செய்து கடவுளரின் தன்மை பொருந்திய பல சீடர்கள் இவ்வுலகுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றார்கள் என்ற பயத்தை நாட்டி மேற்படி சீடர்களாலேயே மேற்படி வேதங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றது என்றெல்லாம் மக்களின் அறிவைத் தங்கள் பக்கம்திருப்பி நடத்தி வந்தார்கள். மதக்குருக்களின் கூட்டங்களை அபரிமிதமாக உண்டாக்கினார்கள். தங்கள் அறிவு ஆராய்ச்சியின் திறத்தாலும், அன்னியப் படையெழுச்சியின் பயத்தாலும் அரசியல் நிறுவினார்கள். கட்டுப்பாடுகள் வகுத்தார்கள். சட்டதிட்டங்கள் அமைத்தார்கள். அரசர்களை உற்பத்தி செய்தார்கள். மதமும் அரசும் ஒன்று சேர்க்கலாயிற்று. மக்கள் பகுத்தறிவைத்தடைப்படுத்தும் வழியில் அரசியல் நடத்திச்சென்றார்கள். பல்வேறுவழிகளில் பிர விர்த்தியாகும் மக்கள் கவனத்தை மதம் என்ற மார்க்கத்தில் கொண்டுபோய் விட்டார்கள். மக்கள் அல்லலுற்றார்கள். அறிவு செல்லும் மார்க்கத்திற்கு வகைதேட முடியாதபடி திகைத்தார்கள். நூதன அபிவிருத்திகளுக்கிடமில்லாமல் பகுத்தறிவை பாழ்படுத்தினார்கள்.

மதக்கூட்டத்தலைவன் இடும்கட்டளையை அரசன் பெரிதும் போற்றல் வேண்டும்; இன்றேல் அவ்வரசு நொடிப்பொழுதில் ஒழிந்துவிடும் சூழ்ச்சியும் தந்திரமுமே பெரிதும் மதத்திற்கு அஸ்திவாரமாகும் மக்கள் முயற்சியால் காப்பாற்றிவைக்கும் பொருட்களை பறிப்பதற்கும். அப்படி பறித்த பொருட்களை கொள்ளையர்களான மதாச்சாரிக்கூட்டங்கள் தங்களுக்குள் ரகசியமாக வினியோகித்துக் கொள்ளுவதற்கும் ஏற்றமார்க்கங்களை நிரந்தரமாக ஆக்கிவைத்தார்கள், மக்களின் பாரம்பரியர்களின் சிறப்பு பிறப்பை உத்தேசித்து 'ஆத்மா' என்ற இயற்கை வளத்தாலெழும் ஓர் காற்று சரீரத்தில் பரிணமித்துக்கொண்டிருப்பதை மதக்குருக்கள் மோக்ஷ நரகங்கள் காட்டி பலனுடையதாய்ச் செய்வதாக ஒருபுறம் ஜனசமூகத்தின் முன்னேற்றத்தையும். ஊக்க முயற்சியையும் தடைப்படுத்தியதோடு மற்றொருபுறம் மக்கள் பொருளை கொள்ளை கொள்ளுவதற்கும் எண்ணற்ற சடங்குவகைகளையும் தீர்த்தவகைகளையும். யாத்திரை வகைகளையும் மாந்திரீகம் முதலிய சோதிடப்புரட்டுத்தன்மைகளையும் அறிவற்ற கொள்கைகளாக மூடநம்பிக்கையின் மூலம் கட்டுப்பாடாக்கிவைத்தனர். அரசாங்க பொக்கிஷத்திலிருந்து அதாவது மக்கள் கிஸ்தியாக செலுத்துகிற பொருள்களிலிருந்து ஊர்கள்தோறும் ஏராளமான கோவில்களையும், மடங்களையும் தோற்றுவித்து அவைகள் அழியாமலிருப்பதற்காக-கடவுள் பக்தியின் பெயரால் கட்டளை உத்சவாதிகள் முதலிய செலவுகளைச் செய்துவரவேண்டுமென்ற நிர்பந்தத்தையும் ஏற்படுத்தினார்கள் இவ்வகையில் மக்கள் கஷ்டப்பட்டு தேடும் வருவாயெல்லாம் பாழாயிற்று; ஆகின்றன. கோவில்கள் தோறும் பெரும்பெரும் உண்டியல்கள் நிரப்பி லக்ஷக்கணக்கான தொகைகளும் தங்கம், பொன், வெள்ளி முதலிய உலோகங்களால் ஆக்கப்பெற்ற அனேக சாமான்களையும் காணிக்கையாக பெற்றுவருகிறார்கள். இச்சூழ்ச்சிக்கூட்டங்கள் செய்துவந்த அநேக தந்திரயுக்திகளில் வெகு சாமர்த்தியமானவை யாதெனில் இன்றும் உலகத்தில் வேரூன்றி நிற்பதும் வெகு சுலபத்தில் அழிக்கமுடியாமல் ஆக்கிவைக்கப்பட்டிருப்பதுமான கீழ்மேல் உயர்வுதாழ்வு என்ற பலஜாதிப்பிரிவுகளின் வித்தியாசமே ஆணித்தரமாக நிற்கின்றன; இவைகள்தான் இன்று சமூக சீர்திருத்தக்காரர்களுக்கு வெகு இடைஞ்சலாக நிற்பவைகள்; இச்சாதி வித்தியாசம் ஒன்றோடு மாத்திரம் நிற்கவில்லை. ஜாதி, மதம், கடவுள், வேதம் முதலிய ஒன்றை ஒன்று பின்னிக்கொண்டு வெகுதூரம் போய் நிற்கிறது. இப்பாழும் மதக்குருக்கள் தங்கள் கூட்டத்தின் சுயநலத்திற்காக சூழ்ச்சியே அடிப்படையாகக்கொண்ட ஏமாற்றுத்தனத்தால் பொது மக்களின் பகுத்தறிவை பறிமுதலாக்கி கல்வி பரப்பாமல் தேர், திருவிழா போன்ற பல உற்சவங்களின் பிளாக்குகளைக்காட்டி எழுத்துவாசனை யறியாத மக்களை ஊர்கள்தோறும் அலைந்து மோக்ஷத்திற்கு வழிதேடும் மார்க்கத்தை மதகுருக்களிடமிருந்து கற்றுக்கொள்ளும்படி மக்களின் மனப்பான்மையை உறுதியாக்கிவைத்தனர். கல்வி என்றால் கசப்பான ஒரு எண்ணமாகத்தோன்றும்படி மக்கள் அறிவின் பிரவாகத்தை தடுத்துவிட்டனர். மக்கள் எண்ணும் எண்ணமெல்லாம் கடவுளின் விதியைப்பொருத்தே நடப்பதாக கவற்சி செய்யப்பட்டது. ஜனசமூகத்திற்கு விதி என்பதொன்று எப்படி இருக்கமுடியும்? வேதம் கடவுள் மதம் போன்ற மதாச்சாரியார்கள் கற்பித்த மனோபாவனை குறுக்கே நிற்கலாயிற்று.

ஆலயங்கள் தோறும் கடவுளர்களின் திருவிளையாடல்களுக்கென்ற பெயர் சூட்டி இளம் கன்னியர்களாம் பெண்மணிகளை அமர்த்தி சுகபோகமனுபவித்துவரலாயினர். பெண்களுக்கு சகல உரிமையுமின்றி தவிக்கும் மார்க்கத்தில் அடிமைகொண்டுவிட்டார்கள்,

அரசும் மதமும் ஒன்று சேர்ந்து பணக்குவியலை மலைமலையாக உயர்த்தினார்கள். அப்பணத்தைக்கொண்டே மக்களுக்குள் பண்டமாற்றுதல் விருத்தியை உண்டு பண்ணினார்கள் இதிலிருந்தே அரசன் ஜமீன்தாரன் மிட்டாதாரன் என்கின்ற பாகுபாடுகளும் பணக்காரன் உயர்ந்தவன் ஏழை தாழ்ந்தவன் என்ற தன்மையும் உண்டாயிற்று. படிப்படியான கீழ்மேல் ஜாதி என்ற வித்தியாசத்திற்கு மேற்கூறிய பணக்காரத்தன்மையே மிக மிக அஸ்திவாரமாக ஏற்பட்டது. ஜாதிவித்தியாசத்தன்மையை ஒழிக்கப்பாடுபடுவனை மதக்குருக்கள் சமூக பஹிஷ்காரத்திற்குள்ளாக்கிக் கொண்டிருந்தனர். ஜாதிவித்தியாசப்பிரிவுகள் மேன்மேலும் பெருகிக்கொண்டே சென்றது. எடுத்ததற்கெல்லாம் ஜாதியே முதற்படியாக நிற்கும் பெருமை பெற்றுவிட்டது.

கடவுள் என்ற பெயரை உச்சரித்துக்கொண்டு மக்கள் அனுகூலத்திற்காக என்று ஏமாற்றி மந்திரங்கள் என்னும் கொடிய பித்தலாட்ட காரியங்களைப்பரப்பி அனியாயமாக அபரிமிதமான பணத்தை கொள்ளைகொண்டார்கள். நோயாளிகளுக்கு கடவுளின் திருத்தூதர்களாக வந்தவர்களின் அருளால் நோயை தீர்த்து வைப்பதாகவும் அதற்காக மடாலய திருப்பணி கைங்கர்யங்களுக்கென்று காணிக்கைகள் சேர்த்து தரும்படியாகவும் நிர்ப்பந்தமாக வற்புறுத்தி மதக்குருக்கள் பங்குபோட்டுக்கொண்டுவரலாயினர். பிள்ளைகள் இல்லாத மலடிகளுக்கு கடவுள் அருளால் சந்தான உற்பத்தி உண்டாக்கித்தருவதாக அளவற்ற பெண்மணிகளை தங்கள் சுகபோகத்திற்கு ஈடுபடுத்தி வந்தனர். மங்கைப்பருவமுள்ள பெண்மணிகளையும் இளம் விதவைகளையும் மடாலய தொண்டூழியம் புரிவதன்மூலம் தங்கள் ஜாகைகளில் அமர்த்திக்கொண்டுவந்தனர். பகுத்தறிவற்ற ஆண்மக்களும் இவைகளின் மர்மம் தெரியாமல் அளவற்ற கடவுள் பக்தியின் அனுகூலங்கிட்டுமென்று அவ்விளங்கன்னியர்களை ஈவு இரக்கமற்ற போலி கபட சன்னியாசிகள் வசம் ஒப்புவித்து வைத்தனர். இவைகளைத்தான் அக்காலத்திய கன்னிஸ்திரீமடங்களென்றும் விதவைஆஸ்ரமங்களென்றும் பெயர் உண்டாக்கி வைத்தார்கள். மற்றும் இவ்வாஸ்ரமங்களில் ஆடவரில்லாமல் (மணம் புரியாமல்) காலங்கழிக்க வேண்டுமென்ற ஸ்திரீ நாயகங்களுக்கே அதாவது கன்னிப்பெண்களுக்கேதான் பெரிதும் இடம் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது இவ்வனியாயம் நிறைந்த மதக்கூட்டங்களிடையே அறிவற்ற ஜனசமூகங்களின் கவனம் இழுக்கப்பட்டு அரசு புரிவதற்கு ஒத்தாசையாக மக்களையும் மதத்தையும் ஒன்றாகப்பிணைத்து மக்களுக்கு அரசியல் துறையில் உணர்ச்சி ஏற்படாதவாறு செய்து வைத்துவிட்டார்கள். இந்நிலையில் கல்வியற்ற மக்களிடையே திடீரென்று ஓர் அரசியல் இயக்கத்தின் காரணமாக உற்சாகமூட்டி மூட உணர்ச்சியை ததும்பச் செய்து தங்கள் வழியில் சேர்த்துக் கொண்டு ஆளப்படும் மக்களிடம் அடிமைகிடக்கும் மக்கள் சுதந்திரம் பெறுவதாக ஏமாற்றும் நய வஞ்சகத்தன்மையை கவனித்தால், பல்வேறு மதக்கூட்டங்களின் சுயநலத்திற்காக ஜனசமூகம் ஆளப்படுகிறதென்பது உலகமக்கள் ஒப்பமுடிந்த உண்மையாகும். இன்றையபொழுது சீர்திருத்த மக்களின் மனப்பான்மை உலகையே கவர்ந்துகொண்டிருக்கிறது. உலகமத விஷயமாகவே அநேக அழிவுள்ளமாறுபாடான வேலைகளை வரையறுத்து விடவேண்டுமென்ற அவாமேலிடுகிறது. அதற்காக உலகில் உள்ள ஒவ்வொரு தேசங்களும் எவை எவையால் தங்கள் மேம்பாடான வாழ்க்கையை நிறுவுகிறார்கள் என்ற உயரிய திட்டத்தையும், நோக்கத்தையும் ஆராய்ச்சிமூலம் அணுகி நிற்கிறது. வாசகர்களே இவ்வியாசத்தில் சற்றே மத ஆதிக்கக்காரர்களின் அஸ்திவாரத்தை விளக்கினோம்.

---

## கலப்பு மணத்தால் தான் ஜாதி ஒழியும்.

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!

விஞ்ஞான சாஸ்திரம், பூகோள. சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம், நாகரீகம், கைத்தொழில் முதலியவற்றில் மேனாட்டார் தலை சிறந்து முன்னேற்றமடைந்து வருகையில், நம் நாடோ கல்வியின்றி வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசம், இவைகளிலிருந்து தோன்றிய ஜாதி வித்தியாசம், தீண்டாமை, புரோகிதம், மற்றுந் தோன்றிய கபட நூற்களில் மூழ்கி, ஏழ்மை நீங்காது பண்டைப் பெருமையை நினைத்து, நினைத்து மனப்பால் பருகி தாழ்ந்த நிலையில் இருப்பதை ஊன்றிப் பார்த்தால் ஒவ்வொரு உண்மைத் தமிழ் மகனும் கண்ணீர் விடாமல் இரான். மத்திய ஆசியாவிலிருந்து ஆடு மாடுகளுக்கு இரை தேட வந்த ஆரியர்களின் ஆதிக்கம் வலுத்த நாள் முதல் நம் நாடு ஆபத்துற்று, சாதிப் பூசல்; சமய வேற்றுமை, உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டு புரோகிதக்கூட்டத்தார் தெய்வாம்சமுடையவர்கள், அவர்கள் பிர்மாவின் முகத்தில் உற்பத்தியானவர்கள் எனும் கொள்கைகளை ஒன்றுமறியாத, எளிதில் எதையும் நம்பக்கூடிய இயல்புடையவர்களின் மனதில் வேரூன்றி நிற்கச் செய்ததைப் பற்றி நாம் விசனிக்க வேண்டியது தான்.

அடுத்தபடியாக ஆதிதிராவிட மக்களின் நிலைமையைக் கவனித்தால் கன்னெஞ்சும் கரையும்என்று சொன்னால் மிகையாகாது. ஏழை மக்கள் பொதுப் பாதைகளில் செல்ல சுதந்திரமில்லை. பொதுக் குளங்களில் குளிக்கவும், தண்ணீர் எடுக்கவும்சுதந்திரமில்லை. பொதுப் பள்ளிக்குச் சென்று கல்வி பயின்று அஞ்ஞான இருளை நீக்கிக் கொள்ள மார்க்கமில்லை. கடவுள் சன்னதி என்று சொல்லிக் கொள்ளும் கோவில்களில் சென்று சுவாமி தரிசனம் செய்ய உரிமையில்லை, பார்ப்பன அக்கிரகாரங்களிலும், ஜாதி இந்துக்களிடையிலும் கட்டப் பட்டிருக்கும் தபாலாபீஸ்களில் செல்வதற்கு அனுமதியில்லை. உயர்தர பரீட்சையில் தேர்ச்சி பெற்று, ஆபீஸ்களில் உத்தியோகஞ் செய்யும் ஆதிதிராவிடர்களை மேல் ஜாதி இந்துக்களென்போர். செய்யும் இன்னல்கள் சொல்லத்தரமன்று அந்தோ! தற்கால பாழ் நிலையை நினைக்குந் தோறும் மனம் பதறுகிறது, சுருங்கக் கூறின் நாம்

# கோலார் தங்கவயல் முதலாவது
# சுயமரியாதை மகா நாடு.

## வரவேற்புக்கழகத்தலைவர் தோழர்
## எஸ். முனிசாமியார் சொற்பொழிவு.

——:0:——

மேல்ஜாதி என்று சொல்லிக் கொள்ளும் ஓர் கூட்டத்தாருக்கு சமுதாய அடிமைகளாக இருக்கின்றோம்.

நாட்டின் சரிபாதித் தொகையினரான பெண் மக்கள் இப்பொழுது சீர்கேடான நிலைமை யுற்றிருப்பதற்கு அக்கூட்டத்தாரின் சூழ்ச்சியும் கல்வியின்மையுமே காரணமேயாகும். ஆண்கள் தங்கள் சுயநலத்தை உத்தேசித்து அவர்களை என்றும் அடிமைகளாகவே இருக்கச் செய்து வாணாளை வீணாளாக்கி, கல்வி கற்கவும் சுதந்திரமில்லாமல் வைத்திருப்பதை உணர்ந்த சகோதரி நீலாவதியம்மையார் "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கென்றால் அறிவுள்ள ஆண்களுக்குக்கல்வி எதற்கு? என்று இன்று இடும் வீர கர்ஜனைக்கு இந்நாட்டு வைதீகக் குடுக்கைகள் என்ன பதில் சொல்லுவார்கள்? நம் நாடு உண்மை சுதந்திரம்பெற வேண்டுமானால் பெண் விடுதலை முக்கியமன்றோ? மக்கள் இவ்வித மூடநம்பிக்கையி லிருந்து விடுபட வேண்டுமானால் மூடப்பழக்க வழக்கங்களை ஒழிக்க வேண்டுமானால் இவற்றிற்கு அடிப்படையாகவுள்ள கடவுளாலும், கடவுளைக் கண்டவராலும் சொல்லப் பெற்றவை என்னும் வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசம், புரோகிதம் முதலிய ஆபாசங்களை உணர வேண்டும். உணர்வார்களானால் அஞ்ஞானத்திலிருந்து விடு பட்டு மூடப்பழக்கம், மூட நம்பிக்கையிலிருந்து தாங்களே கரையேறுவார்கள். அதற்கெனவே தற்போது மக்களிடை பெருஞ் செல்வாக்குப் பெற ஒரு நற்சந்தர்ப்பம் வாய்த்தது. அது தான் இப்பொழுது தமிழ் நாட்டில் வீர கர்ச்சனை புரிந்து வரும் "சுயமரியாதை இயக்கம்" இதுவே தீப்போல் பரவி அத்தகைய இழிவான குறைகளைப் போக்கி உண்மை விடுதலையை பெறவும், சனசமூகத்திலுள்ள மூடப்பழக்க வழக்கங்களையும், சாதித்திமிர், தீண்டாமை முதலியவைகளையும் ஒழிக்க ஒப்பற்ற தொண்டாற்றி வரும் விஷயம் உலகமறிந்ததொன்றும் அரசியல் வாழ்வில் சுயநலக்காரர்கள் கலந்து நாட்டைப் பாழ்படுத்தா வண்ணம் இவ்வியக்கம் தைரியமாய் அவ்வப்போது வெளிப்படுத்தி கண்டித்து வருகிறது.

இவ்வியக்கத்திற்கு, சாதிவெறி கொண்டவர்கள், பண்டிதர்கள், பணக்காரர்கள், கூலிக்குக் கொள்கையை விட்டுக் கொடுத்தவர்கள் எதிரிகளாக இருந்து வந்தார்கள், இருக்கிறார்கள். எனினும் இப்புனித இயக்கம் சீரிய நிலையை மெய்ப்பிக்கிறது. இவ்வெதிர்ப்புகளெல்லாம் சூரியனைக் கண்ட பனிப் போல் மறையும் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. இந்தியாவிற்கே ஏக பிரதிநிதி என்று சொல்லிக் கொள்ளும் திரு. காந்தியவர்கள் லண்டனில் மாணவரிடையில் இராம ராஜியத்தை நிலை நிறுத்தத் தாழ்த்தப்பட்டோருக்கு உயிர் போனாலும் தனி உரிமை கொடேனென்று தாண்டவமாடிய கூற்றைப் பகுத்தறிவாளர்கள் கேட்டு நகைப்பத்தடையுளதோ? திரு. காந்தியாரின் பிரசாரமும், உபதேசமும், அவரால் அனுஷ்டிக்கப் பட்டு வரும் கொள்கையின் முறையும், மக்களின் அறிவைக் கெடுத்து மதப் பைத்தியத்தை அதிகரிக்கச் செய்து வீணே காலத்தையும், செல்வத்தையும், போக்கச் செய்து வரும் வைதீகப் பிரசாரத்தால் மதி மயங்கி காங்கிரஸ் வலையில் சிக்க வேண்டாம் என்று வாலிப சகோதரர்களை எச்சரிக்கை செய்கிறேன். ஏனெனில் நம் இந்திய தேசத்து மக்கள் இப்பகுத்தறிவு உலகத்தின் முன் மானத்தோடும் க்ஷேமத்தோடும், சமத்துவம், சுதந்திரம் சகோதரத்துவத்தோடும் வாழ்வதற்கில்லாமல் அநேகர் ஒடுக்கப்பட்டு தரித்திரர்களாய் அடிமைகளாய் விளங்குவதற்கு கல்வியில்லாமையே காரணமாய் இருந்து வருகிறது. நம் சமூகமோ தலைமுறை தலைமுறையாக புரோகித வகுப்பார் ஏற்படுத்திய பழக்க வழக்கங்கள் மூடக்கொள்கைகள் இவற்றால் கட்டுண்டு கிடக்கிறது. சுயமரியாதை இயக்கம் தோன்றி சுமார் 7, 8 வருஷத்தில் சமூகசமுதாய சீர்திருத்த வாதிகள் ஜாதி ஆதிக்கத்தினின்றும், புரோகிதக்கொடுமையினின்றும் சிக்குண்ட மக்களை மிகுந்த ஆர்வத்துடன் விடுதலைபெறும் மார்க்கத்தை எங்கும் சிறப்பாக பரப்பி வருகிறார்கள்.

இறுதியாக வாலிப உலகமாகிய இவ்விருபதாம் நூற்றாண்டில் தொண்டர்களாகிய நமது உழைப்பே நாட்டிற்கு இன்றியமையாததாகும். அஞ்சா நெஞ்சுடன் வளர்தரு சமூகத் தொண்டிற்கு தளர்விலா ஊக்கத்துடன் இடைவிடாதுழைத்து நமது சமூகத்தை முன்னேற்ற நம் கிராமங்கள் தோறும் சங்கங்களை நிலைநாட்டி நம் நோக்கத்தை நிலைபெற முயல்வோமெனக்கூறி உங்களை ஆரவாரத்தோடு வரவேற்பதோடு எனது பட்சமான வந்தனத்தை உங்களுக்குத் தெரிவித்து கொள்ளுகிறேன்.

---

## சுயமரியாதைச் சங்கம்
## மதுரை

20-5-32 இரவு கூடிய நிர்வாகசபைக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

1.சங்கத்தின் ஏப்ரல் மாதத்திய வரவுசெலவு வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

2. 9-5-32 ல் வெளியான சண்டமாருதத்தில்' நமதுஇயக்க முக்கியஸ்தர்களான'தோழர்கள். ஊ.பு.அ.சௌந்தர பாண்டியன். வி. வி. ராமசாமி. எஸ். முருகப்பர். கி.ஆ.பெ.விஸ்வநாதம். முதலியோர் வெளியிட்ட அறிக்கையை வாபீஸ் வாங்கிக்கொள்ளும்படியும் இயக்கத்தினுடைய வேலைகளை முன்போல் தீவிரமாகச்செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

3. பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரும்' முதிர்ந்தபருவத்திலும் பார்ப்பனரல்லா மக்களுக்கும் நாட்டுக்கும் உண்மையுடன் உழைத்துவந்தவருமான திவான் பகதூர். டி.வரதராஜலு நாயுடு அவர்கள் காலஞ்சென்றதுபற்றி இச்சங்கம்வருந்துவதுடன் அவரது குடும்பத்தார்க்கும் அநுதாபம் தெரிவித்துக் கொள்ளுகிறது.

4. நமதுசங்க அங்கத்தினர். அ.ந.ப. பஞ்சாட்சரம் அவர்கள் இளம் வயதில் காலஞ்சென்றதுபற்றி இச்சங்கம் வருந்துவடன் அவர் குடும்பத்தார்க்கும் அனுதாபம் தெவித்துக்கொள்ளுகிறது. (ஒருகிருபர்)

---

# இளைஞர்களும், இடையூறுகளும்.

(ஒரு மாணவன்)

உலகை முன்னேற்றத்திற்கு முதற்படியாகிய இளைஞர்களுக்கு இருதுறையில் இடையூறுகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளுள் ஒன்று அரசியல் போராட்டம், மற்றொன்று சமூகவேற்றுமை. இவ்விரண்டும் குறுகிய நோக்கமுடையவர்களாலேயே உண்டாகின்றன. ஆகலின், இக்குறைகளைப்போக்கவல்லவர் பரந்த நோக்கமும், சிறந்த கொள்கையும் உடைய அறிஞர்களே ஆவர்.

எனவே, அவர்கள் தற்காலம் என்ன செய்கின்றனர்? எந்நிலையில் இருக்கின்றனர்? ஏன்? என்பன போன்ற சிலவினாக்களை நம்முள் நாமே வினவிக்கொண்டு விடை இறுக்கமுயன்றால் தற்கால உலகின் தாறுமாறான நிலைமை நன்குவிளங்கும் அஃது விளங்கவே நமக்கு நம்கடமையை ஆற்றும்திறமையும் தெள்ளிதின் அமையும்.

முன்கண்ட இருபெரும் இடையூறுகளும் தன்னலம் ஒன்றே கருதியதால் குறுகிய அறிவுள்ளம் உடையவர்களால் தோன்றியுள்ளமையால், யாவரின் நன்மை தீமைகளையும் தமதெனக்கொண்டு தொண்டுசெய்ய வேண்டி முன்வரும் அறிஞர்களையும் அவர்கள் அடக்கி, ஒடுக்கி, நிலைகுலைத்துக் கொலைக்குந் துணிகின்றனர். என்னே! இக்கேடர்களின் கொடுஞ்செயல்! இவ்வஞ்சகர்களின் பெருந்தொகை! இத்தன்னலவெறியர்களின் வெறும் ஆர்ப்பாட்டம்! வீண்முயற்சி! அம்மம்ம! இவர்களின் கொடுமை மலையினும், கடலினும், வானினும் பெரிதென வழங்கினும் பொருந்தும்.

இனி, இத்தகைய வஞ்சகர்களின் வாழ்வு மிஞ்சாதென்பதில் கொஞ்சமும் ஐயமில்லை. அடக்கப்பட்டுக்கிடந்த அறிஞர்கள் எல்லாம் விழித்தெழுந்தனர்; உண்மையாகிய பொழுது புலர்ந்தது. "மக்களின் உயர்வைக் கெடுத்திடும் கொடிய வஞ்சகந்தன்னை மடித்திடல் வேண்டும்!" என்ற உறுதி உரையும் எழுந்தது; உலகும் உண்மையை நாடியுள்ளது! அதைச் செவ்வனேதிரட்டி நிலை நாட்டுவான் தொடங்கும் ஒவ்வொரு வருக்கும் வேண்டுவது உறுதியான உள்ளம் ஒன்றே! அது அடையவேண்டின், முன்கூறிய இருவகையில் இளைஞர்களுக்கு ஏற்பட்டிருக்கும் இடர்ப்பாடுகளை ஆராய்ந்து, அவற்றின் தோற்றுவாய்களை வெளிப்படுத்தி, அதன் அதன் ஆற்றலுக்கேற்ப எடுத்துக் கொள்ளும் ஊக்கத்தின் அளவில் உறுதிபெறுவோம்! அஃதும் நிலைத்து அரும்பயன் உலகிற களிக்கவல்லதாக அமைய வேண்டின், இளைஞர்களின் உடலும் உள்ளமும் ஒருங்கு உறுதி பெறல்வேண்டும்.

இப்பால், முதன் முதலாக இளைஞர்களின் கல்விப்பயிற்சியில் அவ்விருகூறான இடையூறுகளும் எங்ஙனம் நிகழ்கின்றன? என்று காண்போம்; இன்றைய இந்தியாவின் நிலைமையை உலகம் இமையாது நோக்கிக்கொண்டிருக்கின்றது. ஒருபுறம் சட்டமறுப்பியக்கம் தொடங்கிய தொண்டர்கள் தம் முள்வஞ்சகர்கள் வந்து கலந்தமாயம் அறியாது மயங்குகின்றனர்; மற்றொருபுறம் பொது நலத்தை அமைதியாகவும்நடுநிலைமையோடும் இருந்து விரும்பி உழைக்கும் அறிஞர்கள் எழுந்து, உண்மையை விளங்க வைக்கவேண்டி முயல்கின்றனர். என்றாலும், இவர்களின் நோக்கத்திற்கே அடிப்படையான இளைஞர்களுக்குக் கற்பிக்கப்படும் கல்வியையும் அவர் களுக்குத்தினவாழ்க்கையில்—உலக இயல்பை ஆராயுந்துறையில் குன்றியுள்ள ஊக்கத்தையும் கவனித்தார்களில்லை.

இப்பொழுது பள்ளிக்கூடங்களில் இளைஞர்கள் பயிலும்பாடவரிசையை நோக்கும் ஒவ்வொரு உண்மை அறிஞனும் உள்ளம் நலியாதொழியான். அதனுள் அரிதாகத் தென்படும் இயற்கைப் பொருட்பாடம் கணிதம், இலக்கணம் ஆகியவற்றைத்தவிர, இளைஞர்களின் பின் கால உலக வாழ்க்கைக்கு உதவும் நூல் அரிதினும் அரிதென்றே கூறுதல்வேண்டும். அம்மட்டோ? பாடமாகவைத்திருக்கும்—நெட்டுருப் பண்ணற்குரியன எனக் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் நூல்களில் பெரும்பாலானவை இளைஞர்களின்வாழ்வையே கெடுக்கும் பொருளமைந்தனவாகவே அமைந்துள்ளமை பெரிதும் வருந்தத்தக்க தாகும். அதாவது, இளைஞர்களுக்கு இன்றியமையாதனவாக அமையவேண்டிய அச்சமின்மை, இரக்கம், ஊக்கம், ஒற்றுமை முதலிய அரியபண்புகளை அவர்கள் உள்ளத்தில் பதியாது தடுக்கும் குறுகிய நோக்கோடு வரையப்பட்ட நூல்களே பாடமாக அமைந்துள்ளன. அவற்றுள் அரிதாகக்காணுறும் சில தொடர்களும் முன்னர்க்கூறிய இயற்கைப்பொருளாலும் கடலில் கரைத்த பெருங்காயமாகி விடுகின்றமை வெளிப்படை. மேலும், பெரும் பாலானவர்களின் போதனை முறையில் நற்பொருள் ஒன்றும், உள்ளத்தில் பதியாது போதல் தெளிவு. இந்நிலைமையில் ஜாதிமத வேற்றுமையால் விளையும் தீங்கோ அளவிடற்கரிதாகும், உதாரணமாக இரண்டுமாதங்களுக்குமுன் இராஜாமடத்தில் சேர்ந்து படித்து வந்த ஆதிதிராவிட மாணவன் ஒருவனை இப்பள்ளியினின்று விலக்கிய செய்தி திராவிடனில் வெளிவந்தது யாவரும்அறிந்ததொன்றாகும். இங்ஙனம் பொது மக்கள் பொருள் ஒருசில வஞ்சகர்களுக்கு மட்டும் செலவிடப்படல்தகுமா? இவ்வளவுக்கும் காரணம் இந்நாட்டில் உள்ள வைதீக மக்களே ஆம். இத்தகையார்க்கு அறிவுச்சுடர் கொளுத்துதல் அறிஞர் கடமைஅன்றோ? எம் போன்ற மாணவர்கள் என்செய்ய வல்லோம்? உலகின் மற்றப்பாகங்களில் இளைஞருலகம் அறிவுத்துறையில் தழைத்தோங்க இந்நாட்டில் மட்டும் இங்ஙனமிருப்பது என்னகருதி இருக்கிடக்க,

வைதீகர்களாலேயே போற்றப்படும் இளங்கோவடலூரார் முதலானவர்கள் கூற்றுக்களை ஏன் அவர்கள் ஒத்துக்கொள்வதில்லை? அவற்றின் படிநடப்பதில்லை? "மந்திரம், தெய்வம், மருந்தே நிமித்தம், தந்திரம், காலம் கருவி, இடன் என்று எட்டுடன் அன்றே இழுக்கடை மரபின் கட்டேன் மாக்கள் துணிஎனத்திரிவது" என்ற போலிகளையும், "மதியைக்கெடுத்து "மானம்" எனும் வழக்கைப்பெருக்கி இடர்ப்படும் ஓர் விதியைக்குறித்த சமயநெறி என்று வேற்றுமை கற்பித்து மக்களின் உள்ளத்தை மடக்கு நெறியைக்கண்டித்துரைத்துள்ள எச்சரிக்கைகளை நன்குணர்ந்தால் பிறரை வஞ்சிக்கும் குணத்திற்கு அவர்கள் உள்ளமே இடங்கொடாதென்பதை உணர்ந்துள்ளனர் போலும்! இப்படிற்றொழுக்கம் இவர்களை விட்டுவிலகும் நாள் வெகுதூரத்தில் இல்லை, இன்றைய இளைஞர் நல்லறிவு பெற்றால் போதும். வேறு முயற்சி எல்லாம், வறுமையாகும்.

எனவே, இளைஞர்களே! அவரவர் தம் தம் கடமையை அமைதியோடு செய்தலே தகுதி ஆகலின், எதை எவர் கூறினும் உடனே உண்மை என்று நம்புங் குணத்தை விலக்கி, எதையும் இயற்கையோடு பொருந்த ஆய்ந்து முன்னிருக்கும் முழுமுதல் உண்மையோடு சேர்த்துக்கொள்ள வேண்டும். எப்பொழுதும், யாவருக்கும் பொதுவாக இருத்தலே "உண்மை" யின் அறி குறி யாகும். மேலும் தடைகள் நம்மைத்தடுப்பவல்ல தாண்டிச்செல்ல ஊக்கமளிப்பதே உண்மையும் உறுதியும் உடன் எழுவன.

---

## "ஜகத்ஜோதி"

(சென்னை கே. எஸ். நாதன்)

இப்பூவுலகின்கண் பல்லாண்டுகளாக மதம், ஜாதி, கோவில், குளம் என்றும் இன்னும் இதர பொருளற்ற மூட மௌடீக பழக்க வழக்கங்களில் ஈடுபட்டு தனது வாழ்வை வீணாக்கி மனிதத் தன்மையற்றுக்கிடந்த மானிட ஜன்மத்துக்கு யாரோ ஒருவர் புத்துயிர் அளித்தாராம். அவர்யார்? அவர் தான் ஈரோடு ஈ. வெ. இராமசாமிப்பெரியார். அப்பெரியார்தனது பிறப்புரியாமையாலும், திரிகரணசுத்தியாலும் தான் உலகத்தில் பிறந்ததெதற்கென்றும், தன்னால் உலகத்திற்கு என்ன பயன் ஏற்படவேண்டுமென்றுணர்ந்துஅம்மெய்ஞானி "சுயமரியாதை;" என்ற உயரிய பெயரினையுடைய ஓர் புனித இயக்கத்தை ஆரம்பித்தார். ஆரம்பத்திலேயே இப்பெரியாரின் கொள்கைகளுக்கு மாறுபாடாகவும், இச்சங்கத்தை அழிக்க வேண்டுமென அனேக சைவப்பழங்கள் கதறியும், பல வேதாந்திகளும் சாமி, கடவுள், காட்டேரி, முனீச்சுவர பக்தர்கள் கங்கணம் கட்டிக்கொண்டு தம்மாலியன்ற வரையில் தீங்கிழைக்க ஆரம்பித்தனர். (சுய அறிவுடையோனும், தனது சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்பவனும் இயற்கை ஒளிபரவும் இவ்விருபதாம் நூற்றாண்டிலே இச்சங்கத்திற்கிடையூறு விளைவிப்பதற்கு நியாயமில்லை) ஆனாலோ பகுத்தறிவின்றி பிறர் வலையில் சிக்குண்டு அவைகளின் ஆக்ஞைப்படி ஆடுவதும், பாடுவதுமே கைக்கொண்டு வந்த நம் நாட்டு மக்களில் சிலர் இவ்வியக்கத்தின் கொள்கைகளை கொஞ்சமேனும் உணரவும், அறியவும் சக்தியற்றவர்களாய் தீங்கிழைத்த போதிலும் உயரிய நோக்கத்தையுடைய இவ்வியக்கம் தனது கொள்கைகளில் அணுவளவேனும் மாறுபடாமல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து லக்ஷக்கணக்கான ஜனங்களுக்கு இதன் கொள்கைகளை போதித்து முன்னேற்றமடையச் செய்துகொண்டே வருகிறது. இவ்வியக்கத்திற்கு எழாண்டுகளாய் அரும் பெரும் தொண்டாற்றிவரும் அருந்தமிழ் "குடி அரசு"க்கு எட்டாவதாண்டு பிறந்திருப்பதைக்காண நம்மிந்திய நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் கண்ணாரக்கண்டு மனமாரக்களிப்பார்களென்பதில் ஐயமில்லை. ஆதலால் ஒவ்வொரு இந்தியனும் வாரம் தவறாமல் "குடி அரசை" வாங்கிப்படிப்பதை தனது முதல் கடமையாகக் கொள்ளல்வேண்டும்.

---

## "போர்முரசு"

சில ஏஜண்டுகள் தங்களது பாக்கிகளை அனுப்பாமலும், எழுதும் கடிதங்கட்குப் பதில் இறுக்காமலும் இருப்பதால், அவர்களிடமிருந்துபாக்கியை வசூலிக்கும் முயற்சியிலும், யோக்கியப்பொறுப்பும், உண்மை ஊக்கமும் உள்ள ஏஜண்களைச் சேர்க்கும்துறையிலும், நாம் நம்முடைய கவனத்தை செலுத்தி வருவதால், தற்காலிகமாக பத்திரிகை நிறுத்தப்பெற்றுள்ள தென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

ச. ம. சி. பரமசிவம்,
ஆசிரியர், போர்முரசு,

# 'அடிமை உலக விடுதலை'

## திருமதி. நீலாவதி சொற்பொழிவு.

கோட்டாறு சுயமரியாதை வாசிப்புச்சாலை மூன்ருவது ஆண்டுவிழாவில் "அடிமை உலகவிடுதலை" என்பது பற்றி தோழர் எஸ். நீலாவதி அம்மையார் பேசியதின் சாரம் பின்வருமாறு:—

சகோதரர்களே!

சகோதரிகளே!!

இங்கு நான்பேசவேண்டிய விஷயம் "அடிமை உலக விடுதலை" பற்றியதாகும். அடிமைஉலகிற்கு ஆளாகியிருப்பவர்கள் பெண்கள் என்ருல் அதைநீங்கள் மறுக்கமாட்டீர்கள். அடுத்தபடியாகஇந்தியர்களைஅடிமைப்படுத்தியிருப்பது தீண்டப்படாதவர் என்னலாம். தேசத்தில் சரிபாதியான பெண்கள் தாங்கள் தாழ்ந்தவர்களாகவும் அடிமைகளாகவும் மனதில் எண்ணிக்கொண்டிருக்கின்றனர். எல்லா உரிமையும் பெறசக்தியுடையவர்களாயிருந்தும் கல்வி கற்காத காரணத்தாலும் மதசாஸ்திர புராணங்களின் முட்டுக்கட்டைகளினுலும் முன்னேற முடியாமல் அடிமைஉலகத்தில் வாழவேண்டியவர்களாயிருக்கின்றனர். பெண்கள் முன்னேற்றமடைய சுயமரியாதை இயக்கத்தில் பல வசதிகள் இருக்கின்றன. இது மாதிரிவேறெந்த இயக்கத்திலும் சொல்லப்படவில்லை. பெண்கள் அடிமை உலகிலிருந்து மீளுவதற்குச்சுயமரியாதை இயக்கம் ஓர் ஊன்று கோலாகும். இந்நிலையில் பெண்களிற் பெரும்பாலோர் கல்வி கற்காததினுலும் இம்மாதிரி பிரசார சந்தர்ப்பங்களில் கலந்து கொள்ளாததினுலும் விஷயம் ஒன்றும் தெரியாமலிருக்கிருர்கள். உண்மையிலேயே சுயமரியாதைக் கொள்கை இன்னதென்பதே பெண்களுக்குத் தெரியவில்லை என்றுகூறலாம். அவர்களுக்குஎப்படித் தெரிந்திருக்க முடியும்? இப்பொழுது பாருங்கள்! இந்தக் கூட்டத்தில் ஆடவர்கள் சுமார் இரண்டாயிரம் பேர் இருக்கும்பொழுது பெண்கள் நூறுபேர்கூட வரவில்லையே. பாக்கி ஆயிரக்கணக்கானபெண்கள் குறைகிருர்களே? அவர்களெங்கே? ஏன் வரவில்லை? இங்கு சொல்லப்படும் விஷயம் அவர்களுக்கு சம்பந்தமற்றதா?

ஆண்கள் முன்னேற முடியவில்லையென்ருல் அதற்குக்காரணம் இங்குவர வொட்டாதபடி தடுக்கப்பட்டிருக்கும் ஆயிரக்கணக்கான பெண்களேயன்ருே! பெண்கள்ஒன்றிலும் ஈடுபடாமல் தாங்களாகவே நல்லது இதுகெட்டது இதுஎன்று எவ்வண்ணம்அறிந்துகொள்ளஇயலும்? சிலபெண்கள் கூறுகிருர்கள் கூட்டத்திற்கு அனேக ஆண்கள் வந்திருப்பார்களே நாங்களெப்படி வருகிறதென்று. அந்தப்பெண்களை யாரென்று எனக்குத்தெரியும். திருவிழாக்காலங்களில் பதினுயிரக்கணக்கான ஆடவர் கூட்டத்தில் ஒருவர் மேல் ஒருவர் தள்ளிக்கொண்டு சுவாமிதெரிசனம் செய்கிறபொழுது ஒவ்வொரு பெண்களின் மானமும் ரொக்கவிலைக்கு விற்கப்படுகின்றது. திருவிழாக்கூட்டத்திற்கு வருகிற ஆடவர்களின் அயோக்யத்தனத்திற்கு மிஞ்சினதாகவேறெந்தக் கூட்டத்திற்கு வருபவர்களிடமும் அயோக்யத்தனம் காணமுடியாது. அதுவும் இம்மாதிரி கூட்டங்களில் அம்மாதிரி ஆண்களுக்கு வேலையேஇல்லை. ஆகவே இம்மாதிரிக்கூட்டங்களுக்கு பெண்கள் விஜயம் செய்வதனுல் யார்குடியும் கெட்டு மானமிழந்து போகமாட்டாது என்பதெனது அபிப்பிராயம் ஆகவே பெண்கள் தாராளமாகவரலாம் தங்கள் தங்களுக்குள்ள குறைபாடுகளை பலஆடவர்கள் முன்னிலையில்தெரிவிக்கலாம். ஆடவர்களும் தங்கள் தங்களுக்குள்ள குறைபாடுகளை பெண்களிடம் தெரிவிக்கலாம் அனைவரும் பலவிஷயங்களை யோஜித்து வாழ்க்கையிலேற்பட்டிருக்கும் பல இன்னல்களை விலக்கிக்கொள்ளலாம் வருங்கால மக்களை என்னவிதமாக்கலாம் என்பதைப்பற்றி யோஜிக்க மிகவசதியாக இருக்கும். ஆக இந்தவிதமல்லாமல் ஆடவர் கூட்டம் மட்டும் இரண்டாயிரமல்ல ஐயாயிரம் கூடியிருந்தாலும் என்ன பயன் கிடைக்கும்? இங்கு நடைபெறுபவற்றைக்கவனித்துக்கொண்டு வீட்டில் போய் நடத்தப்போனுல் பெண்கள் ஒத்து வரமாட்டேனென்கிருர்கள்என்கிறீர்கள் ஒத்து வரஎப்படிமுடியும்? தகப்பனுக்கு திதிகொடுத்தலென்பது பார்ப்பான்புரட்டு என்றும் தகப்பனுக்குப் போய்ச்சேருவதில்லை அத்தனையும் வயிற்றுப்பிழைப்பு; இதேமாதிரிதான் மற்ற ஏமாற்றுக்களும் என்று இந்தவிடத்தில் விளக்கிச்சொல்லப்படுகின்றன அதை நீங்களும் உண்மைதான் என்று ஆராய்ந்து பாாத்ததின் பேரில் ஒப்புக்கொண்டு இனிபார்ப்பானுக்கு திதிகொடுப்பதில்லை என்று முடிவு கட்டிக்கொண்டு வீட்டிற்குப் போகிறவர்கள். இதற்கு முன்பு உங்கள் வீட்டு பெண்களிடம் ஒருபார்ப்பான் வந்திருந்து கொண்டு. இறந்தவர்களுக்குத் திதிகொடுக்க வேண்டும் அது கொடுக்காவிடில் அப்படிப்போவார்கள் இப்படிப்போவார்கள் என்றெல்லாம் பயமுறுத்தி வைத்துவிட்டுப் போய்விடுகிருன் நீங்கள்போய் உங்கள் சுயமரியாதையைச்சொன்னவுடனே அவர்கள் கதையையும் அவிழ்க்கிருர்கள் எப்படிஒன்றுபட முடியும். இதேமாதிரிதான் வாழ்க்கை போராட்டமாக நடைபெறுகின்றன. இந்தநிலைமையில் உள்ள பெண்கள் தங்கள்குழந்தைகளையும் சிறு வயதிலிருந்தே கல்வி கற்பிக்கச்செய்யாது; பொது அறிவு பெறச்செய்யாது; 5 வயது குழந்தையாயிருக்கும் பொழுதே குடத்தைக்கொடுத்து தூக்கிப்பழகம்மா! தூக்கிப்பழகு!! என்கிருர்கள் குடந்தூக்கத்தெரிவதற்கு எத்தனை நாட்கள்வேண்டும். இக்குழந்தைகளை படிக்கவைக்கக்கூடாத? சமையல் பழகிக்கொள்ள வேண்டுமாம். நான் வேண்டாமென்று கூற முன்வரவில்லை. நன்ருகப் படித்துக்கொண்டால் சமையல் பழகுவதென்பது கடுமையான விஷயமா? பெற்ருேர்கள் தங்கள் குழந்தைகளுக்குப்புரியும் இன்னல்களில் மிகசிறந்தது பால்யவிவாகம் ஒன்ருகும். பால்யத்தில்மணம்செய்வதற்கு அர்த்தமேயில்லை. அதுவும் மேற்கண்டமூடத்தனங்களில் ஒன்ருகும். யாராவது பெற்ருேரிடம் சென்று மணமக்களின் சம்மதம்தெரிந்து கொண்டீர்களாஎன்ருல் தலையிருக்க வாலாடுதா என்கிருர்கள். வாழ்க்கைநடத்துகிறது அவர்கள் சொல்லுகிறது; வாலா? தலையா? என்பதை அவர்கள் உணருவதேஇல்லை. சாரதாசட்டம் பேரளவில்இருக்கிறதே யொழிய காரியத்தில்ஒன்றுமில்லை. இப்புண்ணிய காரியத்திற்கு ஒருஆச்சாரி இருக்கும் பொழுது வேறுஎன்ன வேண்டும். விபசாரிகளைக் காக்க மூர்த்தி; இதைவிட மானக்கேடு வேறென்ன வேண்டியதிருக்கிறது. இறுதியாக உங்களிடம் சொல்லவேண்டியதும் அதை நீங்கள் யோசித்துப்பார்க்க வேண்டியதுமான ஒரு விஷயம். இதுவரை ஆண்களாகிய நீங்கள் பெண்களை அடிமைப்படுத்தி என்னென்ன முன்னேறியிருக்கிறீர்கள் என்பதாகும். (கேளுங்கள் கேளுங்கள்.) நீங்கள் எங்களை அடிமைப்படுத்தியதைத்தவிர வேறென்னமிச்சம்? ஒருபாலுக் கொருபால் அடிமைப்படுத்த வேண்டாமென்பதே எனது வேண்டுகோள் மேலும் மனிதஉயிர்களைமனிதஉயிர் அடிமைப்படுத்துவதென்பது மிகஇழிந்தசெயலாகும் பெண்களுக்கு குடைபிடித்தல் மிதியடிஅணிதல் முதலிய சீர்திருத்தங்களை வலியுறுத்தி நிலைநாட்டுங்கள்! பெண்கள் பாதத்தைப்பற்றி ஒவ்வொருபுலவர்களும் வருணித்திருக்கிருர்கள் சொல்லமுடியாது (சிரிப்பு) அப்பேர்ப்பட்ட மலரனைய பாதத்தை காப்பாற்றும் விதம்சொல்ல மறந்து போய்விட்டார்களோ என்னவோ! (சிரிப்பு) குடை பிடித்தல் மழைக்குத்தான் என்று உணருங்கள், அதனுல் உங்கள் பெண்களிடம் தங்கியிருக்கும் கற்பு கெட்டுவிடாது. கற்பு கற்பு என்று சொல்லி பெண்ணுலகத்தை ஏமாற்றப்படுகிறது. கற்பு என்பது ஒழுக்கம் என்றுபொருள் கொள்ளப்படுமாயின் அதை நானும்ஒப்புக் கொள்ளுகிறேன். பயந்தாடத்தல், அடிமையாயிருத்தல், ஒருபயனும் அனுபவியாதிருத்தல், கணவனை கூடையில் வைத்து தலையில்தூக்கிக் கொண்டுபோய் விபசாரிவீட்டில்விடுதல் ஆகியவைபோன்றவைகளெல்லாம் கற்புஎன்ருல் அதற்குமூடத்தனம் என்றுதான் நான் பொருள் கொண்டிருக்கிறேன். கற்பு என்றவிஷயம் பெண்களிடம் மட்டும் புகுத்தப்பட்டதின் ரகசியம் ஆணுக்குப் பெண் அடிமையாயிருக்க வேண்டும்என்பதொரே நோக்கமாயிருக்குமென்று எண்ணுகிறேன். பெண்ணுலகை அடிமைப்படுத்தியிருக்கும்வரை எந்த ஒருஇயக்கமும் உத்தேசமும் விடுதலையடைய முடியாதென்பது எனது தீர்க்கமான நம்பிக்கையாகும்.

---

## மோட்டார் திருடர்.

### சென்னையில் கொள்ளை.

சென்ற 25-5-32 இரவு சென்னையில் சினிமாப்படங்களில் பார்ப்பது போன்ற ஒரு ஆச்சரியமான கொள்ளை நடைபெற்றது. சென்னை, சைனு பஜார் ரோட்டில் உள்ள குலாப்சந்த் கம்பெனியின் குமாஸ்தாக்களான பையாலி, ராமசசந்திராவ், நாராயணசெட்டி என்னும் மூவரும். இரவு 8மணிக்கு, சௌகார்ப்பேட்டை, பெரியநெய்க்காரன் தெரு வழியாகச்சென்று கொண்டிருந்தனர். இவர்களில் பையாலி என்பவர், சுமார் 8000 ரூ. மதிப்புள்ள நகைகள்அடங்கிய பெட்டியையும், ராமச்சந்திர ராவ் என்பவர் சுமார் 15000 ரூ. மதிப்புள்ள நகையும் பணமும் அடங்கிய பெட்டியையும் சுமந்து சென்றனர்.

அச்சமயம் இவர்கள் பின்னுல் ஒரு மோட்டார்கார் சப்தத்துடன்ஊதிக் கொண்டு ஓடிவந்ததாம். அதுகண்டு மூவரும் தெருவின் ஓரத்தில் ஒதுங்கினுர்களாம். அப்பொழுது திடீரென்று மூவர் அவர்கள் பக்கமாக ஓடிவந்து மோட்டாரை மறித்தார்களாம். அவர்களில் ஒருவன் ஆவேசம் கொண்டவன்போல் பயங்கரமாகக் கூச்சலிட்டானும். உடனே பையாலி என்பவர்பயந்து திரும்பிப் பார்த்தாராம். அச்சமயம் ஒருவன் அவரது பிடரியில் ஓங்கி அறைந்து, அவர்வைத்திருந்த பெட்டியை அபகரித்துக்கொண்டானும். பிறகு மற்றவர்கள் ராமச்சந்திர ராவ் வைத்திருந்த பெட்டியையும் பிடுங்க முயற்சித்து, முடியாமல். அவசரமாகமோட்டாரில் ஏறிக்கொண்டு ஓடிவிட்டார்களாம். இதுசம்பந்தமாகப் போலீசார் புலன் விசாரித்துவருகின்றனர்.

---

## உடனே தேவை.

நமது பத்திரிகை விற்பனை செய்வதற்கு கீழ்க்கண்ட நகரங்களில் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் உடனே தேவை.

சேலம்.
கோயம்புத்தூர்.
திருப்பூர்.
பொள்ளாச்சி.
ஜோலார்பேட்டை.
தஞ்சாவூர்.
வாணியம்பாடி.
திண்டுக்கல்.
விபரங்களுக்கு எழுதவும்.

மேனேஜர்.


# குடி அரசு.

ஈரோடு 1932 மேமீ 29-உ


## விபசாரம் ஒழியுமா?

—:0:—

"விபசாரம்" என்பதற்குச் சாஸ்திரங்களில் கூறப்படும் பொருள் பலவகையாகும். பொதுவாக இப்பொழுது "பொருள் வாங்கிக்கொண்டு ஆடவர்களின் இச்சையைப் பூர்த்தி செய்வதையே தொழிலாகக் கொண்டு ஜீவனம் பண்ணுவதையே விபசாரம்" என்று உலக மக்கள் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. பொருள் பெறாமல் சிற்றின்ப ஆசையுடன் கண்டவர்களை யெல்லாம் காதலிக்கும் ஆண்களின்செய்கையையும்பெண்களின் செய்கையையும், "விபசாரம்" என்றே கூறலாம்.

இத்தகைய "விபசார"த்தினால் தேசத்தில் உண்டாகிவரும் தீமைகள் எண்ணாற்றவை. கேட்கச் சகிக்காத கொடும் பிணிகளும், பார்க்கப்பொறுக்காத பெரும் நோய்களும் விபசாரத்தினால் உண்டாகின்றன. விபசாரத்தில் ஈடுபட்டிருக்கும் ஆண்களும், பெண்களும்நோய்வாய்ப்பட்டு வருந்துவதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளும் நோய்க்கு ஆளாகி ஜன சமூகத்தையே பிணியடையச் செய்யும் காரணங்களாக இருக்கின்றனர்.

இன்னும் "விபசார"த்தினாலேயே, கொலை, களவு முதலிய தீச்செயல்களும் மிகுதிப்படுகின்றன. ஆதலால் இக்கொடிய விபசாரத்தை ஒழிக்க உலகமெங்கும் முயற்சி நடைபெற்று வருகின்றது; அறிஞர்கள் எல்லோரும் இக்கொடுமையைப்பற்றிப் பேசி வருகின்றனர்.

ஜன சமூகத்தை அரித்துக்கொல்லும் புழுக்களில் "விபசார"த்தைப்போன்ற வேறொரு கொடிய புழு இல்லையென்றேசொல்லலாம். பண்டைக்காலந்தொட்டு வழங்கி வரும் அனேக தீய விஷயங்களில் "விபசார"மும் ஒன்றாகும்.

பழந்தமிழ் நூல்களில், "விலைமகளிர்" "பொது மகளிர்" "வரைவின் மகளிர்" என்னும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. இவர்களுடைய தொழில் "விபசார"மேயாகும். "விபசாரம்" என்பது சாஸ்திரங்களின் மூலம் குற்றமாகக் கருதப்பட்டாலும், ஜன சமூகத்தில்அது தாராளமாகநடைபெற்றே வந்திருக்கிறது. ஒரு ஆடவன், மணம் புரிந்துகொண்ட மனைவியோடுகூட "காதற் கிழத்தி" என்னும் பெயருடன் நிலையாக வேறொரு பெண்ணோடு சேர்ந்திருப்பதும் சில சமயங்களில் இதுவும் போதாமல் "கணிகையர்" இல்லங்களுக்குச் சென்று வருவதும் வழக்கமாகயிருந்ததாகவும் தமிழ் நூல்களால் அறியக் கிடக்கின்றது.

இதுவும் அல்லாமல், கோயில்களில் ஆடல்பாடல்களைச் செய்து கொண்டும், "சாமி"யையே கல்யாணம் செய்துகொள்ளப்பட்டது என்னும் அர்த்தத்தில் பொட்டுக் கட்டிக்கொண்டும், 'தேவரடியார்' எனப் பெயர் பூண்டும் வாழும் கூட்டத்தினரும், விபசாரத்திற்குக் காரணமாக இருப்பதும்நாடறிந்த செய்தியாகும். இத்தகைய "தேவரடியார்"களைப் பற்றியும் அவர்கள் கோயில்களிலுள்ள கல்லுச்சாமிகளுக்குப் (அவைகளை உண்டாக்கி வைத்திருக்கும் புரோகித ஆசாமிகளுக்கும்) பெண்சாதிகளாக இருந்து தொண்டு புரியவேண்டிய அவசியத்தைப் பற்றியும் சமஸ்கிருத நூல்களில் சொல்லப்பட்டிருப்பதாகக் கூறுகின்றனர்.

தமிழ் நூல்களிலோ பண்டைக் காலத்தில், விபசார வாழ்க்கையை மேற்கொண்டிருந்த "விலைமகளிர்" "பொது மகளிர்" "வரைவின் மகளிர்" என்ற பெயருடைய கூட்டத்தார் போக, ஆடல் பாடல்களைத் தொழிலாகக் கொண்டிருந்த, "பாடினி" "பாணினி" "விறலி" என்ற பெயருடைய ஒரு கூட்டத்தினரும் வேறேயிருந்திருக்கின்றனர். இக்கூட்டத்தாருக்கும், தற்காலத்தில் உள்ள "தேவரடியார்" என்னும் கூட்டத்தார்க்கும் ஏதாவது … பந்தம் இருக்கக்கூடுமா? … ஆராயத்தக்க விஷயமாகும்.

ஆகவே இந்த "விபசாரம்" என்னும் கொடிய வழக்கம்இன்று நேற்று ஏற்பட்டதல்ல வென்பதையும், பல ஆயிரக்கணக்கான வருஷங்களாகவே நமது நாட்டில் நிலைத்து வருகிறதென்பதையும் அறியலாம்.

முற்காலத்திலிருந்த, வைதீகர்கள், புலவர்கள், நூலாசிரியர்கள் முதலியவர்கள் அனைவரும் விபசாரத்தின் தீமையைப்பற்றிக்கூறாமல் விடவில்லை. விபசாரத்தின் கெடுதியைப்பற்றிச் சொல்லாத நீதி நூல்களோ, இலக்கியங்களோ, கதைகளோ ஒன்றுமில்லை என்று கூறலாம் "கொலை,களவு, பொய், கள், காமம்" என்று கூறப்படும் பஞ்சமகா பாதகங்களில் "காமம்" என்று குறிப்பிட்டிருப்பது விபசாரத்தையேயாகும். இவ்வாறு வைதீகர்களும், நீதிநூல்களும், புலவர்களும், நூலாசிரியர்களும், விபசாரத்தை ஜனசமூகத்தினின்றும் நீக்குவதற்குப் பண்டைக்கால முதல் முயற்சி செய்துங்கூட, அக்கொடிய வழக்கம் நாளுக்கு நாள் வளர்ந்து வந்ததே யொழியக் குறைந்தபாடில்லை. இவ்வாறு "விபசாரம்" குறையாமல் வளர்ந்து வந்ததற்குக்காரணம், "விபசாரம்" தோன்றுவதற்கு அடிப்படையான காரணம் என்ன என்பதை ஆராய்ந்து அதை அடியோடு ஒழிக்க வழி தேடாமையேயாகும்.

"விபசாரம்" வளர்ந்ததற்கு முதற்காரணம், ஆடவர்களின் ஆணவமேயாகும்.பெண்கள்விஷயத்தில் மாத்திரம், "கற்பு", "பதிவிரதாதர்மம்" என்ற கட்டுப்பாடுகளை வற்புறுத்தி, ஆண்கள் விஷயத்தில் வற்புறுத்தாமல் விட்டதனால் பெண்கள் பலர் விபசார வாழ்க்கையில் ஈடுபட நேர்ந்தது, பணம் கொடுத்துப் பண்டங்களை வாங்குவோர் இல்லாவிட்டால், பண்டங்களை விற்பனைக்கென்று வைத்துக் கொண்டு வாங்குவோரை எதிர்பார்ப்பவர்களும் இருக்கமாட்டார்களல்லவா? அது போலவே சிற்றின்ப வேட்கைகொண்ட முரட்டு ஆண்கள் பலரால் பலவந்தப் படுத்தப்பட்டு விபசாரியானவர்கள் பெருகியே விபசாரிகள் அதிகமானார்கள் என்று கூறுவது எவ்வகையிலும் பொருந்தாமற் போகாது.

இரண்டாவது சமூக வாழ்க்கையில் ஏற்படுத்தப்பட்ட பல கொடுமையான கட்டு திட்டங்களும் விபசாரத்தை மிகுதிப்படு … றின என்பதில் ஐயமில்லை.

காதல் மணமில்லாமை, விதவை மணம் இல்லாமை, விவாக விடுதலை உரிமை இல்லாமை, பெண்களுக்குச் சொத்துரிமையில்லாமை முதலிய சமூகக்கட்டுப்பாடுகள் பெண்கள் விபசாரிகளாவதற்கு முக்கிய காரணமாயிருப்பனவாகும்.

ஒருவர் மேல் ஒருவர் காதல் கொள்ளாத ஒரு தம்பதிகளின் வாழ்க்கை தூயவாழ்க்கையாக இருப்பது கஷ்டம். அத்தம்பதிகள் இருவரும் தங்கள் மன இச்சையைத் தகாத வழியில் தான் பூர்த்தி செய்து கொள்ள நேரும்.

பருவகாலத்தில் விதவையான பெண்களை சாஸ்திரங்களின் மேலும், மதத்தின் மேலும் பழி சுமத்தி மணஞ் செய்து கொடாமல் வைத்திருப்பதனால் விளையும் விபசாரக் கொடுமையை அளவிட்டுக் கூற யாரால் முடியும்? இன்று, குளங்களிலும், ஆறுகளிலும், கிணறுகளிலும், சாக்கடைகளிலும், குப்பைத் தொட்டிகளிலும் எறிந்து கொல்லப்படும் குழந்தைகளெல்லாம் விபசாரிகளாலும் விதவைகளினாலும்பெற்ற குழந்தைகள் என்பதை யார் மறுக்க முடியும்? வீட்டுக்கு வீடு விதவைகள் குடி கொண்டிருக்கும் ஜாதியில் தான் விபசாரங்களும், சிசுக் கொலைகளும் அதிகம் என்று அறியாதார் எவர் ?

இந்து சமூகத்தில், விவாக விடுதலை இல்லாமையால் நேரும் "விபசார"மும் அதிகமே. மனைவியின்மேல் விருப்பமில்லாத கணவன், அவளை நீக்கிவிட்டுத் தாராளமாக வேறுபெண்ணை மணம் புரிந்து கொண்டோ அல்லது வேறு ஒரு பெண்ணைச் சேர்த்து வைத்துக் கொண்டோ வாழலாம். ஆனால் மனைவியோ வேறு மணம் புரிந்து கொண்டு வாழ, சட்டப்படி இடம் இல்லாமையால் விபசார வாழ்க்கையையே மேற் கொள்ள நேருகின்றது.

பெண்களுக்கு கணவனுடைய சொத்திலும், பெற்றோர் சொத்திலும் உரிமையில்லாத காரணத்தால் கணவனாலும், பெற்றோர்களாலும் ஆதரிக்காமல் விடப்பட்டவர்கள்ஜீவனத்திற்குவேறுவகையில்லாத போது "விபசார"வாழ்க்கையையே கைக்கொள்ளும்படி நேருகின்றது.

ஆகவே உண்மையில் விபசாரம் ஒழிய வேண்டுமானால், ஆண்களுடைய ஆணவத்தை அடக்குவதற்கும் பெண்கள் சுதந்தரமாகிய காதல்மண உரிமை,

விவாக விடுதலை உரிமை, விதவா விவாக உரிமை, சொத்துரிமை முதலியவற்றிற்கும் சட்டங்களின் மூலம் பலவந்தமாக உதவி செய்ய வேண்டும்.

இப்பொழுது பல நாடுகளிலும் விபசாரத்தை ஒழிப்பதற்குச் சட்டங்கள் செய்யப்பட்டு அமுலிலும் இருந்து வருகின்றன. ஆனால் விபசாரத் தடைச் சட்டம் அமுலிலிருக்கும் எல்லா நாடுகளிலும் அது அடியோடு ஒழிந்து விட்டதென்று கூறத் தகாது.

ஒருக்கால் இந்தியாவைத் தவிர, மற்ற தேசங்களில் விபசாரத் தடைச் சட்டத்தினால் அதை அடியோடு நிறுத்திவிடக் கூடும். ஏனெனில் இந்தியாவைத்தவிர மற்ற இடங்களில் நடைபெறும் விபசாரம் வெளிப்படையானவை. வெளிப் படையாக வியாபாரம் போல் நடைபெறும் விபசாரத்தைத் தடுப்பது எளிது.

ஆனால் நமது நாட்டில் நடைபெறுவது போன்ற மறைமுகமான விபசாரங்களைத் தடுப்பது முடியாது. விதவைகள் செய்யும் விபசாரத்தையும், விவாக விடுதலை செய்து கொள்ள முடியாமல் பேருக்குத் தம்பதிகளாக வாழும் குடும்பங்களில் நடைபெறும் விபசாரங்களையும் எப்படித் தடுக்க முடியும்?

மேல் நாடுகளில் ரஷியாதேசம் ஒன்றில் தான் அடியோடு விபசாரம் ஒழிந்து விட்டதாகச் சொல்லப் படுகிறது. இதற்குக் காரணம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமூக வாழ்க்கையில் எத்தகை வேற்றுமையும் இருப்பதற்கு இடமில்லாமல் சட்ட மூலம் ஏற்பட்டிருக்கும் சௌகரியமே யாகும்.

இப்பொழுது நமது தேசத்தில் பரோடா, மைசூர், திருவாங்கூர் முதலிய சமஸ்தானங்களில் சட்ட மூலம் விபசாரம் தடுக்கப்பட்டிருக்கிறது. சென்னையிலும், பம்பியிலும் "விபசார"ச் சட்டம் நிறைவேறியிருக்கிறது. பம்பாய் நகரத்திலும், சென்னை நகரத்திலும் இச்சட்டம் அமுல் நடத்தப்படுகிறது. இப்படியிருந்தும் மேற்கண்ட சமஸ்தானங்களிலும் நகரங்களிலும் விபசாரக் கொடுமை அடியோடு ஒழிந்து விட்டதா என்றால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். பகிரங்கமாக நடந்த "விபசார" வியாபாரம் ஓரளவு ஒழிந்ததே யன்றி, மறைமுகமான விபசாரம் சிறிதும் குறையவேயில்லை.

இன்னும் இச்சட்டத்தை நாடெங்கும் அமுலுக்குக் கொண்டு வந்தாலும், தாட்சண்யமின்றிச் சட்டத்தின் விதிகளை உபயோகித்தாலும் விபசாரத்தை அடியோடு ஒழிக்க முடியாது. வெளிப்படையான "விபசார" வியாபாரத்தை ஓரளவு ஒழிக்க முடியுமே தவிர ரகசிய வியாபாரம் எப்பொழுதும் நடந்தே தான் தீரும்.

ஆகையால் மற்ற நாடுகளைப் போல், ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமூக விஷயங்களில் எத்தகைய வித்தியாசமும் இல்லாமல் சம சுதந்திரம் ஏற்படுத்தி அதை அனுபோகத்தில் கொண்டு வருவதன் மூலந்தான் விபசாரத்தை அடியோடு ஒழிக்க முடியுமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஆனால் நமது நாட்டு வைதீகர்களோ விபசாரம் தீயது என்று வாயளவில் மாத்திரம் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்குத் தமது வீட்டில் உள்ள விதவைப் பெண்மக்கள் செய்யும் விபசாரம் கண்ணுக்குத் தெரிவதில்லை. தமது குடும்பங்களில் உள்ள ஒற்றுமையில்லாத தம்பதிகள் செய்யும் விபசாரமும் கண்ணுக்குத் தெரிவதில்லை. தெரிந்தாலும் அதைக் குற்றமாகவோ விபசாரமாகவோ கருதாமல், அதற்குப் பரிகாரம் தேடாமல் கண்ணால் காணாதது போலவும், காதால் கேளாதது போலவும் இருந்து விடுகின்றார்கள்.

விபசாரம் ஒழிவதற்கு, காதல் மணம், விதவை மணம், விவாக விடுதலை, சொத்துரிமை முதலியவைகளே வழியென்று கூறும் சீர்திருத்தக்காரர்களையும், சுயமரியாதைக் காரர்களையும், "பெண்களை யெல்லாம் விபசாரம் செய்யத் தூண்டுகின்றவர்கள்" என்று குறை கூறுகின்றார்கள்.

மதப்புரட்டுகளையும், சாஸ்திரப் புரட்டுகளையும், நம்பிப் பெண்களைக் கொடுமைப்படுத்தி விபசாரத்தனத்திற்கு ஆளாக்கிக்கொண்டிருக்கும் இந்த மடையர்களான வைதீகர்களும், பகுத்தறிவற்றவர்களும், நமது நாட்டில் அரசியல் விஷயங்களிலும், சமுதாய விஷயங்களிலும் செல்வாக்குப் பெற்றிருக்கும் வரையிலும், விபசாரத்தை ஒழிப்பதற்கு எத்தகைய சட்டங்கள் செய்யப்பட்டாலும் அவைகளுக்குத் தகுந்த முழுப் பலனும் கிடைக்க முடியாதென்றே கூறுவோம்.

---

## சீர்திருத்த அரசியல் சிங்கம்.

—:0:—

உண்மையான சீர்திருத்தக்காரரும், தேசபக்தருமான திரு. விபினசந்திர பாலர் அவர்கள் காலஞ்சென்ற செய்திகேட்டு வருந்துகின்றோம். நமது நாட்டில் அரசியல்வாதியாகவும், சமுதாய சீர்திருத்த வாதியாகவும் விளங்கிய தலைவர்கள் சிலரேயாவார்கள். அவர்களில் காலஞ்சென்ற லாலா லஜபதிராய் ஒருவர் என்பது நாடறிந்த செய்தி. அவரைப்போன்றே திரு. விபினசந்திரபாலரும் சமுதாய சீர்திருத்தக்காரராகவும், நிதானமுள்ள அரசியல் வாதியாகவும் விளங்கினர்.

சென்ற 1925ல் சென்னையில் நடைபெற்ற ஒரு வாலிபர் மகாநாட்டில் திரு. விபினசந்திரபாலர் அவர்கள் தலைமைவகித்துப்பேசும் போது "நீங்கள் உண்மையில் வீரர்களாகவும், தேசத்திற்கு உழைக்கக்கூடியவர்களாகவும் இருக்கவிரும்புவீர்களானால் 25 வயதிற்குமுன் ஒருக்காலும்மணம் புரிந்து கொள்ளாதீர்கள்! ஒரு சமயம் உங்கள் பெற்றோர்கள் கட்டாயப்படுத்தி மணம் செய்து வைக்கத் துணிவார்களாயின்வீட்டைவிட்டு ஓடிப்போய்விடுங்கள்" என்றுகூறினார். இதைப்போலவே பெண்கள் மணவிஷயத்திலும் பால்ய மணம் கூடாது என்ற அபிப்பிராயமுடையவர்.

அன்றியும் திரு. பாலர் அவர்கள் தமது முதல் மனைவி இறந்தபின் இரண்டாவதாக ஒரு விதவைப்பெண்ணையே மணம் புரிந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் தமது இளம் வயதிலேயே சீர்திருத்த அபிப்பிராயங்களை உறுதியாகக் கொள்ளத்தொடங்கி விட்டார். பிரம்ம சமாஜ ஸ்தாபகாரமான பாபு, கேசவசந்திரசென் அவர்களின் மாணவராகிப் பிரம்ம சமாஜத்தில் ஈடுபட்டபொழுது இவரது தந்தை அதில் ஈடுபடக் கூடாது எனத்தடுத்தும் கேட்காமல் பிரம்ம சமாஜக்கொள்கைகளை மேற்கொண்டதால் தமது சொத்துக்களை இவருக்குக்கொடுக்காமல் வேறொருவருக்கு எழுதி வைத்தும்; வீட்டைவிட்டுத் துரத்தியும் கூட தமது உறுதியான கொள்கையினின்றும் சிறிதும் தவறாத வீரராக விளங்கினார். இத்தகைய அஞ்சா நெஞ்சம் படைத்த சீர்திருத்தவீரர் நமது விபினசந்திர பாலர்.

காங்கிரஸ் திரு. காந்தியின் கையில் சிக்கி தாறுமாறாகும் வரையில் காங்கிரசில் சேர்ந்து இருந்தார். காங்கிரஸ் பயனற்ற ஆவேசமான காரியங்களில் புகுந்தபோது அதைவிட்டு விலகித்தனித்து நின்று தேச ஊழியம்புரிந்து வந்தார்.

சாதாரணமாக சுயராஜியம் என்னும் பெயரால் மக்களை ஆவேசமான வழிகளில் தூண்டிவிட்டு வீண்கிளர்ச்சிகளை உண்டாக்கி நாட்டில் பொருளாதாரக் கஷ்டத்தையும் மற்றும் பல தொல்லைகளையும் உண்டாக்கும் ஆவேசக்காரர்களுக்கு தேசத்தலைவர் பட்டம் கிடைப்பதும், நாட்டின் முன்னேற்றத்திற்கு உண்மையாகவும், அமைதியாகவும் பலனுண்டாகும்படியும் அரசியலிலும் சமுதாய விஷயங்களிலும் ஈடுபட்டு உழைக்கின்றவர்களுக்குத் தேசத்துரோகப்பட்டம் கிடைப்பதும் போலவே நமது திரு. விபினசந்திரபாலர் அவர்களுக்கும் காங்கிரசிலிருந்து விலகியபின் வசைமொழிகளும் தேசத்துரோகப்பட்டமும் கிடைத்துவந்தன. ஆயினும் அவர் சிறிதும் அஞ்சாமல் இறக்கும்வரையிலும் தமது அபிப்பிராயங்களை அடிக்கடி பத்திரிகைகளில் வெளிப்படுத்துவதன் மூலம் தேசஊழியம் புரிந்துகொண்டுவந்தார்.

பேசுந்திறமையில் இவரைப் போல் சிறந்தவர் வேறு எவரும் இல்லையென்றுசொல்லலாம் 1907-ம் ஆண்டில் சென்னை கடற்கரையில் இவர் செய்த பிரசங்கத்தொனிஇன்னும் இந்திய மக்கள் மனத்தைவிட்டு நீங்கியிருக்கமுடியாது.

இத்தகைய பெரியார் தமது 76-வது வயதில் காலஞ்சென்றது பற்றி நாம் அதிகமாக வருந்துவதற்கு நியாயமில்லை. வயதேறியவர்கள் இறப்பது இயல்பே என்று சமாதானமடைவதே முறையாகும். இவர்கொண்டிருந்த அரசியல் அபிப்பிராயத்தையும், சமுதாய சீர்திருத்த அபிப்பிராயத்தையும் நமது நாடு பின்பற்றியிருக்குமாயின் தற்பொழுதுள்ள மோசமான நிலைமாறி எவ்வளவோ ஒழுங்கான முறையில் முன்னேறியிருக்கக்கூடும் என்ற விஷயத்தை இச்சமயத்தில் ஞாபகப்படுத்த வேண்டியது தேச ஊழியர்களின் கடமையாகும்.

காலஞ் சென்ற திரு. விபினசந்திரபாலர் அவர்களின் தேச ஊழியத்தைப்போற்றுகின்றவர்களும், அவருடைய சமுதாய ஊழியத்தைப்பாராட்டுகின்றவர்களும் அவருக்குச்செய்யவேண்டிய நன்

றி அவருடைய உயர்ந்த கொள்கைகளைப்பின்பற்றி நாட்டின் நன்மைக்கு உழைப்பதேயாகும். என்று தெரிவித்துக்கொள்ளுவதுடன் அவருடைய அன்பினர்களுக்கெல்லாம் நமது அநுதாபத்தையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

## குறிப்புகள்.

### மனோகர-கண்ணப்பர்.

முன்பு "திராவிடன்" ஆசிரியராயிருந்தவரும் தற்காலம் 'இந்தியா' ஆசிரியராயிருப்பவருமாகிய நமது தோழருமான திரு. ஜே. எஸ், கண்ணப்பர் அவர்களும், திருவாங்கூர் திரு, தம்புசாமி அவர்களின் குமாரி திருமதி மனோகரம் அவர்களும் சென்ற 20-5-32 வெள்ளிக்கிழமையன்று சென்னை ராயப்பேட்டை ஐயம்பெருமாள் தெரு 8-ம் நம்பர் இல்லத்தில் கிறிஸ்துவ மதச்சட்டப்படி மணம் புரிந்துகொண்டனர். மணமக்கள் இருவரும் மனமொத்துச் செய்துகொண்ட இக்காதல்மணத்தைப் பாராட்டுவதோடு தம்பதிகளுக்கு நமது மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

### சுயமரியாதை வீரன் உதயம்.

நமது இயக்கத்தோழர் மாயவரம் சி. நடராஜன் தம்பதிகளுக்கு சென்ற 23-5-32 திங்கட்கிழமை அன்று ஆண்குழந்தை பிறந்த செய்திகேட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

### திருமதி. குஞ்சிதம் B. A. L. T.

நமது இயக்கத்தோழர் திருமதி குஞ்சிதம் அவர்கள் இவ்வாண்டு எல். டி., பரீட்சையில் இரண்டாவது வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளார்கள் என்பதைக்கேட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

### திருத்தம்.

சென்ற வாரம் (22-5-32) வெளியான குடி அரசில் "எதிரிகளின் விஷமப்பிரசாரம்" என்னும் உபதலையங்கத்தில் 12-வது பக்கத்தில் முதல் கலத்தில் 44, 45 வது வரிகளில் "கமிட்டியிலிருந்தும், நடவடிக்கைகளிலிருந்து மாத்திரம்" என்று இருப்பதை "நடவடிக்கைகளிலிருந்து மாத்திரம்" என்று திருத்திக்கொள்ள வேண்டுகிறோம். மேற்காட்டிய பிழை சில பிரதிகளில்மாத்திரமே காணபடும்.

ப--ர்

## திரு. ஜி. டி. நாயுடு உயிர் தப்பினார்.

ஏடனுக்கு அருகில் தீப்பிடித்து எரிந்துபோன "ஜியார்ஜ பிலிப்பர்" என்னும் பிரஞ்சுக்கப்பலில் சென்ற இந்தியப்பிரயாணிகள் நால்வர். அவர்களில் மூவர் சென்னை மாகாணத்தைச்சேர்ந்தவர்கள். இம்மூவரில் கோயம்புத்தூர் யூனைடெட் மோட்டார் கம்பெனியின் சொந்தக்காரரான திரு ஜி. டி. நாயுடு ஒருவராவர். இவர் வியாபார நிமித்தம் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். திரு. நாயுடும், மற்றுமுள்ள இந்தியப் பிரயாணிகளும், "அண்டிரெப்பான்" என்ற கப்பலினால் காப்பாற்றப்பட்டு ஏடனில் இருப்பதாகத்தந்திச் செய்தி கிடைத்தது.

(கோவை நிருபர்.)

## தோழர். ம. சிங்காரவேலு.

தோழர். ம. சிங்காரவேலு அவர்களின் விலாசம் தெரியப்படுத்தும்படி பலர் கடிதமெழுதுகிறார்கள். அவர்கட்குத் தனித்தனியாகஎழுத முடியவில்லை ஆதலால் அவரின் விலாசம் கீழ்வருமாறு என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ம. சிங்காரவேலு B. A. B. L.
No 22 "சௌத் பீச்"
திருவல்லிக்கேணி.
சென்னை

## வடாற்காடு ஜில்லா ஆதி திராவிடர் மகாநாடு

வடாற்காடு ஜில்லா ஆதிதிராவிடர் மகாநாடு 17-5-32ல் குடியாத்தத்தை அடுத்த பள்ளிக்கொண்டையில் கூடியது. மகாநாட்டின் தலைவராகிய வட்டமேஜை மகாநாட்டின் பிரதிநிதியும், சென்னை சட்டசபை உறுப்பினருமாகியராவ்பகதூர்.ஆர்.சீனிவாசன்அவர்களும், மற்றும் பலரும் விஜயஞ்செய்திருந்தனர். மகாநாட்டிற்குவந்திருந்தவர்களில் ஜி. அப்பாதுரையார், கே. பிரமச்சாரி, பெரியசாமிப்புலவர், திராவிடன் ஆசிரியர். டி. வி. சுப்பிரமணியம், எஸ். குருசாமி, திருமதி. குஞ்சிதம் கே.வி. அழகர்சாமி, வி. பார்த்தசாரதி பண்டித, திருஞானசம்பந்தர், குமாரதேவ், பாலகுருசிவம், ஓ.வி. ரஜகோபால், முத்துசாமி, அனுமந்து, கந்தசாமிமுதலியவர்கள் முக்கியமானவர்கள்.

மகாநாட்டை கே. பிரமச்சாரி எம். ஏ.எல்,டி. அவர்கள் திறந்துவைத்தார். மகாநாட்டுத்தலைவர், ஆர். சீனிவாசன் அவர்களை, பெரியசாமிப்புலவர் பிரரேபணை செய்ய, முறையே டி.வி.சுப்பிரமணியம், எஸ். குருசாமி. கே. வி. அழகர்சாமி, பண்டித, திருஞானசம்பந்தர் முதலியவர்கள் ஆமோதிக்க ராவ்பகதூர்.சீனிவாசனவர்கள் தலைமை வகித்து தமது முகவுரைப் பிரசங்கத்தைச்செய்தார். அதன்சாரம்-:

சகோதரிகளே! சகோதரர்களே! என்னை இம்மகாநாட்டிற்குத் தலைவராக அழைத்து கௌரவித்ததற்கு அகமகிழ்கின்றேன். எனக்களித்த வரவேற்புத்தாளில் என்னைப் பற்றிப் பலவாறு புகழ்ந்துள்ளீர்கள். யான் எனது ஆயுள் பரியந்தம் உங்கட்குத் தொண்டாற்றுவதில் சிறிதும் பின்னடையமாட்டேன். நமது மகாநாட்டிற்குப் பல பெண்மணிகள் திரளாக வந்திருப்பது பற்றி அதிக சந்தோஷத்தையடைகின்றேன். வடநாட்டிலும் இதுபோலவேபெண்களும், ஆண்களும் என்னைகௌரவித்துள்ளார்கள். யானும், டாக்டர் அம்பேத்கார் அவர்களும் வட்டமேஜை மகாநாட்டில் ஆதிதிராவிடர் சமூகத்திற்காக முடிந்தவரையில் தனித் தொகுதிக்காகப்போராடியிருக்கிறோம். திரு. காந்தியவர்களுடன் எதிர்த்துத்தனித் தொகுதி கேட்பதில் யாங்கள் அஞ்சவில்லை. நமக்கு உயர் ஜாதி ஹிந்துக்கள் கோயில், குளம், கிணறு பள்ளி, பாதை முதலிய எல்லாவற்றிலும் சமத்துவமான உரிமையளிக்கும் வரை தனித்தொகுதி வேண்டியதென்றும், அதாவது குறைந்தது 20-ஆண்டுகட்குத் தனித் தொகுதி வேண்டியதென்றும் கூறியிருக்கிறோம்.

நமது சமூகத்திற்குக் கோயில் உரிமை வேண்டுவது அவசியமே. அதாவது உயர்ஜாதி இந்துக்களைப் போல காசு பணங்களைக் கல்லுச் சாமிகளுக்குக் கொட்டியழுவதற்காகவல்ல. அந்தபொது ஸ்தாபனங்களிலும் உரிமை வேண்டுமென்பதற்காகவேயாகும். நம் மக்கள் உண்ணும் உணவும், உடையும், இடவசதியும் இல்லாமல் தவிக்கும் போது கோயில்களில் காசுகளைச்செலவழிப்பது பொருத்தமல்ல. சுயமரியாதைக் கட்சியினர் நமக்காக உண்மையாக உழைத்து வருவதை யான் மனமாரப் போற்றுகிறேன் என்றுகூறி, இராஜ விஸ்வாசத்தீர் மானத்தை நிறைவேற்றியதுடன் காலை மகாநாடு 12மணிக்கு முடிந்தது-

பின்னர், மாலை 2 மணிக்கு மறுபடியும் மகாநாடு துவக்கப்பட்டது. சில தீர்மானங்கள் ஜி. அப்பாதுரையவர்களால் பிரேரேபிக்கப்பட்டு அநுமந்து உபாசகர், பெரியசாமிப் புலவர் பாலகுருசிவம், திராவிடன் ஆசிரியர் டி. வி. சுப்பிரமணியமவர்கள், முதலியவர்களால், ஆமோதிக்கப்பட்டு நிறைவேறின. பின்னர் தலைவர் முடிவுரையுடன் மகாநாடு இனிது நிறைவேறியது. பின்னர் சுயமரியாதைக்கொள்கைகளை பொதுமக்கட்கு சுயமரியாதைத் தொண்டர்களால் இனிது எடுத்து விளக்கப்பட்டது.

## பசுபதி-குமாரசாமி திருமணம்.

5-6-32 ஞாயிறு காலை 9-மணிக்கு திருநெல்வேலி எ. இராமநாதரின் புதல்விக்கும், சாத்தான்குளம் எ. இராகவனின் சகோதரருக்கும் சாத்தான் குளத்தில் நடைபெறும் திருமணத்திற்கு தோழர்கள் யாவரும் வந்து சிறப்பிக்கும்படி வேண்டுகிறோம்.

அன்புள்ள
எ. இராமநாதர்,
எ. இராகவன்.

26-5-32.

## பார்ப்பனீய மொழிந்த திருமணம்.

ஸ்ரீரங்கம் டி. தர்மலிங்கம் அவர்கள் பங்களாவில் தோழர் பாலகிருஷ்ணன் அவர்கட்கும், திருமதி அகிலாம்பாளுக்கும் பிராமணீயமொழிந்த காதல் திருமணம் 22—5—32ந் தேதி திரு. காமாக்ஷியார் அவர்கள் தலைமையில் தோழர் அ. பொன்னம்பலனார் நடத்தி வைத்தார். மணப்பந்தலில் சுயமரியாதை வாக்கியங்கள் தோழர் எஸ். ஆர். முனிசாமி அவர்களால் எழுதப்பட்டு அழகாக தொங்க விடப்பட்டிருந்தன. மணமக்கள் வாழ்க்கையில் சமபங்கு ஏற்றுக் கொள்வதென்று உறுதி மொழி கூறிய பின்னர் ஷை திருமணத்தைப் பற்றி திரு. நீலாவதி ராமசுப்பிரமணியம், திரு. டி. வி. சோமசுந்தரம் (வக்கீல்) திரு. சதாசிவம், திரு. டி. சி. சிங்காரம், பாரிஸ்டர் ஜி. சுந்தரம் முதலிய பலர் பேசினர். தலைவர் விரிவுரை, வந்தனோபசாரம் செய்த பிறகு சம பந்தி போஜனம் வழங்கப்பட்டது.

அன்று பிற்பகல் திருவாளர் கே. எம். பாலசுப்பிரமண்யம் (வக்கீல்) அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. திரு. கி. ஆ. பெ. விஸ்வநாதம் தம்பதிகள் விஜயஞ் செய்திருந்தனர். திரு. பொன்னம்பலம், திரு. சதாசிவம், திரு. நகர் அரங்கசாமி, முதலியோர் "காதல் மணம்: சிக்கனம், முதலிய விஷயங்களைப் பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். தலைவர் முடிவுரை கூறதிரு. செல்வக்கணபதியாரால்வந்தனோபசாரம் கூறப்பட்ட பின் தேநீர் வழங்கப்பட்டு திருமணம் இனிது முடிந்தது.

பார்ப்பனக் கோட்டையாகிய ஸ்ரீரங்கத்தில் இத்திருமணம் நடந்தமைக்கு தோழர்கள் டி. துரைசாமி, சி. கோவிந்தசாமி ஆகிய இருவரின் முயற்சியே காரணமாகும்.

# துவரங்குறிச்சி மஸ்தான் கூற்று.

## அன்னவாசலில் ஆர்ப்பாட்டம்.

[ஒரு முஸ்லீம் எழுதுகிறார்]

கொஞ்ச நாளைக்கு முன்பதாகத் திருப்பாலைக்குடியில் ஒரு முஸ்லீம் மஸ்தான் சிற்சில திருவிளையாடல் புரிந்து பெரும் பொருட் சேதம் விளைவித்த வரலாறும் தற்போது இருந்தவிடம் தெரியாமல் மறைந்த அவரது "அற்புத"மும் நமது வாசகர்கள் நன்கறிந்த விஷயம். அவரைப் போல பெரும் பிரகடனமாக பல வருஷங்களுக்குமுன் மணப்பாறைக்கு அருகில் உள்ள துவரங்குறிச்சியில் சடையாண்டி என்ற பெயருடன் ஒரு பக்கிரி, நோய்களை நிவர்த்தி செய்வதாகவும் ஏவல் பில்லி, முதலியனவற்றைக் குணமாக்குவதாகவும் பிரசாரம் செய்து பாமர மக்களை ஏமாற்றிப் பொருள் சேகரித்து வந்தார். அது சமயம் சில அறிவாளிகளால் அவரின் கொட்டம் அடக்கப்பெற்று வெகுநாளாய் வெளிவராமலிருந்து சுமார் ஆறு மாதங்களுக்குமுன் இராமநாதபுரம் ஜில்லா கிழச்சிவல் பட்டிக்கு வந்து பற்பல விதமாக ஏமாந்தவர்களிடம் பசப்பிப் பணம் பறித்துத் திரிந்தார். அதையும் சில அறிஞர்களால் அவரின் மோசக்கருத்தை விளங்கச் செய்து இவ்வித வேலைகளுக்கு இனிமேல் போவதில்லை யென்ற உறுதிமொழி வாங்கிக்கொண்டு விரட்டி விட்டார்கள். அவ்விதமிருந்தும் தற்போது பெருந்தனிகர்களும், நிரம்பிய கல்வி கேள்விபுடையவர்களும் நிறைந்த அன்னவாசலுக்குச் சென்று ஆங்கு தனது கை ஜாலம் வாய் ஜாலங்களால் மயக்குற்ற இரண்டொருவரைத் தன்வசமாய்க் கொண்டு பெருத்த அட்டகாசம் செய்து வருகிறார். எம்போன்ற சுயமரியாதையால் தூண்டப்பெற்ற வாலிபர்களின் எச்சரிக்கையை அநுசரிக்காமலும்; தங்களின் ஒரே தெய்வ நிர்ணயத்தை நினைத்துப் பார்க்காமலும் கருத்தழிந்த இரண்டொரு நண்பர்களின் பிரசாரத்தால் நவீன உலகத்தின் சீர்திருத்தம் பெறாத ஆடவரும், பெண்டிரும் தங்களின் அரிய செல்வத்தையும், உயரிய காலத்தையும் அவருக்குத் தொண்டு செய்வதில் செலவழிக்கின்றனர். ஒரு இடத்தில் பில்லி எடுத்ததாகவும், சிலருக்கு ரோக நிவர்த்தி செய்ததாகச் சொல்லியதாகவும், ஏராளமான பேர்களுக்கு எதிர்கால நிகழ்ச்சிகளையும், சாகக்கூடியகாலங்களையும் கூறிவருவதாகவும் அறிகிறேன். அவருக்குக் கடவுள் என்ற ஒரு வஸ்து நேருக்கு நேராக பிரசன்னமாவதாகவும் தான் ஒரு மகான் என்றும் பிரசித்தப்படுத்தப்படுத்துகிறாராம். அந்தோ! இந்த இருபதாம் நூற்றாண்டிலும் இது விஷயத்தில் நம்பிக்கைகொண்டு பணத்தைச் செலவழிப்பவர்களின் மதித்திறனை என்னென்றுரைப்பேன். இவர்கள் சுயமரியாதையை யிழந்து பிறன் வயத்தராகி அடிவிழக்கும் செயலை எப்படி எழுதுவேன். எனது முஸ்லீம் சோதரர்களே! பிற சமூகத்தினரின் சீர்திருத்த முயற்சியை சற்றும் நோக்காமல், உங்களின் சமூக வளர்ச்சியைச் சிறிதும் கவனிக்காமல் "கடவுள்" "மதம்" ஒலிமார்கள், மஸ்தான்கள், சித்தர்கள் மந்திர தந்திரங்களிலேயே சிக்குண்டு கருத்தையும் காலத்தையும், வீணிற் செலவழித்தும் சந்தனக்கூடு கந்தூரி ஆக்குகளில் பணத்தைத் தொலைத்துத் திரிகின்றீர்கள்! சமூக முன்னேற்றத்தைச் சிந்திக்கின்றீர்கள் இல்லை. அற்புதங்களில் வைத்த நம்பிக்கைகள் தொலைந்து நவீன நாகரிக சித்தாந்தத்துள் ஆழ்ந்து முன்னேறியிருக்கும் நவீனதுருக்கி ராஜ்யத்தை உற்று நோக்குங்கள்! ஒலிமார்கள் மஸ்தான்கள் என்று இக்காலத்தில் வந்து ஏமாற்றிப்பொருள் பறிக்கும் கள்ளப்பக்கிரிமார்களின் வலைக்குள் சிக்கி மயங்காதீர்கள்! தன்னம்பிக்கையை உண்டுபண்ணிக் கொள்ளுங்கள்! என்று மிகவும் அன்புடன் வேண்டிக்கொள்ளுகிறேன்.

---

## லால்குடி தாலூகா முதலாவது சுயமரியாதைத் தொண்டர் மகாநாட்டின் வரவு செலவு கணக்கு விபரம்.

### வரவு.

திருவாளர்கள்.

| | | | |
|---|---|---|---|
| அ. செல்லப்பா | 5 | 0 | 0 |
| அ. பரமசிவம் | 7 | 8 | 0 |
| எல். எஸ். பரமசிவம் பிள்ளை | 2 | 0 | 0 |
| அ. பூமிநாதம் | 5 | 0 | 0 |
| பி. என். ராஜகோபாலன் | 2 | 0 | 0 |
| டி. மருதையா | 2 | 0 | 0 |
| எம். கூத்தப்பெருமாள் | 5 | 0 | 0 |
| பா. சாமிசெட்டியார் | 2 | 0 | 0 |
| தருமஞ்செட்டியார் | 1 | 0 | 0 |
| பி. கே. பி. பிரசன்ன வெங்கடாசலம் | 15 | 0 | 0 |
| கணேசன் (ஆதிதிராவிடர் மூலம்) | 5 | 0 | 0 |
| பி. பிச்சையா | 3 | 0 | 0 |
| குருநமச்சிவாயம்பிள்ளை | 1 | 0 | 0 |
| ராசுநாயுடு | 1 | 0 | 0 |
| தாத்தையா செட்டியார் | 2 | 0 | 0 |
| ரெங்கசாமிபிள்ளை | 2 | 0 | 0 |
| ரெங்கசாமிநாயுடு | 1 | 0 | 0 |
| கணபதியாபிள்ளை | 1 | 0 | 0 |
| பாலசுப்பிரமணிய பிள்ளை | 1 | 0 | 0 |
| வைத்தியலிங்க அய்யர் | 1 | 0 | 0 |
| சில்லரையாக பலபேர் மூலம் | 10 | 0 | 0 |
| ஆககூடுதல் ரூ. | 74 | 8 | 0 |

### செலவு

| | | | |
|---|---|---|---|
| பிரசங்கிகளுக்குப் பிரயாணச்செலவு வகையில் | 13 | 8 | 0 |
| வரவேற்புப் பிரசங்க அச்சுக்கூலி வகையில் | 5 | 0 | 0 |
| விளம்பர அறிக்கைச் செலவு | 4 | 0 | 0 |
| போட்டோ பிளாக் செலவு | 9 | 8 | 0 |
| பூமாலை | 4 | 0 | 0 |
| மோட்டார் செலவு | 7 | 0 | 0 |
| மேளம் | 2 | 0 | 0 |
| சாப்பாட்டுச்சில்லரை செலவு வகையில் | 20 | 0 | 0 |
| தபால் தந்தி | 3 | 0 | 0 |
| காரியதரிசியிடம் கையிருப்பு | 1 | 0 | 0 |
| ஆகக்கூடுதல் செலவு | 74 | 8 | 0 |

கணக்குப் பரிசிலனை செய்ததில் சரியாக இருக்கிறது.

ச. ம. சி. பரமசிவம்.
தணிக்கையாளன்.

(ஒப்பம்)
ம. கூத்தப்பெருமாள்,
அ. பரமசிவம்.
காரியதரிசிகள்.

---

## திருமணம்.

யாழ்ப்பாணம் அராலி மேற்கு திரு. சுந்தப்பர் நாகலிங்கம் அவர்களின் மூன்றுங்குமாரனும், கோலாலம்பூரில் "ரவுன் ஓவசிய"ராகவிருக்கும் திரு. நா. ஆறுமுகமவர்களின் சகோதரருமான திருச்செல்வன் நா. தாமோதரன் அவர்களுக்கும் சண்டிருப்பாய் மேற்கு திரு. கே. முருகேசு அவர்கள் கனிஷ்ட புத்திரி திருச்செல்வி அன்னம்மாளுக்கும் சென்ற திங்கட்கிழமை விவாகம் நடைபெற்றது. (ஒரு நிருபர்.)

---


## விளம்பரம்.

ஈரோடு முனிசிபல் சங்கத்தார் மதராஸ் நியூயார்க்கு ஸ்டாண்டர்டு ஆயில் கம்பெனி யாருக்கு சத்தியமங்கலம்ரோட்டும் லார்டு நேப்பியர் தெருவும் கூடுமிடத்தில் கெர்ப்சைட் பம்பு வைத்திருக்குமிடத்தை 5 வருஷத்திற்கு குத்தகைக்குக் கொடுக்க 13—7—31 தேதி போட்ட 248 நெ. தீர்மானத்தில் பாஸ் செய்திருக்கிறார்கள்

இந்த குத்தகை விஷயமாய் ஆக்ஷேபனை செய்பவர்கள் ஈரோடு முனிசிபல் சேர்மன் அவர்களுக்கு எழுத்து மூலியமாய் இந்த கோட்டைல் ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்த 2 வாரத்திற்குள் தெரிவித்துக்கொள்ளவேண்டியதென்று இதனால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஈரோடு முனிசிபல் ஆபீஸ், 3—11—1931.

(ஒப்பம்) K. A. ஷேக்தாவுத்,
சேர்மன்.


---

## சுயராஜ்யம் வருவதற்கு முந்தி தீண்டாமையை ஒழிக்கவேண்டா மென்றது யார்?

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யத்திலேயே இருந்து விட்டால் தன் பத்திற்கு இடமே இல்லை மிருகங்கள் போல, வீடு வாசல்கள் இல்லாமல், காடுகளிலும், மரங்களிலும், மலைகளிலும் வாழ்ந்தால் ஒரு கஷ்டமும் இல்லை. இயற்கையான தழைகளையும், காய்கனிகளையும். தண்ணீரையும் உண்டு வாழ்வதால் தரித்திரம் இல்லை ஆடை ஆபரணம் ஒன்றுமில்லாமல் எல்லோரும் பிறந்த மேனியாகவே இருந்து விட்டால் கதருக்காக கஷ்டப்பட வேண்டியதில்லை. கல்வியறிவு ஒன்றுமில்லாமல் எல்லோரும் பழையபடி மிருகங்களாக அதாவது நமது மூதாதைகளாகிய குரங்குகளாக மாறிவிட்டால் கஷ்டம் அணுத்துணையுமில்லை.

இந்த இயக்கத்தை ஆரம்பித்து நடத்தி வெற்றி பெற்று விட்டால் சுயராஜியம் வேண்டாம்; பொதுவுடமை வேண்டாம்; சுதேசிப் பிரசாரம் வேண்டாம், சுயமரியாதைப் பிரசாரங்கூட வேண்டாம்; தடியடிபட வேண்டிய அவசியமில்லை, உத்தியோகந் தேட வேண்டிய அவசியமில்லை. நான் சொல்லுவது முழுவதும் உண்மையா அல்லவா என்று மீண்டும், மீண்டும் யோசனை பண்ணுங்கள்.

மக்களின் துன்பம் ஒழிவதற்கு, எனது யோசனையைத் தவிர வேறு சிறந்த யோசனை உலகில்யாரும்சொல்ல முடியாது என்று எந்தமேடையிலிருந்தும் கூறுவேன். செய்கையில் நடத்தமுடிகிறதோ இல்லையோ; அதுவேறு விஷயம். கருத்தளவில் நான் சொல்லுவது சத்தியமாக உண்மை! உண்மை! உண்மை! வேண்டுமானால் என் எதிரில் வந்து கேட்டால் உங்கள் தலையில் அடித்தும் சொல்லுகிறேன்.

நான் கூறும் இந்த யோசனையைக் கண்டு நம்மைப் பைத்தியம் என்று தீர்த்துவிடாதீர்கள். திரு. காந்தியடிகளின் அரசியல் தத்துவத்தைக் காட்டிலும் நமது தத்துவம் எவ்வளவோ உண்மையானது. எப்படியென்றால், "மகாத்மா" பழய காலவாழ்க்கையை விரும்புகிறார். குடிசைவாழ்க்கையை வேண்டுகிறார். இயந்திரங்கள் ஒழிந்து கைவேலைகளுக்கு ஆசைப்படுகிறார்; வருணாச்சிரமதரும வாழ்க்கையைக் காதலிக்கிறார்; சுருங்கச் சொன்னால் ராமராஜ்யம் வேண்டுகிறார்; ராமராஜ்யம் மேற்கூறியவாறு உள்ளதுதானே.

நானோ அவரைக்காட்டிலும் இன்னும் சில ஆயிரவருஷங்களுக்கு முன்னேயிருந்த வாழ்க்கையைச் சொல்லுகிறேன், அந்த வாழ்க்கைக்குப் போக விரும்புகிறேன். ஆகவே எங்கள் இருவர்களில் யார்முன்னேற்றமான அபிப்பிராய முடையவர்கள்? மகாத்மாவின் "மோட்டார்கார்" பின்பக்கமாக ஐயாயிரம்மைல் (5000 வருஷம்) ஓடுகிறதென்றால், என்னுடைய "மோட்டார்கார் பின்பக்கமாக பதினாயிரம்மைல் (10000 வருஷம்] ஓடவில்லையா என்று கேட்கிறேன். உங்களுக்குச் சந்தேகமாயிருந்தால் யாராவது உண்மையான சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் இருந்தால் அவர்களைக்கேட்டுப்பாருங்கள்!

ஆகவே, திரு, காந்திக்கு "மகாத்மா" பட்டம் கொடுத்திருக்கின்ற நீங்கள், உண்மையிலேயே என்னை நேசிக்கிறவர்களாயிருந்தால், என்ன செய்யவேண்டும்? எனக்கு மகா "மகாத்மா" என்ற பட்டம் கொடுக்க வேண்டாமா?

திரு, காந்தியின் கொள்கையைஅரசியல் பிரசாரத்தை தேசமுழுதும் ஒப்புக்கொள்வதாகச் செல்லுகிறார்களே, உன்னுடைய அபிப்பிராயத்தை யார் ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்று கேட்பீர்கள்; அதற்கும் பதில் சொல்லுகின்றேன்; என்னுடைய அபிப்பிராயத்திற்கு உலக முழுவதும் ஆதரவு இருந்துவருகிறது. நிர்வாண இயக்கம் என்ற ஒன்றைப்பற்றி நீக்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள்! அவர்களெல்லாம் என்னைப் பின்பற்றுகிறவர்கள்தான். என்னுடையதோழர்களாகிய நிர்வாண இயக்கத்தார், என்னமோ இந்தியாவில் தான் இல்லை; ஆனால், ஜெர்மனி பெல்ஜியம், அமெரிக்கா, பிரான்சு, இட்டாலி, ஐரோப்பா, முதலிய நாடுகளில் ஏராளமாக இருக்கிறார்கள்.

கூடிய விரைவில் இந்தியாவிலும் இந்த இயக்கம், இயற்கை வாழ்வு இயக்கம் ஆரம்பிக்க உத்தேசம், இயற்கை வாழ்வுக்காரர்களெல்லாம், இயற்கை வாழ்வைப்பற்றிப் பேசுகின்றவர்களெல்லாம், இயற்கைவாழ்வைப் பற்றிப்புத்தகங்கள் எழுதுகின்றவர்களெல்லாம், கட்டாயம் என்னைப் பின்பற்று வார்களென்று நம்புகின்றேன். என்னையே நம்பி எனதுஇயற்கை நிர்வாண இயக்கத்தை நான் ஆரம்பித்து விடுவேன். ஆனால் தெருவோடு சென்றால் கல்லால் அடிப்பார்களே என்ற ஒரு பயம்தான் இருக்கிறது. பிறகு சந்திக்கிறேன்.

---

## மனோகர—கண்ணப்பர் திருமண நிகழ்ச்சி

சென்ற 20-5-32 வெள்ளிக் கிழமை, மாஜி திராவிடன் ஆசிரியரும், தற்போது இந்தியா ஆசிரியருமான திரு. ஜே.எஸ். கண்ணப்பர் அவர்கள் திருவாங்கூர், பிரபல கிறிஸ்துவ குடும்பத்தைச் சேர்ந்த,மிஸ்டர். டி. தம்புசாமி அவர்களின் குமாரி. திருமதி, மனோகரம் அவர்களை, கிறிஸ்து மணச்சட்டப்படி மணந்து கொண்டார். அர்ச். டி.எஸ்.காந்திமதி என்னும் கிறிஸ்துவப் பாதிரியார் தலைவராயிருந்து 1872ஆம் ஆண்டைய 12வது ஆக்ட் 62வது பிரிவின்படி விவாகத்தை ரிஜிஸ்டர் செய்து வைத்தார். திரு.பி. அம்ப்ரோஸ், திரு. பி. ஜோஷுவா ஆகிய இருவரும் சாட்சிகளாக இருந்தனர். இன்னும்சிலநண்பர்களும்கூடியிருந்தனர். மண மக்கள் இருவரும் மோதிரம் மாற்றிக் கொண்ட பின், மண வைபவம் இனிதாக நிறைவேறியது.

(ஒரு நிருபர்.)


# ஆஸ்திக நாஸ்திக

சம்வாதம்

கடவுளைப்பற்றி தெள்ளத் தெளிய ஆராய்ந்து முடிவு கட்டும் ஓர் அறிய நூல். டிம்மி 170 பக்கம் கொண்டது. யாவரும் வாங்கி வாசிப்பதற்காக அடக்க விலைக்கு விற்க ஏற்பாடு செய்திருக்கிறது.

பிரதி 1-க்கு விலை அணா 0 6 0.
6 பிரதிகள் 2 0 0: 12 பிரதிகள் 3 12 0.

தபால் செலவு வேறு.

ஒரு பிரதிவேண்டுவோர் 0-7-6 ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். வி. பி. யில் அனுப்பமுடியாது. ஒரு புஸ்தகத்திற்குமேல் வேண்டுவோர் பாதி முன்பணமாக அனுப்ப வேண்டும். மிச்சத்தை வி பி. செய்யப்படும்.

நாஸ்திகன்

C. K. குப்புசாமி, சேலம் பட்டுஜவுளி, பெரியகாஞ்சிபுரம்.





## கோஷாயி பாதுஷா மாத்திரை.

விபசார நடத்தையால் ஜெனித்த சர்வரோக சங்காரணி.

Dr. T. K. V. Chalam.

ஆண், பெண் அனுபவிக்க அனுபவத்தில் முதன்மை பெற்றது. 7 நாள் 14 மாத்திரை உபயோகிப்பவர்களுக்கு, விபசார நடத்தையில் ஜெனித்த சர்வ ரோகங்களையும் சங்கரித்து திடதைரிய தேஜஸ்ரூபியாய் திகழச்செய்யும் அன்பு தொண்டன்.

கோஷாயி பாதுஷா மாத்திரை 14 கொண்ட சீசா 1க்கு ரூ. 3—0—0. வி. பி. பாக்கிங் சார்ஜ் வேறு. உபயோகிக்கும் விதம் மருந்துடன்.

உதவி டாக்டர், T. K. V. Chalam. } டாக்டர் B. A. எதிராஜ். (காலரா பைரி)

கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.



## "குடி அரசு"

ஒவ்வொரு வருஷத்திய குடி அரசும் தனித்தனி வால்யம்களாக பைண்ட் செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. முதல் வருடம் முதல் ஆறும் வருஷம் வரையில் உள்ள ஆறுவால்யங்கள் இப்பொழுது கிடைக்கும் ஏழாம் வால்யம் பயிண்டாகிக்கொண்டிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

## "ரிவோல்ட்."

ரிவோல்ட் (ஆங்கிலப்பத்திரிகை) முதல்வால்யம் நேர்த்தியாகப் பயிண்டு செய்து விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. வால்யம் ஒன்றுக்கு விலை ரூ. 4—0—0.

மானேஜர்
"குடி அரசு"
ஈரோடு.

# ஆஸ்திகர்களே! ஆத்திரம் வேண்டாம்.

(கோட்டாறு எஸ். கே. பெருமாள்)

ஆஸ்திகர்களே! அறி னும் பார்ப்பனரல்லாதார்களே! பண்டிதர்களே! பட்டதாரிகளே! சுயமரியாதை, பகுத்தறிவு, சீர்திருத்தம் என்ற சொற்களைக் கேட்டவுடனும், குடி அரசு, குமரன், தமிழன், முதலிய பத்திரிகைகளைக் கண்டவுடனும், காதைப்பொத்திக் கண்ணைமூடி நடுங்குகின்றீர்களே! ஏன்? இவைகள் உங்கள் காதில் சொருகும் இரும்புக்கம்பிகளா? கையில் தொட்டால் தீண்டும் நாகப்பாம்புகளா? என்ன சொல்லுங்கள். எப்போது ஒரு சொல்லைக்கேட்டு அதற்குத்தக்கபதில் சொல்ல வகையறியாமலும், ஒருபத்திரிகையை கையால் தொட்டுப்பார்த்து பொருள் அறிவதற்குப் பயப்படுகிறீர்களோ அப்போதே நீங்கள் அவைகட்கு அஞ்சிநடுங்கின பேதைகளேயாவீர்களென்பதில் குறை ஏதாவதுண்டா? நீங்களும் அறிவுள்ளமனிதர்களானுல் பிறர் சொல்லுவதையும் கேட்டு, பிறபத்திரிகைகளையும் கையிலெடுத்துப்பார்த்து உங்கள் அறிவையும் சந்திக்குக் கொண்டுவரலாமே. அதைவிட்டுவிட்டு ஓடி ஒளிந்து வசைபுராணம் பாடுவானேன்.

சு. ம. காரர்கள் எடுத்ததற்கெல்லாம் கடவுள் தலையிலேயே கை வைக்கிறார்கள், இதுதான் எங்களால் பொறுக்க முடிவதில்லை என்று இயம்பும் உத்தமர்களே! நம்மைப்போன்று தாய்வயிற்றிலிருந்து நாம்வந்த வழியே வந்த மக்கள் யாவரும் ஒரே சகோதரர்களென வாழ்வதற்கில்லாமல் நான் ஏதோ ஒன்றின் முகத்திலிருந்து பிறந்தவன் என்றும், நான் தோளிலிருந்து பிறந்தவனென்றும், உயர்வுதாழ்வு கூறி இயற்கைக்கும், அனுபவத்திற்கும்இம்மியளவும் இசையாதவாறுபடங்காட்டிஎல்லாம் இறைவன் தலையிலேயேபிணித்து வைத்திருக்கிறீர்களே அந்த குத்திரத்தைத்திறந்தால்தானே எல்லாம் சுகமடைய வழியுண்டு என்பதை என்னளவு அறிவுள்ளவர்களும் ஏற்றுக்கொள்வார்களே. கடவுள் பேரில் உண்மை அன்பு ஒரு சிறிது உங்கட்குண்டானுல் அவரைப்பற்றி கவலைப்படுவதற்கு அற்பமாவது,அவகாசமாவதுமுண்டா? வெனக்கேட்கிறேன். சர்வ சக்தியுள்ள, எங்கும் நிறைந்த, எல்லாம் செய்யவல்ல, எல்லாம் அறியவல்ல ஈசனுயிருப்பது உண்மையேயானுல் நாஸ்திகர்களாம் நாங்கள் நினைக்கும் ஒவ்வொரு நாச எண்ணங்களையும் அவர் முன்னரே அறிந்து அவ்வெண்ணங்களையே அழித்திருக்கலாமல்லவா? பின்னர் செய்கை எவ்வாறு நிகழும். இதற்கு சக்தியில்லாமலா உங்கள் கடவுள் அறிவற்ற மடையர்களாம் உங்களை வக்காலத்துக்கொடுத்து வலிய சண்டைக்கு அனுப்பியிருக்கிறார். பேஷ்! நன்றாயிருக்கிறது உங்கள் கடவுளின் சக்தி. எங்கள் பேச்சுக்கும், செய்கைக்கும் ஆற்றாது இறந்துபோகும் கடவுள் இருந்துதான் என்ன பயன்? உங்கட்கு மோக்ஷமளிக்க ஒருவன் வேண்டுமே என நீங்கள் கவலைப்படுவீர்களானுல் அதற்கு உங்களிடமுள்ள இளஞ்சிறுர்களே எற்றவர்களென்பதை இதயத்தில் வையுங்கள்.

ஒருவன் இன்னொருவனைப்பற்றி அவனது நண்பன் கேட்கும்படி சில வார்த்தைகள் அவதூறுய் பேசுகிறுனென்று வைத்துக்கொள்வோம். ஆனுல் அந்த நண்பனுக்குக்கடுகளவாவது அறிவு இருக்குமேயானுல் உடனடி. அவதூறுக்காளான தன் நேசனிடம் இதை அறிக்கை இடவேண்டும். அந்நேசனும் அதற்கிசைந்தால் இருவரும் பேசினவனிடம் வந்து உண்மையைக்கேட்கவேண்டும், அச்சமயம் பேசினவன் உண்மையை மறைத்தால் கேட்டுக்கொண்டிருந்தவன் சாக்ஷி சொல்லத்தான் வேண்டுமேயன்றி வேறென்றும் செய்வதற்கில்லை. இதுவே நியாயமும், ஒழுங்குமாகும். இதில் அவதூறுக்காளானவன் அருகிலில்லாமலிருந்தால் தான் இவ்வளவும் வேண்டும். ஆனுல் இவன் (கடவுள்) ஆஸ்திகர்களின் எண்ணப்படி எங்கும் நிறைந்திருப்பது உண்மையேயானுல் நாஸ்திகர்களாம்நாம் அவனை (கடவுளை)ப்பற்றி பேசும்போது அவன் நம்மருகிலிருப்பதும் உண்மையேயாகிறது. அப்போது மூன்றுமவனுகிய முண்டங்கட்கு அங்கு அவசியமே இல்லாமலாகிறது என்பதை ஆஸ்திக பண்டித பட்டதாரிகளும் ஒப்புக்கொண்டு தானேயாகவேணடும்.

நிற்க, பு. ம. (புராணமரியாதை பட்டதாரிகள்) சூரிய சந்திர கிரகணங்கள் பூமி சூரியனைச்சுற்றுவதாலும், சந்திரன் பூமியைச்சுற்றுவதாலும் எற்படும் மாற்றங்கள் என்பதை மனதார அனுபவப்பிரமாணங்களால் அறிந்திருந்தும் அறிவில்லா மிருகங்களையொப்ப ராகு, கேதுக்கள் என்ற பாம்புகள் சூரிய சந்திரர்களை எடுத்து விழுங்குவதாகவும், அவ்வாபத்திலிருந்து அவர்களைக்காப்பாற்ற அவர்கள் (ஆஸ்திகர்கள்) பெரு முயற்சி எடுத்து வருவதாயும் பாசாங்கு செய்கிருர்கள். இவைகளைக்காணும் அறிவுள்ள சிறுவர்கள் கூடசிரித்துக்கேலி செய்வார்கள் என்பதை இவர்கள் கிஞ்சிற்றும் உணர்வதில்லையா? இவர்கள் கொள்கைதான் சரி, விஞ்ஞான சாஸ்திரிகளின் முற்கூறிய முடிவு தப்பு என விருந்தால் இன்றுவது, அல்லது இனிமேலாவது அதை நிரூபிக்க எத்தனை பண்டித பட்டதாரிகள் முன் வருகிறுர்களென்பதை மனிதத்தன்மையுண்டானுல் மறந்து போகாமல் உடனே தெரியப்படுத்துங்கள். உங்கள் சந்திரக்கடவுளுக்கு இன்னும் சில நாட்களில் இடையூறு நேரப்போகின்றதே நீங்களென் செய்வீர்கள். ஒவ்வொருவிஞ்ஞான ஆராய்ச்சிக்காரர்களும் நான் முந்தி, நான் முந்தி எனப்பந்தயமிட்டு நான் இன்னும் சிலநாட்களில் குண்டுபோட்டுடைப்பேனென்றும் நான் இன்னும் சில மணிகள் சந்திரமண்டலஞ்சேர்வேனென்றும் விடாமுயற்சியுடன் உழைத்துவருவது உங்கள் காதுகளில் எட்டினதுண்டா? எட்டியதுண்டானுல் நீங்கள் இதுவரை என் செய்தீர்கள். உடனே உங்கள் காந்தியார் போன்ற தலைவர்களிடம் சொல்லி, எங்கள் கடவுளை அழிக்க நீங்கள் எண்ணுவது சரியன்று நாங்கள் இத்தனைகோடி பேர் ஒரே க்ஷணத்தில் இதற்காக மாளுவோம் என்று சொல்லி மேனுடு சென்று சத்தியாக்கிரகம், மறியல் செய்யச்சொல்லுங்கள். கேவலம் சிற்றின்பம் என நீங்கள் இகழ்ந்து பேசுகிற இவ்வுலக மண்ணுட்சிக்காக எத்தனையோ பதினுயிரக்கணக்கான மக்கள் சிறை சென்றும், சீர்குலைந்தும், அடிபட்டும், மிதிபட்டும், அவமானப்பட்டும், தூக்குமேடையேறியும் துஞ்சுகின்றனீங்கள் என் மேலோக மோக்ஷலோகக் கடவுளாம் சந்திரக்கடவுளைக்காப்பாற்ற துணிந்து கச்சை கட்டக்கூடாது. இன்றே துணியுங்கள் தாமதம் இனிவேண்டாம்.

ஆஸ்திக அன்பர்களே! உங்கள் வீட்டுச் சிறுவர்கள் குழந்தைப்பருவத்தில் கண்டகல்லையும், மண்ணுங்கட்டியையும், மரத்துண்டையும், செம்பு, இரும்புத்துண்டுகளையும் சாமியென்று, பாராட்டி அவைகட்கு நீராட்டி, துணிகட்டி, உணவளித்து விளையாடுவதைக்கண்டு கேலி செய்து சிறிக்கும் நீங்கள் கல்லையும், கட்டையையும், செம்பையும், கடவுள் எனமதித்து அவைகட்கு சகல உபசாரங்களையும் என் செலுத்துகிறீர்கள்! இவைகளை அறிவு பெற்ற உங்கள் குழந்தைகள்கண்டு ஐயா! பெரியோர்களே! நீங்களேன் இப்போது இப்படிச் செய்கிறீர்கள் கல்லும் மண்ணும் சாப்பிடுமோ? உடுத்துமா? உறங்குமா? வைப்பாட்டி வைக்குமா? எனக்கேட்டால் என் வைகிறீர்கள்? அறிவுண்டானுல் அனுபவத்திற்கு ஒத்த பதிலைச்சொல்லுங்களேன். ஒருக்கால் மந்திர சக்தியால் கல்லைக்கடவுளாக்கியிருக்கிறோமென்பீர்களானுல கல்லை மிருகமாகவல்ல மனிதனுகவல்ல கடவுளாக ஆக்கும் மந்திரம் உங்களிடம் உண்டாயிருப்பது உண்மையேயானுல் நாஸ்திகர்களாம் எங்களையும் ஒரே மந்திரத்தால் உங்களையொத்த அறிவற்ற ஆஸ்திகர்களாக்கி விடலாமே? இதற்கு என் இவ்வளவு வருத்தம்? உங்களில் குழந்தையற்றவர்கட்கும் பிறிதொரு உதவியின்றி மந்திரத்தாலேயே மக்களை உண்டு பண்ணிக்கொள்ளலாமே! இதைவிட்டுவிட்டுஎன் அரசமரத்தையும் அப்பாத்துக்கிரியையும் தேடிச்செல்கிறீர்கள். அறிவுண்டானுல் ஆத்திரமின்றி ஆய்ந்து பதில் சொல்லுங்கள். மேலும் காங்கிரசாம் உங்கள் காந்தியார் கூட்டம் இவ்வளவு கஷ்டமும் கவலையும் அடைவானேன். ஒரே மந்திரத்தால் வெள்ளையர்களையும் ஓடச்செய்யலாமே! ஏனே இந்தத்தந்திரம்? இனிச்செல்லாதுங்கள் மந்திரம்.

உங்கள் வீடுகளிலோ, அல்லது பக்கத்து வீடுகளிலோ உள்ள பாலர்கள் தங்கள் உடலைப் போர்த்திக்கொள்ளுவதற்கு ஒரு முழத்துணிகூட இல்லாமல் கையைக்கொண்டு மெய்யைப்பொத்தி கஷ்டப்படுவதை கண்ணுரக்கண்டும் கடுகளவும் இரங்காது கல்லுக்கும், கட்டைக்கும் பட்டாடை கட்டி அழகு பார்க்கிறீர்களே இஃது உங்கள் பகுத்தறிவிற்கு கொஞ்சமும் எட்டவில்லையா? காருண்ய மூர்த்தி எனக்கூறும் உங்கள் காந்தியாரும் அவர் தம் தோழர்களும் கதராடை பரப்ப இராடை எரியிட்டு கொளுத்து வதை நம் ஏழைக்குக்கொடுத்தால் இவர்கள் தலையில் இடியா விழுந்துவிடும்? இவர்கள் கோரும் சுயராஜியத்திலா ஏழைகளை காப்பர்? போதும் இவர்கள் இரக்கங்கெட்ட குணம். இதோ இவைகள்தான் உங்கள் ஆஸ்திக காருண்ய மார்க்கமோ? வாய்வழிவயிற்றிற்குள் செலுத்தும் பண்டங்களை தலையில் தப்பாமிட்டால் கண்டவர்கள் என்ன சொல்லுவார்கள்? பைத்தியக்காரர்கள் என்று வாய்கூசாது கூறுவார்களன்றோ? இது உங்களுக்கும் உண்மையெனத் தோன்றுமல்லவா? பின் ஏனோ நீங்கள் கிடைத்ததற்கரிய செந்தேனையும், தித்திக்கும் தீம்பழங்களையும் பழச்சாறுகளையும் கல்லுக்கட்டைக் கடவுள் தலையில் கொட்டுகிறீர்கள். ஒருக்கால் எங்கள் அன்பு (பக்தி) மேலிட்டால் இவ்வாறு செய்கிறோமெனநீங்கள் சொல்லுவீர்களானுல் உங்கள் கடவுளர்கட்கு வயிற்றிலிடம் உண்டுபண்ணி வாய்வழி உட்செலுத்துவதல்லவா? சரி. இதுவல்லவா? முறை எனக்கேட்டால் என் கோபமடைகின்றீர்கள்.

நம் அருமைக்குழந்தைகள் கவனக்குறைவால் தண்ணீரைத்தரையில் சிந்தினுல் தாறுமாருய்ப்பேசும்ஆஸ்திகர்களே! எண்ணெயை உருட்டிவிட்டால் எரிந்து விழும் பண்டிதர்களே! பாலைக்கவிழ்த்தால் மனம் பதைபதைக்கும் பட்டதாரிகளே! எண்ணெயையும், பாலையும், தேனையும், கல்லிலும் செம்பிலும் கட்டையிலும் குடங்குடமாக கொட்டுவது ஏனே?

# ஆரம்ப ஆசிரியர்களின் முன்னேற்றம்.

(ஆசிரியர் திரு. பி. எஸ். கந்தசாமி)

நாடெங்கும் முன்னேற்றம், சீர்திருத்தம் எனும் அலை சப்திக்கின்றது. ஆயின் நம் இந்தியாவிலோ வீணை அரசியல் கிளர்ச்சி தான் நடைபெறுகிறது. அவற்றை நாம் கண்டிக்கக்கடமைப்பட்டுள்ளோம். நிற்க நமக்கு வேண்டிய முக்கிய முன்னேற்றம் யாதென நன்கு ஆராய்ந்து நோக்குமிடத்து சமூக முன்னேற்றமேயாம். மக்கள் இவற்றை யுணராது வடக்குப்பார்த்திருக்கும் கடவுள் எனும் விக்கிரகத்தை தெற்கு முகமாகத்திருப்பி வைத்தாலோ, அன்றி ஒரு ஆடுவெட்டி பொங்கல் வைக்காமல், இரட்டைக்கிடாவெட்டிப்பொங்கல் வைத்தாலோ, கல்விக்கிரகத்தை தங்கமாகச்செய்தாலோ, நாடு முன்னேறுமென்பது அறிவுடைமையாகாது. அக்காலம் மலையேறிவிட்டது. சீர்திருத்தம் என்பது கல்வியைப்பொறுத்தது. கல்வியோ ஆரம்ப ஆசிரியர்களைப் பொறுத்திருக்கிறது. எனினும் பண்டைக்காலக்கல்வியைத் திருத்தியமைக்கவேண்டும். "கடவுள் பன்றியுருவெடுத்தார், கட்டைவிரல் பருமனுள்ள முனிவர் கடலையுண்டார், கடவுள்ஸ்திரீகளின் உடைகளைத்திருடி பெண்களின் கற்பழித்தார், ஒருவருக்கு 60000 (அறுபதனாயிரம்) மனைவிகள்" என்பன போன்ற அசம்பாவிதமான கல்வியைப் போதிப்பதால் மாணவர் தம் அறிவு பாதிக்கப்படுகிறது. மேலும் இயற்கைக்கு முரண்பட்ட விஷயங்களையும், பொய்மையானதும் ஆபாசமானதுமான கல்வியினால் மாணவர்கட்கு அறிவு வளர்ச்சிகிடையாது. நாம் எடுத்துக்கொண்ட விஷயங்களைப்பற்றி சிறிது ஆராய்வோம். நாட்டின் எதிர்கால அழைப்பிற்கு ஆரம்ப ஆசிரியர்களாகிய நாமே ஆதாரமாயிருக்கிறோம். நமது தொழில்பொதுவாகஎல்லோராலும் மதிக்கப்படுவதாகும்; என்றபோதிலும் ஊதியமும், கௌரவமும் நமக்கு அரசாங்கத்தாரால் அதிகமளிக்கப்படவில்லை. சிறுவர்களுக்குக்கல்வி புகட்டும் நாம் நம்மை முன்னதாக நற்குண நற்செய்கையுடையவராகப் பழக்கிக்கொள்தல்வேண்டும். நம்மில்பலர் மனிதவர்க்கத்தாரில் ஒரு சிலரை உயர்வாகவும், மற்றும் சிலரைத்தாழ்ந்தோராகவும் கருதி. பழைய குருட்டு மூடபழக்க வழக்கங்களை கையாண்டு வருகிறார்கள், அதுமிகவும் தவறு. பிறப்பில் உயர்வு தாழ்வு கிடையாது, நாம் நம்மிடம் பயிலும் மாணவர்களை நமது குழந்தைகள் அல்லது உடன்பிறந்தோர் போன்று பாவித்து ஜாதிமத பேதமின்றியும், ஏழைபணக்கார வித்தியாசமுமின்றியும் கல்வியறிவூட்டிவரல் வேண்டும். நாம் மதவிஷயத்தில் பற்றுள்ளவர்களாயிருக்கக்கூடாது. ஏனெனில் மதம் நம்நாட்டில் ஒன்றிரண்டல்ல அளவிறந்தன. சைவம் வைணவருக்கு பிடிக்காது. வைணவம் சைவத்திற்கு பிடிக்காது. இவையிரண்டும் பௌத்தத்திற்கு பிடிக்காது. இவை மூன்றும் கிறிஸ்துவருக்கு விரோதம். ஆகவே இவற்றில் ஏதேனுமோர் மதப்பற்றுடைய ஆசிரியர், தம் மதத்திற்கேற்ற கதைகளையோ அன்றி பாடல்களையோ தம் மாணவர்கட்கு போதிப்பதால் அம்மாணவர்கள் பிறமதத்தினரையோ, அல்லது அவர் தம் நூல்களையோ பார்க்க நேரிடும்போது விவாதத்தை விளைவிக்கத் தொடங்குகின்றன. மேலும் தம்மதத்திற்கேற்ற புராணக்கதைகளைப்புகழ்ந்துமாணவர்களின் மனத்தில்புகுத்திவிடுவதினால் அம்மாணவர்கள் மூடநம்பிக்கையை மேற்கொண்டு இயற்கையுண்மைகளைகண்மூடித்தனமாய் கண்டிக்கவோ அன்றி மறுக்கவோ முற்பட்டு மூடர்களாகிறார்கள். குறிகேட்பது, சகுனம் கேட்பது, மாந்தரீகம், பேய் பிசாசுகளின் நம்பிக்கை முதலிய அறிவற்ற பழக்க வழக்கங்களை அறவேயொழிக்கவேண்டும். ஏனெனில் மாணவர்களை எதிர்கால நன்னிலைக்கற்றூண்களாக செய்வது நம்மைப்பொறுத்திருக்கிறது. 'நூலைப்போல் சேலை' என்றபடி நாம் எவ்வளவுக்கெவ்வளவு மூடநம்பிக்கையற்றும் விரிந்த நோக்கத்துடனுமிருக்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு நம்மிடம் பயிலும் மாணவர்களும் அறிவுடையவர்களாயிருப்பார்கள். தற்கால கல்வி எழுதப் படிக்கத்தெரிவதோடு மாணவர் தம் பிற்கால ஜீவியத்திற்கு உதவும் படியாக இருக்கவேண்டும். அவர்களுக்கு கல்விபோதிக்கும் நாம் முதலில் நமது அறிவைப்பெருக்கிக்கொள்ள வேண்டும்.

பள்ளிக்கூட நேரத்தில் நாம் ஆசிரியராயிருப்பினும் இதர நேரங்களில் நம்மை நாம் ஒரு மாணவனாகப்பாவித்துக்கொண்டு ஆராய்ச்சி அறிவையளிக்கும் அநேக நூல்களைப்படித்தல் வேண்டும். உலகியல் அறிவு ஏனையோரைவிட நமக்கு அதிகம் வேண்டுமென்பதை ஒவ்வொருவரும் அறிய வேண்டுவது அவசியமாகும், எனவே பத்திரிகைபடித்தல் வெகு முக்கியமாகும். சன்மார்க்க போதனையும் கிராமத்திற்கு ஏற்ற விவசாயம்போன்ற கைத்தொழில் முறைகளையும் போதிப்பதால் நமக்கு கிராமங்களில் மிகவும் கௌரவமளிக்கப்படுகிறது. கணிதம், வைத்தியம், வான சாஸ்திரம், பூமிசாஸ்திரம், இவைபோன்ற அறிவு வளர்ச்சிக்கு ஆதாரமான கல்விகளை நாம் கற்றுக்கொள்ளுவதோடு பிள்ளைகளுக்கும் கற்பிப்பது நலம். நமது தொண்டிற்கு வேண்டிய லக்ஷணம் இன் சொல்லும் பொறுமையும் சிறுவர்களின் மதிப்போக்கிற்கேற்ற சிறந்த குணங்களுமேயாம். பாட்மின்டன், டென்னிஸ் முதலிய நவீன நாகரீக விளையாட்டுகள் விளையாடுவது மிகச்சிறந்தது. இன்றையநிலைமையில் மற்றதேசங்கள் முன்னேறியிருக்கிறது. ஆனால் நம் நாடு க்ஷீணித்திருக்கிறது. காரணம் கல்வி வாசனையே அறியாதஜனங்கள்நம்நாட்டில் ஏராளமாகக்குவிந்திருக்கிறார்கள். ஆரம்பப்பாடசாலை ஏராளமாகஇன்னும் நிறுவி கட்டாயக்கல்விச்சட்டத்தை சிருஷ்டித்து 5 முதல் 12 வயதிற்குட்பட்டவர்கள் குறைந்தது 4-மணி நேரம் தினசரி படிக்கவேண்டுமென சட்டம் வகுத்தலவசியத்திலுமவசியமாகும். உயர்தரப்படிப்பு தற்போது அவ்வளவு அத்தியந்த அவசியமில்லை. நமது முன்னேற்றத்திற்கு தடைப்பட்டிருக்கு மார்க்கங்கள் திறக்கப்படவேண்டும்; நமது சங்கங்கள் தூங்கிக்கொண்டிருக்கின்றன. அவற்றை தட்டியெழுப்பி புத்துயிர் கொடுத்து நமக்கு வேண்டிய அதிக ஊதியத்திற்கும் கௌரவத்திற்கும் அவைகளைப் பாடுபடச் செய்யவேண்டும். ஆரம்ப ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் குன்றா ஊக்கத்துடனும் குறையா நம்பிக்கையுடனும், குலையாத்தைரியத்துடனும் நமது முன்னேற்றத்திற்காக பாடுபடவேண்டும். நமக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 30 (முப்பது) சம்பளம் கொடுக்கவேண்டுமென சிபார்சு செய்த நாம் கமிட்டியாரைப்போற்ற வேண்டும். இவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை அமுலுக்குக்கொண்டுவரவேண்டும். அத்துடன்நமது அறிவைப்பெருக்க நம் நாட்டில் குறிப்பிட்ட சில இடங்களில் நடைபெறும் மெட்ரிக்குலேஷன், அல்லது அதற்குச்சமமான பரீக்ஷைகட்கும் கேம்பிரிட்ஜ் லோக்கல், ஆக்ஸ் போர்டு லோக்கல், லண்டன் மெட்ரிக்குலேஷன், போன்ற பரீக்ஷைகட்கும் நாம் போய் படித்து வெற்றி பெற்றுத்திரும்பத்தக்க வசதிகளை அரசாங்கத்தார் செய்து கொடுத்து அனுமதிக்க பிரயாசைப்படவேண்டும். ஜில்லாவில் கல்வி பரப்பு நிமித்தம் ஏற்படுத்தப்பட்ட டிஸ்டிரிக்ட் எஜிகேஷனல் கௌன்ஸிலில் நம் சார்பில் சங்கங்களின் மூலம் 5 அல்லது 6 அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைக்கவேண்டும். நமது பிரதிநிதிகள் அங்கு இருந்தால் தான் நமது குறைகள் நிவர்த்திக்கப்படும். நாம் மற்றவர்களைப்போல் கௌரவிக்கப்படுவோம். பெரும்பாலும் நாம் கிராம ஜீவியர்களாயினமையால் கிராமக்கல்விக்கும் கிராம ஜீவியத்திற்கும் தொழிலிற்கும் சாதகமாயுள்ள பத்திரிகைகளையும் புத்தகங்களையும் படிக்கவேண்டும்; இறுதியாக யான்விரும்புவது யாதெனில் ஆசிரியத்தோழர்களே! உலகெங்கும் முன்னேற்றமடைந்து வருகிறது மேல்நாடுகளில் ஆரம்ப ஆசிரியர்கள் மிகவும் செல்வாக்குடனிருக்கிறார்கள். ஆகலான் இன்றே ஒவ்வொருவரும் நமது பெரும் சமூக முன்னேற்றத்திற்காக பாடுபட முன்வரல் வேண்டும்.

---

உங்கள் அறிவு இவ்வளவு கேடுற மதப்பித்தன்றோ காரணம். ஏமாற்றுக்காரர் (பார்ப்பனர்) நம்மை நம் அறிவைக்கொண்டு ஆய்ந்து பார்த்து ஒன்றைச்செய்வதற்கும் இடங்கொடாமல் நாஸ்திக நரகப்பூச்சாண்டி காண்பித்து ஏமாற்றிவிட்டார்கள். இஃதை யறிந்த அறிவுடையார் உங்கள்பாலிரக்கங்கொண்டு, நீங்கள் ஏமாறாதேயுங்கள், பயனுள்ள காரியங்களையே பார்த்துச் செய்யுங்கள் எனப்பரிந்து பேசினால் ஏன் நாய்போல் சீறிவிழுகிறீர்கள். நீங்கள் சுயமதிகெட்டு, மனிதனாய்ப் பிறந்தும் மாக்களாகவே மடிவோம் மன மடிகின்றீர்களே அதைக்கண்டு மனந்தாளாது மனுத்துரைப்பதற்காகவா எங்கள்மீது இவ்வளவு கோபம். இங்ஙனம் பல நூற்றுக்கணக்கான அறிவுச்சுடு உங்கட்கு அளிக்கலாமெனினும் குடி அரசு இன்னும் இடந்தராதென்றே இப்போது இத்துடன்நிறுத்துகின்றேன்.

என்னரும் ஆஸ்திக நண்பர்களே! வார்த்தைக்கண்டு ஆத்திரங்கொள்ளாமல் பொறுமையுடனிருந்து ஆழ்ந்து யோசியுங்கள் என அன்பாய் வேண்டுகின்றேன்.

---

## திருநெல்வேலி ஜில்லா 5வது சுயமரியாதை மகாநாடு

திருநெல்வேலிஜில்லா 5வது சுயமரியாதை மகாநாட்டை வருகிற ஜூலைமாதத்தில்' திருச்செந்தூர் தாலுக்கா' சாத்தன்குளத்தில்' அதிவிமரிசையாய் நடத்தவேண்டிய வேலைகள்நடைபெற்று வருகின்றன. (ஒருநிருபர்)

## நன்கொடை

சேலம் செவ்வாய்ப்பேட்டை ஜவுளி வியாபாரி' திரு. அ'கொ.நாராயணசாமி அவர்களின்குமாரர் திரு.மருதாசலத்திற்கு நடைபெற்ற திருமணத்தை முன்னிட்டு நமக்கு 1 ரூபாய் நன்கொடை அனுப்பப்பட்டதை வந்தனத்துடன் பெற்றுக் கொண்டோம்

(ப-ர்)

# "குடி அரசு" சொல்லுவது குற்றமா?

(திருமங்கலம்—மணிமாறன்)

சதா காங்கிரசைக் குறைகூறிக் கொண்டிருப்பதையே தனது வேலையாகக் கொணடுவிட்டது என்று குடிஅரசின்மேல் குற்றம் சொல்லுகிறுர்கள். சமூகவேலை செய்யாமல் காங்கிரசைத்தாக்கும் செய்திகளே குடிஅரசு பூராவும் காணப்படுகிறதென்றும் அப்பத்திரிகை தேசத்துரோகி, என்றும் காட்டிக்கொடுக்கும் கங்காணி என்றும் சில ஜனங்கள் பேசிக்கொள்ளுகிறுர்கள்- சிலரது முகம் குடிஅரசைக்கண்டாலும் கோணிக்கொள்ளுகிறது.

நாம் சொல்வதென்ன? குடிஅரசில் சுமார் நான்கு பக்கங்கள் விளம்பரம்போக பதினுறு பக்கங்கள் மட்டுமே தேசியத்தைக்குறைகூறுகிறது? காங்கிரசின் பித்தலாட்டத்தைப்பற்றியும் அவர்களின் காலிப்பிரசாரத்தைப்பற்றியும் அந்த இருபது பக்கம் பூராவும் எழுதினுலும் அதுவும் போதாதென்பதே நமது அபிப்பிராயமாகும், ஏன் சுயமரியாதை இயக்கம் காங்கிரசை முழுவேகத்துடன் தாக்குகிறது என்று கேள்விபிறக்கலாம்.

சாதி மதபேதங்களைஒழித்து, சாமி கடவுள் கோவில் திருவிழாவை அழித்து, பார்ப்பனீயம் மூடநம்பிக்கைகளையும் ஒழித்து, இந்தியர் யாவரும் சரிநிகர்சமானமாய் சகோதரர்களாய், சமதர்ம எண்ணமுடையவர்களாய் ஆக்கவேண்டுமென்பதே சுயமரியாதையின் நோக்கம். இதற்கு நேர்மாருகத்தேசிய காங்கிரசானது பிரசாரம் செய்துகொண்டும் சுயமரியாதைவேகத்தால் அடிபட்டு மாய்ந்த சாதி சமயம் புராணம் சாமி முதலியவைகளை தூக்கிவைத்து அழுதுகொண்டு அவைகளுககு மீண்டும் உயிர் கொடுப்பதற்கு பாமரர்களைச் சேர்த்துக்கொண்டுமிருந்தால் அத்தேசியத்தை சுயமரியாதையானது ஒழிக்க முற்படாமல் என் செய்யும்?

பெயருக்கு மட்டும் 'நாங்கள் தேசவிடுதலைக்கு உழைப்பவர்கள்' என்று சொல்லிக்கொண்டு காரியத்திலோ பார்ப்பனீயத்தை வளர்த்துக்கொண்டும் போனபோன விடங்களில் புராணப்பிரசங்கமும் செய்வதோடு, சுயமரியாதை இயக்கத்தை ஏசிக்கொண்டும் சதா கடவுள் செயல் பாபபுண்ணியம் மறுஜென்மப் பித்தலாட்டப் பிரசங்கம்செய்துகொண்டுமிருந்தால் சுயமரியாதைக்காரர்கள் அவர் பிரசாரத்தைப்பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? எதை எதை சுயமரியாதை அழிக்கவேண்டுமென்று சொல்லுகிறதோ அதையெல்லாம் காங்கிரஸ் காப்பாற்றக்கச்சை கட்டுகிறதே! வம்புக்குவந்து வழிமறிக்கும் காங்கிரசை வாரித்தூக்கி எரியவே சுயமரியாதை இயக்கமும் கச்சைகட்டுகிறது

ஒரு தேசியவீரர் தேசவிடுதலை வாங்கப்போன இடத்தில் கடவுள் பிரசங்கம் செயதுவிட்டுவந்தார். இன்னெருவர் 'களிமண், 'கங்கை ஜல' மகத்துவத்தை ஓதிவந்தார். இப்படியாக வைதீகப்பிரசாரம் செய்யும் தேசியக்கூட்டத்தை சுயமரியாதை இயக்கம் ஆதரிக்கவா செய்யும்? ஒரு தேசியவீரர் தன் தகப்பனுரை மோக்ஷலோகத்திற்கு அனுப்புவதற்காக கங்கைக்கரை சென்று எலும்புகரைத்தார்! மோக்ஷலோகப்பித்துக்கொண்ட வீரருக்கு 'பொதுவுடமைவீரர்' பட்டமாம்! இன்னும்பலர் சதா கடவுள் செயல் என்றும், ராமராஜ்யம்வேண்டும் என்றும், மறுஜென்மம் உண்டு என்றும் வருணபேதம் வேண்டும் என்றும் பலபெண்களைக் கெடுத்த காமியான கிருஷ்ணனைப் புகழ்ந்துகொண்டும் ஆரியக்கொடுங்கோல் ராஜ்யம் நடத்தியவனும் தமிழர்களை ஈவு இரக்கமன்னியில் கொன்றும் பெண்களை மானபங்கம் செய்தும்சூத்திரனைச்கொன்றும், பல கொடுமை செய்த, நீதியற்ற ராமனின் ராஜிய முறை போல் இந்தியாவையும் நடத்த இச்சை கொண்டு பிரசாரம் செய்து வந்தால், அக்கூட்டத்தாரையும் அவர்கள் சபையையும் ஒழிக்காமல் சுயமரியாதைச் சமதர்ம இயக்கம் சும்மா விடுமா?

எனவே எல்லா வகையிலும் சுயமரியாதைக்கு எதிர்ப்பிரசாரம் செய்யும் தேசியக் கூட்டத்தாரையும், அவர்கள் தேசிய காங்கிரசையும் குறை கூறுவதில் என்ன குற்றமிருக்கிறது! தேசிய சபையார் செய்யும் பித்தலாட்டத்தையும், சூழ்ச்சியையும் அட்டூழியங்களையும் எடுத்துச் சொன்னுல் "குடி அரசை" என் கோபிக்கிறீர்கள்! உண்மை சொல்லும் "குடி அரசி"ன் மேல் குற்றமில்லை. ஆனுல் குடி அரசைக் குற்றம் சொல்பவர்களின் மூளையில் குற்றமிருக்கும்என்பதுமட்டும்உறுதி.

ஆகவே தேசீய மென்ற வைதீக சபையை, காங்கிரஸ் என்ற பார்ப்பனீயக் கோட்டையை அழிக்கப்பிரசாரம் செய்யுங்கள். எற்கனவே அரசாங்கத்தாரால் காங்கிரசிற்கு "மரண யோகம்" ஆரம்பமாகி விட்டது! நாமும் வைதிக காங்கிரஸ்ஒழிக! ஒழிக! சமதர்மம் ஓங்குக! ஓங்குக! என முரசொலிப்போம்! வெள்ளைக்கார அரசாங்கத்தைப்போக்குமுன், கொள்ளைக்கூட்டக்காங்கிரசை போக்குவோம்! இது சொன்னுல்குற்றமா?

---

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

லால் நால் வகைப் பட்டார்களே யல்லாமல் அவர்களுள்ளும் உண்ணல் கலத்தல்களில் ஏதும் வேற்றுமை எற்படட்டதில்லை. சூத்திரன் சமையல் செய்த உணவைப் பார்ப்பனன் அருந்தும் முறை பழைய கற்ப சூத்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது. வாயு புராணத்தில், கிருதயுகத்தில் சாதிகள் இல்லை என்றும் பிறகு தொழில்களுக்கு எற்ப மக்கள் நான்காகப் பிரித்தார்களென்றும் சொல்லப் பட்டிருக்கிறது. வைதீகர்கள் ஐந்தாம் வேதமாகக் கொண்டுள்ள மகா பாரதம் சாந்தி பருவத்தின் கண் மேற் கூறிய நால் வகை சாதியாரில் ஒழுக்கத்தால் மிக்கவரே உயர்ந்த சாதியாரெனவும். ஒழுக்கமில்லாதவரே தாழ்ந்த சாதியாரெனவும் சொல்லப்பட்டிருக்கிறது. அக்காலங்களில் உண்மை பேசுதலே மிகச்சிறந்த ஒழுக்கமாகவும், அதனையுடையோரே பிராமணராகவுங்கருதப்பட்டார்.

ஆகையால் பிறப்பளவிற் சாதி உயர்வு கொள்ளுதல், வேதங்கள், மிருதிகள், இதிகாசங்கள், புராணங்கள், முதலிய எந்த நூலுக்கும் உடன்பாடு இல்லை என்பது நன்கு பெறுரும்.

இனி வைதிகர்கள் சொல்லுகிறபடி சைவவைணவ நூல்களிலாவது சாதியுண்டா என்பதைப்பற்றி ஆராய்வோம்.

சைவ வைணவ ஆசிரியராகக்கொள்ளப்பட்ட, எல்லாரிலும் முற்பட்ட காலத்தவராகி அந்தணர் குடிபிறந்த மாணிக்க வாசகர்.

"சாதிகுலம் பிறப்பென்றும் சுழிப்பட்டுத்தடுமாறும் ஆதமிலிநாயேனை அல்லலறுத்தாட்கொண்டு பேதைகுணம் பிறருருவம் யான் எனதென் உரையாய்த்துக்கோதில் அமுது ஆனைக்குலாவுதில்லை கண்டேனே"

என்று திருவாசகத்தில் பாடி இருப்பதை நம் வைதிகர்கள் அறிந்தது தானே.

"சாத்திரம்பலபேசுஞ்சழக்கர்காள்
கோத்திரமுங்குலமுங் கொண்டு
என் செய்வீர்"

என்று எழுந்த நாயனுர் உரையை நோக்குமின்

"கோலும் புல்லும் ஒருகையிற்
கூச்சமும்
தோலும்பூண்டு துயரம்
உற்று என்பயன்"

என்று அப்பர் பார்ப்பனரையே பிறப்பளவில் உயர்ந்தவராகக்கொள்ளாத போது, மற்ற பார்ப்பனக் கூலிகளையும், (Imitation) பார்ப்பனர்களாகிய கோமுட்டியார், தட்டார், தச்சர், கன்னுர், கம்மாளர், முதலியவர்களையும் உயர்த்துதல் எங்ஙனம் பொருந்தும். மேற்கூறியவர்கள் பூநூல் அணிவதால் தாங்கள் மற்றவர்களை விட உயர்ந்தவர்களென்று நினைத்துக்கொண்டு இருக்கிறுர்கள்

அந்தணரான அப்பூதி, சைவவேளாரான திருநாவுக்கரசருடன் உடனிருந்து உண்ணும்படி நாங்களா சொல்லிக்கொடுத்தோம்? இல்லையே? அந்தணரான திருஞானசம்பந்தர் பாணச்சாதியிற்பிறந்த திரு நீலகண்டயாழ்ப்பாணரையும் அவர்மனைவியாரையும் எப்போதும் தம்முடனேயே வைத்திருந்ததோடு பார்ப்பனரான திருநீலநக்கரது திருமாளிகைக்குச்சென்றபோது அவரோடு ஒருங்கிருந்து உண்டதாகவும், தூய தாய் எண்ணிய வேள்வி மேடையிலே இடங்கொடுத்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறதே, இதற்கு வைதீகர்கள் என்ன சொல்லுகிறுர்களென்று கேட்கிறேன்? தங்கள் மதகுருவாக கொள்ளப்பட்ட சம்பந்தர் வழியை என் அவரது அடியவர்களாகிய இவர்கள் பின்பற்றக்கூடாது என்று கேட்கிறேம்.

(தொடரும்.)

---

## சுயமரியாதைத் திருமணம்.

திருநெல்வேலி டவுன் மருச்சுகட்டி பறையர் சேரியில் 18-5-32ந் தேதி சுயமரியாதைத் திருமணம் டாக்டர் எம். ஏ. நெட்டோ தலைமையின் கீழ் நடைபெற்றது. திரு. வி. எஸ் எஸ்; ஷண்முகம் அவர்களும் திருமதி கோமதியம்மாளவர்களும் மணஞ் செய்து கொண்டார்கள். திருமணம் எவ்வித சடங்கின்றியும் மூன்று நிமிடத்திற்குள் நிறை வேறியது. அதன் பின்னர் தனியாக நிறுவப்பெற்றிருந்த பந்தலில் டாக்டர் எம். ஏ. நெட்டோ தலைமையில் பொதுக்கூட்ட மொன்று நடைபெற்றது. சாவடி திரு. கூத்த நயினுர் பிள்ளையவர்கள் ஆதிதிராவிடர்கள் முன்னேற்ற வழியைப் பற்றி சிறிது நேரம் சொற்பொழிவாற்றினுர். அதன் பிறகு திருநெல்வேலி ஜில்லா சுயமரியாதை இளைஞர் சங்கத்தின் காரியதரிசி திரு. எஸ். குற்றுலலிங்கம், நடை பெற்ற திருமணம் எவ்வித சடங்கின்றியும் சீர்திருத்த முறையில் நடை பெற்றதைக் கண்டு மகிழ்ச்சியுறுவதாயும் சீர்திருத்த திருமணத்தின் நன்மைகள் என்பது பற்றியும் சிறிது நேரம் பேசினுர்.

பின்னர், ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த திருவாளர்கள் அழகர்சாமி, மோசஸ் ஆகிய ஆகிய இருவரும் ஆதிதிராவிட சமூகத்தார் என்னென்ன சீர்திருத்தங்களைக் கைக்கொள்ள வேண்டுமென்பது பற்றி இன்னும் பல அரிய விஷயங்களைப் பற்றியும் பிறகு மணமக்களுக்கு சிலர் பரிசுகள் வழங்கினுர்கள். தலைவர் டாக்டர் நெட்டோ முடிவுரைக்குப் பின்னர் வந்தனுேபசாரமும் சமபந்தி போஜனமும் நடை பெற்றது.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

துப் பார்ப்பாரே யாமாகில், தான் கண்ட சம்பவங்களில் யாதொரு விசேடமுமில்லை என்று தெளிவு பெறக்கூடும். ஏமாறவேண்டுமானாலும், திடுக்கிடவேண்டுமானாலும், எதையுங்கண்டு திடுக்கிடலாம். "மிரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்று ஓர் பழமொழியுண்டு. இதனை, தான் கண்டு மிரண்ட சம்பவங்கள் சம்பந்தமாக நமது நிருபரைக் கவனிக்கும்படி கோருகிறோம்.

நெருப்பு மிதிக்கும் திருவிழா வென பல இடங்களில் தென்னாட்டில் காணலாம்- பாமர ஜனங்கள் இதனைக்கண்டுஅம்மனுடைய மகத்துவமெனச் சொல்லிக்கொள்கின்றார்கள். 40, 50 வருடங்களுக்கு முந்தி, இரண்டொருஇந்த சம்பவங்களை நாமும் பார்த்துமிருக்கின்றோம். இதை சாதாரணமாக நாட்டுக் குடிமக்கள் இவ்வாறாகச் செய்வதுண்டு. நெருப்பை உண்டாக்கி, அது சாம்பல் படர்ந்த சமையத்தில் அதன் மேல் ஓடுகின்றார்கள். கொதிக்கும் தரை மேல் நாமும் ஓடலாம். நடந்து சென்றால் தான், சுடுகை தெரியும். இன்னொரு சமாதானமும் (Explanation) உண்டு. அது யாதெனில் நெருப்பை மிதிக்கப் போகின்றவர்கள், அந்நாள் முழுதும்! கால்களைத் தண்ணீரில் நனைத்துக் கொண்டிருப்பார்களாம்! மூன்றாவதாக நெருப்பை மிதிக்கின்றவர்களின் கால்களின் அடிபாகத்தைப் பார்த்தால் கொப்பளங்கள் தோன்றியிருக்கும். இதனை பரிசோதிக்காத பாமர மக்கள், "கடவுளாரும்", "அம்மனது மகத்துவ"மென்று பிதற்றுகின்றார்கள். எந்த விவேகியும் இதைக் கண்டு திடுக்கிட அவசியமில்லை. ஏமாறாமல் விசாரித்து அறிவதே நமது கடமை. நெருப்பின் மேல் நடப்பது கடவுளருளானால் நெருப்புப்பட்டு சாகும் குழந்தைகளுக்கு ஏன் அந்த "சிவனருள்" இல்லாமல் போகின்றதென்று கேட்கின்றோம்? குளிர்ச்சி செய்யும் பல பச்சை இலைச்சாற்றைப்பிழிந்து காலில் தடவிக்கொள்வதாகவும் கேள்வி. ஜால வித்தைக்காரர்கள் பெரியதோர் நெருப்புக்கட்டியை கையிலேந்தி, சில நிமிஷம் வைத்துக்கொண்டிருப்பதை நாம் பார்த்து இருக்கின்றோம். அதனை "ஈசனருள்" என்று அவர்கள் சொல்வதில்லை. மந்திரத்தால் மாங்காய் விழா விடினும் தந்திரத்தால் விழச் செய்யலாமென்பதை இந்த சந்தர்ப்பத்தில் நமது நண்பரையும் அவரைப்போன்று மயங்குகின்றவர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

கழுத்தில் வைத்த தேங்காய் விழாமல், அது தண்டனிடுவதைக் கண்டு எந்த சக்தியால் அது நிகழ்கின்றதென்று நமது நிருபர் கேட்கின்றார்? பல்லி முதலிய பூச்சி சுவரின் மேல் தனது கால்கள் எதையும் பிடித்துக்கொள்ளாமல் படிக்கே எப்படி உயர நடந்து போகின்றதென்று கேட்கின்றோம்? காற்று வெளிப்படுத்தப் பட்ட பாத்திரம் சுவரில் ஒட்டிக்கொள்வது எந்த சக்தியால் என்று கேட்கின்றோம். அதே பிரகாரம் கழுத்தில் வைப்பதற்கு முன், அந்த தேங்காயிலுள்ள காற்றைவெளிபடச்செய்து(create a vacuum) கழுத்தின் மேலே ஏன் வைத்திருக்கக் கூடாதென கேட்கின்றோம்? தேங்காயைக் கழுத்தில் வைப்பதற்கு முந்தி, அதனை நமது நிருபர் பரிட்சித்துப் பார்த்தாராவெனக் கேட்கின்றோம்?

இவ்விதமாக காற்றில்லாமற் செய்து தேங்காயை ஒட்ட வைத்தலும் இருக்கலாம். அல்லது கழுத்திலுள்ளசதையைக்கொண்டு பிடித்து வைத்திருந்தாலும் இருக்கலாம். நெற்றிச்சதையைக் கொண்டு, பெரும் புத்தகமொன்றைத் தூக்குவது போல், கழுத்தின் சதையைக்கொண்டு தேங்காயை கழுத்திலிருந்து விழாமல் செய்வது லேசே! நமது நிருபரை ஒன்று கேட்கின்றோம். அடிதண்டம் தேங்காயுடன் போடுவோனை நிமிரச்சொல்லி அவன் கழுத்தைப் பரிசோதித்தாரா வெனக்கேட்கின்றோம்? தோற்றங்களின் (appearances or phenamena) காரணம் தெரியும்வரை, "கடவுளர்களும்" "தேவதைகளும்" "சக்திகளும்" கற்பிப்பது ஸகஜம். காரணம் தெரிந்துகொண்ட மாத்திரத்தில் அந்த "தேவதைகள்" பறந்தோடிப்போகின்றதும் ஸகஜம். ஊசி குத்திக்கொள்ளும் "மகிமை"யின் வரலாற்றை முன் "குடி அரசில்" செய்கோன் நிருபருக்குக் கொடுத்த சமாதானத்தை நமது கோலாலம்பூர் நிருபர் கவனித்திருப்பாரென எண்ணுகின்றோம். அந்த சம்பவத்திலொன்றில், அந்த "சாமியார்" விஷமுண்டு இறந்ததாகக் கேள்விப்பட்டோம். அவர் யோகப்பியாசம், தன்னைக்காப்பாறாமல் போனதைக் குறித்து விசனிக்கின்றோம். ஊசியை விழுங்குவதும், ஊசியை போத்திக்கோள்வதும் வியர்த்த தோந்திரவேயோழிய, வேறொன்றில்லை. இதனால் வரும் பயன் கிஞ்சித்தே. இதற்காக உடலை வருத்துவதென்றால் பைத்தியகாரத்தனமென்றே கூற வேண்டும்.

மற்றும் பல பைத்தியக்காரர்கள் செய்யும் செயல்களைக்கண்டு மயங்கும் பாமர மக்களுக்கு கணக்கேயில்லை. சென்னையில் சில வருடங்களுக்கு முந்தி, முதுகில் சங்கிலிகளைக்குத்திக்கொண்டு மூன்று தேர்களை இழுத்துச் சென்றார் ஒருவர். தெருக்களில் வேடிக்கை பார்த்த பயனைத்தவிர மற்ற எந்த விதப்பயனும், அவருக்காகிலும், விளையவில்லை. இதை விட கொடூரமான காரியமாகிய செடில் குத்தி ஆடல், அதாவது, முதுகில் சங்கிலியால் குத்திக்கொண்டு அதன் மூலமாக கம்பத்தில் கட்டுண்டு, அதனை சுற்றிவரும் காட்சி மிகவும் கொடுமையானதாகும். நமது அதிர்ஷ்ட வசமாக ஆங்கிலேயர் இந்த கொடூர பழக்கத்தினை தடுத்து விட்டார்கள். இதில் யாதொரு மகிமையுமில்லை. நாயையும், நரியையும்கூட அவ்விதமாக தொங்கவிடலாம்! முதுகின் தோலை இழுத்து ஊசியைக் குத்தினால், அவ்வளவு வருத்தமிராது. இதுவும் பைத்தியகார காரியங்களில் முதல் நம்பர். இந்த வேஷங்கள் யாவும் உடலைவருத்தி, தெய்வ அருள் பெறலாமென்ற மூட பக்தியால் விளையும் அனர்த்தங்களென அறிக. இத்தியாதி காரியங்களில் எந்த பக்தியுமில்லை சக்தியுமில்லை. அனேக மூடப் பழக்கங்களில் இதுவும் ஒன்று. இதனைக்கண்டு மயங்குவதும், தயங்குவதும், திடுக்கிடுவதும், மனத்தின் மருளேயொழிய, தெளிவு ஆகா. கட்டையைக்கண்டு கள்ளனெனத் தயங்குவதும் இந்த மன மருட்சியேயாகும். இவ்விரண்டும் நமது மனமயக்கே. உள்ளதை உள்ளபடி உணர்ந்தால், எவ்வித கடவுளருக்கும் தெய்வங்களுக்கும், சக்திகளுக்கும், மகத்துவங்களுக்கும், இடமிரா. மடமை நிறைந்துள்ள இவ்வுலகில் மன சங்கற்பங்களிலிருந்து மீளுவதுதான் கஷ்டம். இவ்வித மன மயக்கை ஒழிக்க ஒரேவழியுண்டு. அதாவது மெஞ்ஞான வழியாகிய விசாரணையை எந்தக்காலத்திலும் கையாளவேண்டும்.

குறிப்பு:— சென்ற வாரம்கூடலூர் தாலூகாவைச் சேர்ந்த கொத்தட்டையில், நெருப்பு மிதிக்கும் திருவிழா நடந்ததாகவும், அதில் கலந்து கொண்ட சிறுவர்கள், நெருப்பின் மேல் நடந்தோடும்காலை, ஒருவர் மேல் ஒருவர் விழுந்து, நெருப்பால் தேகம், முகம் தகிக்கப்பட்டதாகவும் "இந்து" பத்திரிகா நிருபர் எழுதுகின்றார். இந்த அபாய சம்பவத்தில், நமது வாசகர்கள் கவனிக்க வேண்டிய தென்னவெனில், நெருப்பின் பேரில் ஓடும்போது கால்களைத் தகிக்காத "தெய்வீகம்" முகங்களையும், உடல்களையும் ஏன் கொளுத்திய தென்பதே? முகங்களையும், உடல்களையும் நெருப்பை சகிக்க, ஏதோர் பக்குவம் செய்யாத தோஷத்தால், நெருப்பினால் அவ்வுருப்புக்களை பற்றவைக்க நேரிட்ட தென்பது உள்ளங்கையில் நெல்லிக்கனிபோல் விளங்குகிறது. ஆதலின் எந்த "தெய்வீகமும்" நாம் செய்யும் பக்குவத்தில் இருக்கிறது.

இன்னொரு விஷயம் நமது சுயமரியாதைத் தோழர்கள் கவனிக்கவேண்டிய தென்னவெனில், அந்த கொத்தட்டையில் ஒருவிபரீத திருவிழா நடந்தேறி வருகிறது. அதன் பெயர் தாலி அறுக்கும் திருவிழாவாம். அதில் ஆயிரக்கணக்கான ஆண்மக்கள், பெண்மக்களைப்போல் உடுத்திக்கொண்டு வக்கணையோடு அழுகின்றார்களாம்! அழுதுவிட்டு, தாலியை அறுத்துப் போடுகின்றார்களாம்!! இது மகா பாரதத்தில் வழங்கும் அரவான் கதை விஷயமாகவாம்!!! இதென்ன விபரீதம!!!! இந்த அகோர நடத்தையை நிறுத்துமாறு, நமது சுயமரியாதைத் தோழர்கள் நமது பாமர மக்களின் அறியாமையை நீக்க முயல்வார்களாக! ரஷ்ய நாட்டில், ஒவ்வொரு சிறுவனும் தனது நாட்டின் ஒருவருடைய அக்கியானத்தை வருஷமொன்றில் போக்கக் கடமைப்பட்டுள்ளானாம்! இதனை நமது நாட்டு வாலிபத்தொண்டர்கள் கவனிப்பார்களாக!

---

## இளைஞர் சுயமரியாதைச் சங்க ஆண்டு விழா.

விருதுநகர் இளைஞர் சுயமரியாதைச் சங்கத்தின் முதலாவது ஆண்டுவிழா 15-5-32 ல் மதுரை வழக்கறிஞர், தோழர். எஸ். லக்ஷிமிரதன் பாரதி. எம், ஏ. பி, எல். அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் காரியதரிசியால் வருடாந்தர அறிக்கை வாசிக்கப்பட்டது. பின் தலைவர் "இயக்கம்" "கட்சி" என்பவைகள் என்ன? என்பது பற்றிப் பேசினார்.

(ஒருநிருபர்)

---

## தேசியப்பார்ப்பனரில் பூணூலை அறுத்தவர் எத்தனை பேர்?

## Read the "SUPERSTITION OF KHADI"

A Discussion

By

S. Ramanathan

Pattabhi Sitharamyya

& N. S. Varadachari

in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

*Apply to:—*

Manager "Kudi Arasu" Erode.



## காந்தியின் உண்மைத் தோற்றம்.

திரு. காந்தி பரோடா சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபோது, பொதுமக்கள் அளித்த் வறவேற்புக்கு பதிலளிக்குமுகத்தான் தனது சுயராஜிய திட்டத்தைப்பற்றியும், கட்குடி, கதர், மறியல் முதலியன பற்றிதான் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைப்பற்றியும் செய்த உபந்யாசத்தின் ஆராய்ச்சியாகும்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கத்தை புத்தகமாக்கி வெளியிட்டிருக்கிறோம். இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையையும், காந்தியார் கோறும் ராமராஜிய வண்டவாளமும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்பகட்டும் கண்டு தெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0

தபால் சிலவு 0—6—0

கிடைக்குமிடம்:—

மானேஜர்,

குடி அரசு, ஈரோடு.



## "சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு, இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்வழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.

இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.



## சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1330ம்ஷு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L,

அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.



## ANANGARANGA BATIKA.

Safe and sure remedy against SEXUAL DISABILITY & IMPOTENCY. Increase RETAINTIVE POWER and insure PLEASURE FOR ONE HOUR. Even an OLD ONE CAN FULLY ENJOY THE HEAVENLY BLISS derived from sexual inter course. COMPLETE SATISFACTION guaranteed. Money will be refunded in case of failure Price for 40 Pills Rs. 5 only Sample Phial of 20 Pills Rs 3 only. Please write in English To:

*SAILASRAM (K)*

*Chandanpur (Khulna)*

*E. B R.*



## "சன்மார்க்கன்"

தமிழ்மாதப்பத்திரிகை.

பல அரிய கட்டுரைகளுடன் கைவல்யம்கட்டுரையும் தொடர்ச்சியாக வருகின்றது.

ஆண்டுசந்தா.

உள்நாடு ரூ. 1—0—0.

வெளிநாடு ரூ. 1—8—0.

ஆசிரியர்: —

சுவாமி சிவநேசம்,

"சன்மார்க்கன்" பழனி.



## "செவிடு"

மற்றெல்லாவித காது நோய்களையும் குணப்படுத்துவது "கரமத்எண்ணெயே" ஒரு பாட்டில் வாங்கி உபயோகித்துப் பாருங்கள். பலனுக்கு உத்திரவாதம்.

1 பாட்டல் எண்ணெய் விலை ரூபாய் 1—4—0.

1 பாட்டில் டிராப்பர் உள்பட விலை ரூபாய் 1—8—0.

3 பாட்டல் வாங்குபவர்களுக்கு தபால் செலவு இனம். இங்கிலீஷில் விண்ணப்பிக்கவும்.

Ballabha & Sons

Pilibhit R. K. Ry., U. P.



உங்கள்

## கண்ணையும் காதையும்

கவனித்துக் கொள்ளுங்கள்

## பூவிழல் !!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

## செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works

Beadon St. Calcutta.



## சுயராஜியம் யாருக்கு?

தோழர் ம.சிங்காரவேலு பி.எ., பி. எல்., அவர்களால் எழுதியது. இதில் ஜாதிமதக்கொடுமை, சமூக இன்னல்கள், அரசியல், பொருளாதாரக்கொடுமைகள், காங்கிரசின் போலி வேஷம், தீண்டாமையொழிப்பதின் அவசியம் முதலியனபற்றி இனிய, எளிய நடையில் வெகு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

பிரதி 1க்கு விலை 0—1—0.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.



## தேசியப்பார்ப்பனரில் பூணூலை அறுத்தவர் எத்தனை பேர்?

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.
இதன் விலை அணா. 0—2—0

## சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும்.
இதன் விலை அணா. 0—2—0

## சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.
இதன் விலை அணா. 0—2—0.

## சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.
இதன் விலை அணா 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.
இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.
இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.
இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.
இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.
இதன் விலை அணா 0 2—0

## கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.
இதன் விலை அணா 0—2—0

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.